பக்கங்கள் : பதினெட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 21 வெள்ளிக்கிழமை (07.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 315

### புலிகள் தமது கருத்தை மக்கள் மீது திணிக்கமாட்டார்கள்

# யாருக்கு வாக்களிப்பது என்பதை தமிழர் சுதந்திரமாக முடிவுசெய்வர்!

## தமிழ்ச்செல்வன் நேற்றுத் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஒக்ரோபர் 7

ஜனாதிபதித் தேர்தலில் தாங்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதைத் தமிழர்கள் தாங்களே சுதந்திரமாகத் தீர்மானிப்பார்கள். அந்த விடயத்தில் எங்கள் கருத்துகளை எங்களுடைய மக்கள் மீது திணிக்க நாம் விரும்பவில்லை.

- இப்படித் தெரிவித்திருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

நேற்று கிளிநொச்சியில் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரையும், அவரது குழுவினரையும் சந்தித்துப் பேசிய பின்னர், செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த [illegible]செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து விசேட ஹெலிமூலம் நேற்றுக் காலை 9.45 மணிக்கு கிளிநொச்சிக்கு வந்துசேர்ந்தார் நோர்வேத் தூதர்.

தமிழ்ச்செல்வனுக்கும் அவருக்கும் இடையிலான பேச்சுகள் 10.15 மணிக்கு ஆரம்பமாகின. 11.45 மணிக்கு பேச்சுகள் முடிவடைந்தன.

இந்தப் பேச்சுகளில் தமிழ்ச்செல்வனுக்கு உதவியாக புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் பங்குபற்றினர்.

பேச்சுகளின் பின்னர் பத்திரிகையாளர்களுக்கு தமிழ்ச்செல்வன் வழங்கிய பேட்டியின் விவரம் வருமாறு:-

கேள்வி:- இன்றைய பேச்சுகள் குறித்து....?

பதில்:- யுத்த நிறுத்த சூழலுக்கு ஏற்பட்

(02 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதித் தேர்தல்: வேட்பு மனு இன்று ஏற்பு

கொழும்பு,ஒக்.7

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இன்று தாக்கல் செய்யப்படவுள்ளன.

இதனால் தலைநகரின் பிரதான கேந்திர நிலையங்கள் அனைத்திலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படும் தினமான இன்று காலை எட்டு மணி முதல்

(18 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலையில் கிரனேட் வீச்சு

திருகோணமலை, ஒக்.7

திருகோணமலை நகரில் நேற்றிரவு இரு கிரனேட் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் இரு படையினரும் பொதுமகன் ஒருவரும் காயமடைந்தனர்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனையில் 11 பேர் குண்டுவெடிப்பில் படுகாயம்!

### இராணுவத்தினரை இலக்குவைத்து நேற்று இரு தாக்குதல்கள்

கொழும்பு,ஒக்.7

மட்டக்களப்பு, வாழைச்சேனையில் இராணுவத்தினரை இலக்குவைத்து இரு வேறு கிரனேட் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இதில் தமிழர், முஸ்லிம்கள் என 11 பேர் காயமடைந்தனர்.

வாழைச்சேனை விபுலானந்தா சந்திக்கு அருகில் நேற்று நண்பகல் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் பதினொரு பேரும் காயமடைந்தனர்.

வாழைச்சேனை கடைத்தெரு வழியாகச் சென்றுகொண்டிருந்த இராணுவ பவுஸர் ஒன்றின்மீது இனந்தெரியாத நபர்களால் கைக்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் குண்டுவெடிப்பால் சுக்குநூறானது வான்; இருவர் காயம்!

### அமைச்சர் டக்ளஸின் செயலாளர் அருந்தப்பு



2839 என்ற இலக்கமுடைய இந்த வானில் இந்தக் குண்டு வெடித்துள்ளது.

கொழும்பு,ஒக்.7

வெள்ளவத்தை நெல்ஸன் பிளேஸில் - 'தினமுரசு' பத்திரிகை அலுவலகத்துக்கு அருகில் - நேற்றுக்காலை 7.45 மணிக்கு இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தினால் இருவர் காயமடைந்தனர். இந்துசமய விவகார அமைச்சுக்குச்சொந்தமான வாகனமொன்று சுக்குநூறாகியது.

நெல்ஸன் பிளேஸில், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் பிரத்தியேகச் செயலாளர் அந்தோனிப்பிள்ளை ஜெயராஜின் இல்லம் உள்ளது. நேற்றுக் காலை அலுவலகம் செல்வதற்காக டபிள்யூ.பி. ஏறுவதற்கு அவர் தயாராகிக் கொண்டிருந்தபோது

(18 ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.கா. அமைச்சர்கள் நாளையே இராஜினாமா?

கொழும்பு,ஒக்.7

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தில் வகித்துவந்த அமைச்சு, பிரதியமைச்சுப் பொறுப்புகளுக்குப் புதியவர்களை நியமிக்கும் நடவடிக்கை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரை ஆதரிப்பதற்கு இ.தொ. காங்கிரஸ் எடுத்த தீர்மானத்தையடுத்து அக்கட்சியின் உறுப்பினர்கள் அரசாங்கத்தின் முக்கிய பதவிகளிலிருந்து இராஜினாமா செய்யவுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று நாடு திரும்பிய பின் இ.தொ.காவின் இராஜினாமாக் கடிதங்கள் அவரிடம் நாளை சமர்ப்பிக்கப்படவுள்ளன. இதுவரை பெருந்தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சு, இ.தொ.காவின் முத்து சிவலிங்கத்திடம் இருந்தது. அந்த அமைச்சுப் பொறுப்பு தற்போது கால்நடை அபிவிருத்தி அமைச்சர் சீ.பி.ரட்னாயக்கவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் சீ.பி.ரட்னாயக்க இந்த பொறுப்பை ஏற்கவுள்ளார் எனத் தெரிகிறது.

### வன்முறையை நிறுத்துமாறு புலிகளுக்கு அரசு செய்தியாம்!

கொழும்பு,ஒக்.7

வன்முறைகளை உடன் நிறுத்துமாறு நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு இலங்கை அரசு அறிவித்திருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதாரத்துறை அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா நேற்றுத்தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. கொழும்பிலிருக்கும் நோர்வே தூதுவர் வன்னிக்கு சென்றுள்ளமை குறித்து அப்போது செய்தியாளரொருவர் கேள்வியெழுப்பினார். அவ்வேளையிலேயே மேற்கண்டவாறு குறிப்

(18 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டமளிப்பு நேற்று சிறப்புற ஆரம்பம் இன்றும் தொடர்ந்து நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ்.பல்கலைக்கழக 24 ஆவது பட்டமளிப்பு விழாவின் முதல்நாள் நிகழ்வுகள் நேற்று சிறப்புற நடைபெற்றன. இரண்டாவது நாளான இன்றும் பட்டமளிப்பு நடை பெறும்.

முதல்நாள் நிகழ்வுகள் நேற்று 5 அமர்வுகளாக நடைபெற்றன. காலை 9 மணிக்கு ஆரம்பமான முதலாவது அமர்வில் யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள சேர்.பொன் இராமநாதனின் சிலைக்கு துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் மலர்மாலை அணிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பட்டம் பெறுபவர்கள் விழா மண்டபத்திற்கு அணிவகுத்துச் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து மங்களவாத்தியம், பட்டு, குடை, ஆலவட்டம் சகிதம் வேந்தர் பேராசிரியர் எம்.சிவசூரிய, துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்(18 ஆம் பக்கம் பார்க்க)

## சர்ச்சைக்குரியவரான குமாரி குரே தன் மீதே பெற்றோல் ஊற்றி தீ மூட்டித் தற்கொலை!

### ஹக்கீம் வீட்டுக்குள் சுவரேறிக் குதித்து நுழைந்து பின் கொளுத்தினார்

கொழும்பு,ஒக்.7

கொள்ளுப்பிட்டியில் நேற்று அதிகாலை தனக்குத்தானே தீமூட்டித் தற்கொலை செய்து கொள்ள எத்தனித்து கடும் எரிகாயங்களுக்குள்ளான, பிரபல அரசியல்வாதியொருவரின் மகளான குமாரி குரே சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுமாலை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

இவருடனேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமைத் தொடர்புபடுத்தி விஷமத்தனமான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

இவரது மரணம் தொடர்பாகக் கூறப்படுவதாவது:-

நேற்று அதிகாலை ஒரு மணியளவில்

# யாருக்கு வாக்களிப்பது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள நெருக்கடி குறித்துப் பேசினோம். அண்மைக்காலத்தில் எமது பிரதேசத்தில் இடம்பெற்றுவருகின்ற கொலைகள் பற்றியும், போராளிகள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் கொல்லப்படும் சம்பவங்கள் தீவிரமடைந்துள்ளமை பற்றியும் கலந்துரையாடினோம். இக்கொலைகளை நிறுத்த சம்பந்தப்பட்டவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையும், இதுவிடயத்தில் உடனடியாகக் கரிசனை காட்டவேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளோம்.

யுத்த நிறுத்தச் சூழலை - உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளை - பேணும் நடைமுறையை வலுப்படுத்த வேண்டும். அரசதரப்புடனும், படைத் தரப்புடனும் இதுபற்றி விரைவில் கலந்துரையாடி ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும் என்று நாங்கள் இன்று வலியுறுத்தியுள்ளோம்.

ஐரோப்பிய ஒன்றியம் சார்பாகப் பிரிட்டன் வெளியிட்ட அறிக்கை குறித்து எமது கவலையையும், கரிசனையையும் நோர்வே அனுசரணையாளர்களுக்கு எடுத்துக் கூறினோம்.

இலங்கைத் தீவில் அமைதித் தீர்வைக் கொண்டுவருவதற்கான இரு தரப்புகள் என்ற ரீதியில், அரசும் புலிகளும் சம அந்தஸ்து, சம அங்கீகாரத்துடன் செயற்படவேண்டும். இந்நிலைமையைப் பலவீனப்படுத்தும் வகையில் ஐரோப்பிய ஒன்றிய நடவடிக்கை அமைந்துவிடுமோ என்ற அச்சத்தை நாம் வெளிப்படுத்தினோம். இந்த அறிக்கையால் எமது மக்கள் மிகவும் கவலை கொண்டிருக்கிறார்கள். சர்வதேச சமூகத்தின்மீது அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை பலவீனமடைந்து போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்று நாம் நோர்வேயிடம் கேட்டுக்கொண்டோம்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் இதனைத் தெளிவுபடுத்தும்படி அனுசரணையாளர்களான நோர்வேயைக் கேட்டிருக்கிறோம்.

### பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து தொடர்ந்தும் வலியுறுத்து

**கேள்வி:** யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக அரசும் புலிகளும் நேரடிப் பேச்சை நடத்துவது குறித்து ஆராய்ந்தீர்களா?

**பதில்:** ஆம்! எமது நிலைப்பாட்டை மீளவும் உறுதிப்படுத்தியுள்ளோம். யுத்தநிறுத்த அமுலாக்கல் தொடர்பான பேச்சுகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளோம்.

இந்தவிடயம் தொடர்பாக எமது தலைமைப்பீடத்தின் முடிவில் எந்தவித மாற்றமும் இல்லை. யுத்த நிறுத்த சூழலைப் பாதுகாத்து அதைப் பலப்படுத்தும் நோக்கோடு உடனடியாக இந்தவிடயம் குறித்துப் பேசி முடிவுகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற எமது கரிசனையை மீளவும் வெளிப்படுத்தினோம். நோர்வேத் தூதர் கரிசனையோடு அதை எடுத்துச் செல்கிறார்.

**கேள்வி:** ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை தொடர்பாக நோர்வேத் தூதுவர் என்ன கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்?

**பதில்:** அண்மையில்நடந்த வெளிவிவகார அமைச்சரின் படுகொலையையும் இங்கு நடக்கும் சம்பவங்களையும் வைத்துக்கொண்டுதான் ஐரோப்பிய ஒன்றியம் இப்படியான முடிவை எடுத்திருக்கின்றது போல் தெரிகின்றது என்று அவர் குறிப்பிட்டார்.

அது தொடர்பாக, தெளிவான விளக்கத்தை நாங்கள் கொடுத்தோம்.

அதாவது, இந்த மூன்றரை வருடகாலத்தில், எமது பொறுப்பாளர்கள், போராளிகள் நூறு பேர்வரை கொல்லப்பட்டது மட்டுமன்றி, பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

யுத்த நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்படுவதை அச்சுறுத்தும் வகையில் பல நடவடிக்கைகள் அரசால் முன்னெடுக்கப்படுவதும், யுத்த நிறுத்த நடைமுறையில் ஏற்றுக்கொண்டபடி ஆயுதக் குழுக்களைச் செயலிழக்கப் பண்ணுவதைக் கருத்தில் எடுக்காமல் ஆயுதக் குழுக்களை மீண்டும் செயற்பட அரசு அனுமதித்ததும், அந்தக் குழுக்களைப் படைத்தரப்பு வைத்திருப்பதும் போன்ற குற்றச்சாட்டுகளைத் தெளிவுபடுத்தித் தெரிவித்தோம். ஆகவே, கதிர்காமரின் கொலையின் உண்மை நிலையை அறிந்துகொள்ளாமல் இலங்கை அரசின் ஒருதலைப் பட்சமான முறைப்பாடுகளையும் குற்றச்சாட்டுகளையும் மட்டும் நம்பிக்கொண்டு சர்வதேச சமூகம் இப்படியான முடிவுகளை எடுக்கக் கூடாது என்பதையும் தெரிவித்தோம்.

சமாதான முன்னெடுப்புகளிலும் அமைதி முயற்சிகளிலும் இரு தரப்புகள் இருக்கின்றன. ஒன்று தமிழர் தரப்பு. மற்றது சிங்களத் தரப்பு. இரு தரப்பின் நியாயங்களையும், நிலைப்பாடுகளையும் அவர்கள் உள்வாங்கிக் கொண்டுதான் முடிவு எடுப்பதே பொருத்தமானதாகும்.

சமதரப்பு அந்தஸ்துள்ள இரண்டு தரப்புகள் ஒன்று என்ற ரீதியில் - தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் - விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாடுகளை எடுத்துச் சொல்வதற்கான வழிமுறைப் பாதைகளை மூடிவிட்டு ஒருதலைப்பட்சமாக - ஒரு தரப்பு என்ற ரீதியில் - இலங்கை அரசு முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை - கருத்துகளை - ஏற்றுக்கொண்டு தீர்மானம் எடுப்பது என்பது எந்த வகையிலும் நியாயமற்றது. இதை நோர்வேக்கு சுட்டிக்காட்டியுள்ளோம். இதை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு அவர்கள் தெளிவுபடுத்துவார்கள் என நம்புகிறோம்.

சமாதான முன்னெடுப்பில் சம அந்தஸ்துப் பெற்ற இரு தரப்புகள் என்ற ரீதியில் இரு தரப்பினரதும் நியாயங்களையும் கேட்டு நியாயமான முடிவுகளை எடுப்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

### தமிழர் தரப்பை பலவீனப்படுத்தும் செயல்

**கேள்வி:** ஐரோப்பிய ஒன்றிய அறிக்கை சமாதான முயற்சிகளில் பின்னடைவை ஏற்படுத்தும் என்று கூறப்படுவது தொடர்பாக நோர்வேக்கு எடுத்துக் கூறுவீர்களா?

**பதில்:** ஆம்! அதுபற்றி அவர்களுக்குச் சுட்டிக்காட்டியிருந்தோம். நோர்வேயின் அனுசரணை முயற்சிகளை மட்டுமல்ல, அந்த அமைதி முயற்சிகளில் பங்குபற்றும் சம தரப்புகளில் ஒன்று என்ற வகையில் தமிழர் தரப்பை இது மிகவும் பலவீனப்படுத்தியுள்ளது.

தற்போது தென்னிலங்கையில் உள்ள சிங்களத் தீவிரவாத சக்திகள் உற்சாகமடைந்திருக்கிறார்கள்; தீவிரமடைந்திருக்கிறார்கள்.

தமிழர் தரப்பின்மீது மீண்டும் ஓர் ஆக்கிரமிப்பையோ அல்லது அவர்கள் மீது ஆதிக்கத்தைச் செலுத்துகின்ற இன வன்முறையையோ கட்டவிழ்த்து விடக்கூடிய ஒரு சூழலை அவர்கள் உருவாக்கக் கூடிய உற்சாகத்தை அடைந்திருக்கிறார்கள் போலத்தான் தெரிகின்றது.

இனவாதச் சக்திகளிடம் இருந்தும் சிங்கள இனவாத ஊடகங்கள் மூலமாகவும் வெளிப்படுகின்ற கருத்துகளைப் பார்க்கும்போது, சிங்களத் தீவிரவாதச் சக்திகள் பலமடைந்து இருப்பது போன்ற சூழலே அங்கு ஏற்பட்டுள்ளது.

**கேள்வி:** அரசு - புலிகள் பேச்சு ஜனாதிபதித் தேர்தலின் முன்பா பின்பா நடக்கும் சாத்தியம் உள்ளது?

**பதில்:** எம்மைப் பொறுத்தவரையில் தொடர்ந்தும் சமாதான முன்னெடுப்புகளை முன்னெடுத்துச் செல்வதற்கும், யுத்தநிறுத்த சூழலைக் காத்திரத் தன்மையோடும் வலுவாக்கிக்கொள்வதற்கும் நாம் தயாராகக் காத்திருக்கின்றோம்.

தெற்கைப் பொறுத்தவரையில் அவர்கள் காலத்துக்குக் காலம் அதிகாரங்களைக் கைப்பற்றும் போட்டிக்காகக் கடைப்பிடிக்கும் நடைமுறை இந்த அரசியல் பிரச்சினைதான்.

கடந்த மூன்றரை வருட சமாதான காலத்தில் கூட ஆட்சிகள் மாறியிருக்கின்றன. ஒவ்வொரு ஆட்சி வருகின்றபோதும், நிலைமைகள் மாறும் என எமது மக்கள் நம்பி இருந்தார்கள். ஆனால், எதுவும் நடைபெறவில்லை. இது மக்களுக்கு ஏமாற்றத்தைத்தான் தந்துள்ளது.

அந்தவகையில், புதிய தேர்தல் ஊடாக வருகின்ற ஸ்ரீலங்காவின் அரசியல் தலைமைகள் எவ்வளவு தூரம் சமாதான முனெடுப்புகளில் ஈடுபாட்டுடன், அர்ப்பணிப்புடன் செயற்படப்போகின்றன என்பது குறித்துத் தமிழ்மக்கள் மனங்களில் நம்பிக்கையற்ற தன்மைதான் இருக்கின்றது.

நேரடிப் பேச்சுகள் தேர்தலுக்கு முன்பு வருமா? தேர்தல் நடைபெற்றபின் வருமா? என்பவை பற்றியெல்லாம் எதிர்வு கூறமுடியாத நிலையில் நாங்கள் இருக்கின்றோம்.

### வாக்கு வங்கிகளை நிரப்ப ஏற்பாடு

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தலில் யார் வென்றால் சமாதான முன்னெடுப்புகள் இலகுவாக முன்னெடுத்துச் செல்லப்படும் என நம்புகிறீர்கள்?

**பதில்:** இப்பொழுது உள்ள சூழலில் இரண்டு ஜனாதிபதி வேட்பாளர்களும் தங்களுக்கான வாக்குவங்கிகளை நிரப்பிக் கொள்வதற்கான உத்திகளிலேயே அதிக கவனம் செலுத்துகிறார்கள். எவருமே தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு நடைமுறைச் சாத்தியமான நிலைப்பாடுகளை எடுத்து இன்னமும் வெளிப்படுத்தவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ சிங்கள இனவாதக் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு தமிழ்மக்களின் நியாயமான நிலைப்பாடுகளுக்கு எதிரான கருத்துகளை முன்வைத்துக்கொண்டுவருகின்றார்.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் அவரும் கூட இந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சிங்கள இனவாதக் கூட்டுக்களின் இணக்கப்பாடு இல்லாமல் அமைதி முயற்சிகளைத் தொடக்குவது





*விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பிரமுகர்களுக்கும் நோர்வேத் தரப்பினருக்குமிடையிலான நேற்றைய சந்திப்பின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.*

சாத்தியமில்லை; அவற்றின் இணக்கப்பாட்டைப் பெற்றுத்தான் அமைதி முயற்சிகளை முன்னெடுக்கமுடியும் என்று கூறுகின்றார்.

ஆகவே, இரு தரப்பிலும் இருந்து வருகின்ற அண்மைக்காலக் கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு எந்த விதத்திலும் ஒரு சார்பானவையாக - அல்லது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய ஒரு சூழலைத் தோற்றுவிக்கின்ற அணுகுமுறைகளாக - தெரியவில்லை.

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்துக் கருத்துக்கள் ஏதாவது வைத்திருக்கிறீர்களா?

**பதில்:** தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த விடயத்தில் எங்கள் கருத்துக்களை எங்களுடைய மக்கள் மீது திணிக்க விருப்பவில்லை. தமிழ்மக்கள் சுதந்திரமாக முடிவு எடுப்பார்கள்.

கடந்த காலங்களிலும் அவர்கள் தங்கள் அரசியல் அபிலாஷைகளை மிகத் தெளிவாக - ஆணித்தரமாக - சர்வதேசத்துக்கும், தெற்குக்கும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அதேபோன்று, ஜனாதிபதித் தேர்தலிலும் எமது மக்கள் தெளிவான வெளிப்பாட்டைக் காட்டுவர் என நினைக்கின்றேன்.

**கேள்வி:** வடக்கு - கிழக்கில் நீதி, நியாயமான முறையில் ஜனாதிபதித் தேர்தல் நடப்பது குறித்துத் தங்களுடன் கலந்துரையாடினார் என நோர்வேத் தூதர் தெரிவித்தார். அது குறித்து...?

**பதில்:** வடக்கு - கிழக்கில் எப்பொழுதும் நீதி, நியாயமாகத்தான் எல்லாம் நடந்துள்ளன. நீதி நியாயமற்ற முறையில் எதுவும் நடக்கவில்லை.

ஏனெனில், எமது மக்கள் பூரண அரசியல் தெளிவோடு இருக்கிறார்கள். இன வன்முறைக்கும் ஒடுக்குமுறைக்கும் நீண்டகாலம் முகம் கொடுத்து அரசியல் விழிப்புப் பெற்றவர்களாக எமது மக்கள் இருக்கிறார்கள். அந்த வகையில், அவர்கள் தங்கள் அரசியல் நிலைப்பாடுகளைச் சுயமாக - தெளிவாக - வெளிப்படுத்துவார்கள் என்றுதான் நினைக்கிறேன்.

### ஜனாதிபதித் தேர்தல்: கூட்டமைப்புடன் விரைவில் சந்திப்பு

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நீங்கள் முன்னர் பேச்சு நடத்தியபோது மீண்டும் ஒரு தடவை சந்தித்துப் பேசி இறுதி முடிவு எடுப்பீர்கள் எனக் கூறியிருந்தீர்கள். தற்போது மக்களைச் சுயமாக முடிவு எடுக்கும்படி கூறியுள்ளீர்கள். இதுதான் இறுதி முடிவா?

**பதில்:** எங்களது நிலைப்பாடு இதுவாக இருந்தாலும் மிக விரைவில் கூட்டமைப்புடனும் சந்திப்பு ஒன்றை நடத்தவிருக்கின்றோம். அப்போது தற்போதைய சூழ்நிலை குறித்து ஆராய்விருக்கின்றோம்.

தேர்தலில் நிற்கும் வேட்பாளர்களின் நிலைப்பாடுகள் வெளிப்படுத்தப்பட்ட பின்பு - அவர்களுடைய கருத்துகள் வெளிப்பட்ட பின்பு - நாங்கள் கூடி நிலைமைகளை ஆராய்வதென முடிவு செய்திருந்தோம்.

அண்மையில் முக்கிய இரு வேட்பாளர்களின் தேர்தல் நிலைப்பாடுகளும், விஞ்ஞாபனமும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இது பற்றிக் கூட்டமைப்பினருடன் விரைவில் பேசி, களநிலைமைகளை ஆராய்ந்து மேலதிகமான முடிவுகளை எடுக்கவிருக்கின்றோம்.

**கேள்வி:** பெரும்பான்மைக் கட்சியைச் சாராத - தமிழர் தரப்புச் சார்ந்தவரை - தமிழர்கள் ஆதரிக்கலாம் என்ற எண்ணம் உண்டா?

**பதில்:** தமிழ்மக்கள் ஸ்ரீலங்காவின் அரசமைப்பை எப்போதோ நிராகரித்துவிட்டனர். ஆகவே, தமிழர் ஸ்ரீலங்காவின் அரசமைப்பை ஏற்று அதன் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுவது தமிழர் தரப்பின் நிலைப்பாடாக இருக்கும் என நம்பவில்லை. அப்படியான தீர்மானத்தை எவரும் எடுத்தார்களா என்பதும் தெரியவில்லை.

**கேள்வி:** துணைப் படைகளைச் செயலிழக்கச் செய்யவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் முன்னர் அறிக்கை வெளியிட்டது. அதன் பின்பும் கொலைகள் தொடர்கின்றன. அதுபற்றி நோர்வேக்குத் தெரிவித்தீர்களா?

**பதில்:** ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கையில், விடுதலைப் புலிகளின் அரசியல் குழுவினர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வரவேற்கப்படமாட்டார்கள் என்றுதான் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் சமதரப்பு என்ற ரீதியில் தமிழர் தரப்பின் நியாயப்பாட்டை எடுத்து விளக்குவதற்கான - எடுத்துச் செல்வதற்கான - வழிவகைகள்தான் இப்போது மூடப்பட்டிருக்கின்றன. அது துரதிர்ஷ்டவசமானது.

இதுவே தமிழ்மக்கள் எல்லோரையும் கவலை கொள்ளச் செய்துள்ளது.

அதேசமயம், படுகொலைச் சம்பவங்களும் தற்போது தீவிரமடைந்துள்ளன. குறிப்பாக, எமது ஆதரவாளர்களும், பொதுமக்களும் தான் குறிவைத்துக் கொல்லப்படுகின்றனர். ஆயுதக் குழுக்களால்தான் இவை முன்னெடுக்கப்படுகின்றன.

இப்போக்கைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரவேண்டும். இதில் சர்வதேச சமூகம் கரிசனை கொள்ளவேண்டும் என்று நோர்வேக்கு வலியுறுத்திக் கூறியுள்ளோம்.

**கேள்வி:** ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கை ஒருபுறம் வந்துள்ளது. அதேசமயம், பேச்சுகள் வெளிநாட்டில்தான் நடக்க வேண்டும் என்று நீங்கள் மறுபுறத்தில் கூறுகிறீர்கள். இது சாத்தியமா?

**பதில்:** இரு முரண்பட்ட தரப்புகளைப் பேச்சுக்குக் கொண்டுவருவதாக இருந்தால் - அல்லது பேச்சை முன்னெடுப்பதாக இருந்தால் - நடுநிலையான - சுமுகமான - இயல்பான - சூழலில்தான் அது சாத்தியமாகும்.

எமது அமைதி முயற்சியில் மட்டுமல்ல, உலகில் பல்வேறு இடங்களில் இப்படித்தான் நடந்துள்ளது. ஆகவே, [illegible] சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்திருக்கும் எனக் கருதுகின்றேன்.

சமாதான முயற்சிகளை முன்னெடுக்க நோர்வே முயன்றபோது, பேச்சு இருதரப்பும் சந்திக்கக்கூடிய இடத்தில்தான் என முடிவு செய்தது. மீண்டும் அப்படியான நிலையைக் கொண்டுவருவதாக இருந்தால், அப்படியான சாத்தியமான வழிமுறையைத்தான் தேடவேண்டும். இருதரப்புக்கும் பொருத்தமற்ற இடங்களைத் தெரிவுசெய்வது, அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் சூழலை உருவாக்காது.

**கேள்வி:** தமிழ்மக்கள் தங்கள் அபிலாஷைகளை வெளியிட்ட நிலையில் சர்வதேச சமூகம் இப்படியான அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த அமைதிச் சூழல் இவ்வாறு ஏமாற்றத்துடன் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்?

**பதில்:** மக்களைப் பொறுத்தவரையில் சர்வதேசத்தின் ஈடுபாடு, ஆதரவு என்ற அடிப்படையில்தான் இவ்விடயத்தில் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட்டது. 50 வருட அஹிம்சைப் போராட்ட வரலாறாக இருக்கலாம், 20 வருட ஆயுதப் போராட்ட வரலாறாக இருக்கலாம் எல்லாம் வரலாற்று அனுபவமே. ஸ்ரீலங்காவின் இனவாதத் தலைமைகள் காலத்துக்குக் காலம் மாறிமாறி வந்தாலும் தமிழர் தரப்பை ஏமாற்றியும், நெருக்கடிகளைத் தீவிரப்படுத்தியுமே வந்துள்ளன. ஆகவே, சிங்களத் தரப்பை தமிழர் ஒரு போதும் நம்பியதில்லை.

இன்றைய காலகட்டத்திலும் சர்வதேசத்தின் அனுசரணை, ஈடுபாடு நடுநிலைப் பங்களிப்பு போன்றவை உள்ளன என்ற ஒரே காரணத்துக்காகத்தான் தமிழர் தரப்பு இந்த அமைதி முயற்சிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வந்திருக்கின்றது. அந்தவகையில், இப்போது எங்கள் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். அதன் வெளிப்பாடாகத்தான் மக்களின் எழுச்சி இப்போது தீவிரமாகியுள்ளதை நாம் காண்கிறோம். இதை சர்வதேச சமூகம் உணர்ந்து செயற்படும் என நம்புகிறோம்.- என்று உள்ளது. (எ-க-3)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யர்ழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# கேவலமான அரசியல் சந்தர்ப்பவாதம்

சிங்கள, பௌத்த மேலாண்மைப் போக்குடைய தென்னிலங்கைக் கட்சிகள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் பின்னணியில்,சிறுபான்மை இனத்தவர்களான தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதான கட்சிகள், எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.கட்சி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க பக்கம் சாய்ந்திருக்கின்றன.

மலையகத் தமிழர்களின் பிரதான கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் மற்றும் மலையக மக்கள் முன்னணியும், முஸ்லிம்களின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், மேல்மாகாணத்தில் வாழும் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மேல்மாகாண மக்கள் முன்னணி யும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் தமது முடிவை நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்ததோடு, ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி இந்த நாட்டின் அரசியல் கட்சிகள் இரண்டு பிரிவுகளாகக் கன்னை பிரியும் விடயம் தெளிவாகிவிட்டது.

ஆளுந்தரப்போடு ஒட்டிக்கொள்ளும் உதிரிக் கட்சிகளை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், பௌத்த - சிங்கள மேலாண்மைப் போக்குடைய சக்திகள் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணிக் குப் பின்னாலும்-

சிறுபான்மை இனத்தவர்களின் கட்சிகள் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பின்னாலும்-

இந்த ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி அணி பிரிந்து நிற்பது தெளிவாகும்.

தமிழ்ப் பேசும் மக்களின் முக்கிய அரசியல் கட்சிகளின் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் இந்த இரண்டு அணிகளிலும் எந்தப் பக்கமும் சேரவில்லை; எந்தப் பக்கமும் அது சேருவதற்கோ அல்லது ஆதரவு தெரிவிப்பதற்கோ வாய்ப்புமில்லை.

இப்படி பேரினவாதிகள் ஒருபுறமும் சிறுபான்மை இன மக்கள் மற்றொரு புறமுமாகக் கன்னை பிரிந்ததும்,தமக்குள் இணைந்து ஆதரவு கொடுக்கும் சிறுபான்மை இன மக்களிடையே குழப்பத்தை உண்டுபண்ணி கலகத்தை மூட்டிவிடும் கைவரிசையை, மேற்படி பேரினவாதிகளுக்கு 'ஜால்ரா' போடும் உதிரிக் கட்சிகள் ஆரம்பித்து விட்டன என்றே தோன்றுகின்றது.

தமிழர் சார்புடைய கட்சிகளும், முஸ்லிம்களின் பலமிக்க கட்சியும் ஒன்றிணைந்து ஐ.தே.க. வேட்பாளருக்கு ஆதரவு கொடுக்கத் தீர்மானித்திருக்கின்றன என்ற தகவல் வெளி வந்ததும் -

கிழக்கில் இதுவரை ஓய்ந்திருந்த தமிழர் - முஸ்லிம்கள் முறுகலை மீண்டும் தூண்டிவிட்டு, குழப்பத்தைக் கட்டவிழ்த்து விடும் சக்திகள் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டன.

நேற்றுமுன்தினம் கல்முனையில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட முஸ்லிம் வர்த்தகரின் இரத்தம் உறைவதற்கு முன்னரே, தமிழர் - முஸ்லிம்கள் உறவைக் கெடுத்து, குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கிலான அறிக்கைகள் உதிரிக் கட்சிகளின் அரசியல் தலைவர்களிடமிருந்து பறந்து வந்தமை கவனிக்கத்தக்கது.

அமைச்சுப் பதவிக்காக கட்சிமாறி குத்துக்கரணம் அடித்த சிறுபான்மை இன அரசியல்வாதி ஒருவர், இந்த முஸ்லிம் வர்த்தகரின் கொலைக்கு புரிந்துணர்வு ஒப்பந்தமே காரணம் என்ற சாரப்பட அறிக்கை வெளியிட்டு, அதன்மூலம் கொலைக்கான குற்றத்தை ஒரு தரப்பு மீது சுமத்த முயல்கின்றார்.

இன்னொரு சிறுபான்மை இன அமைச்சரோ வன்னித் தரப்பார் என நேரடியாகச் சுட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்துகின்றார்.

அத்தோடு நிற்காமல் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வன்னித் தரப்பாருடன் செய்துகொண்ட சமாதான ஒப்பந்தம் முஸ்லிம்களைப் பலிக்கடா ஆக்கியிருக்கின்றது என்று கூறி சமாதான ஒப்பந்தமே வேண்டாம் என்றும் கூறுகின்றார்.

அதுமட்டுமல்ல, தமிழர்களின் பிரிக்கமுடியாத தாயகத்தைத் துண்டாடவேண்டும் என்று மீண்டும் ஒரு தடவை இந்த அறிக்கை மூலமும் வலியுறுத்தி, சிறுபான்மையினத்தவர்களுக்கு எதிராகப் பேரினவாதிகள் செய்ய முயலும் தமிழரின் தாயகப் பிரிப்பு நடவடிக்கைக்கு 'கொள்ளி' எடுத்துக்கொடுக்கின்றார்.

தமிழர்களையும் முஸ்லிம்களையும் மோதவிட்டு, அந்த மோதல் சூட்டில் அரசியல் குளிர்காயும் - அரசியல் இலாபம் தேடும் - மூன்றாந்தர அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் இதுவரை காலமும் சற்று ஓய்ந்திருந்தன. மக்களை ஆழிப்பேரலை அள்ளி அவலப்படுத்திய காலத்தில் கூட தமது மக்கள் குறித்து கவலையற்றிருந்த இந்தப் பிரகிருதிகள், தேர்தல் என்றதும் சிறுபான்மை இனத்தவரிடையே இன சௌஜன்யத்தைக் குழப்பி, கலவரங்கள் - மோதல்களை ஏற்படுத்தி, அரசியல் லாபம் தேடும் தமது வழமையான குசும்புத்தனத்தை ஆரம்பித்துவிட்டார்கள்.

இந்தச் சமயத்தில் இவ்விவகாரம் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் பொறுப்புடன் சுட்டிக்காட்டிய சில விடயங்கள் கவனிக்கத்தக்கவை.

''நெருக்கடியான அரசியல் சூழ்நிலைகள் மிகுந்துள்ள இக்காலகட்டத்தில் நடைபெற்றுள்ள இந்தத் தூப்பாக்கிப் பிரயோகமும் படுகொலைச் சம்பவமும் முஸ்லிம் மக்களது ஆத்திரத்தையும், ஆவேசத்தையும் தூண்டி அவர்களை அசம்பாவிதங்களுக்குள் தள்ளிவிட எடுக்கப்பட்ட எத்தனமாகவும் இருக்கலாம். தூரநோக்கும் சமாதான விருப்பும் கொண்ட முஸ்லிம்கள் இச்சதி வலைக்குள் சிக்கிக்கொள்ளமாட்டார்கள் என்பதை இச்சம்பவத்தின் பின்னணியில் உள்ள சக்திகள் புரிந்துகொள்ள வேண்டும்.

''இப்படுகொலையின் பின்னணியில் உள்ள சக்தி எதுவாக இருந்தாலும், இச்சக்தியின் நோக்கம் தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவைச் சீர்குலைப்பதாகவே அமைந்திருக்கிறது என்பதைச் சகலரும் மனதில் கொள்ளவேண்டும். இச்சக்திகளை முறியடிப்பதும், தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் உள்ள சுமுகநிலையை, அவ்வப்போது இவ்வாறான கொலைகளின் மூலம் சீர்குலைக்க முயலும் சக்திகள் இதில் வெற்றியடையாமல் பார்த்துக்கொள்வதும் சகலரினதும் கடமையாகும்.

*''நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முகம்கொடுக்கும் இக்காலகட்டத்தில் இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் மூலம் குரோத உணர்வுகளைத் தூண்டிவிட்டு, அதன் வாயிலாக முஸ்லிம்களை விசனமும் ஆத்திரமும் அடையவைத்து, அரசியல் பிழைப்பு நடத்தும் நாடகம் அரங்கேறுமாக இருந்தால் இதை விடவும் கீழ்த்தரமான அரசியல் சந்தர்ப்பவாதம் வேறு எதுவும் இருக்கமுடியாது. இப்படியான அடிப்படையில் அரசியல் செய்யும் சிலர் விடுக்கும் அறிக்கைகளையும் மக்களால் மன்னிக்கமுடியாது. இவ்வாறான படுகொலைகளில் ஈடுபட்டு மீண்டும் யுத்தத்திற்குச் செல்கின்ற கைங்கரியத்தைச் செய்வதன் மூலம் தமது இலக்குகளை அடையும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சக்திகளை மக்கள் அடையாளம் கண்டுகொள்வார்கள்.''*

- ஹக்கீம் குறிப்பிட்டமை போன்று அரசியல் சந்தர்ப்பவாதம் இப்போது அரங்கேறுகின்றது.

# 'டைனமற்' பயன்படுத்தி மீன்பிடிப்பதை கடற்புலிகள் உடனே தடுக்கவேண்டும்!

## கடற்றொழிலாளர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.7

குடாக்கடல் பிரதேசத்தில் சட்ட விரோதமான முறையில் 'டைனமற்' வெடிகுண்டுகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதை முற்றாகத் தடுக்க கடற்புலிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளிடம் கடற்றொழிலாளர் சங்கங்கள் சில வேண்டுகோள் விடுத்துள்ளன. இத்தகவலை யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வேண்டுகோள் அடங்கிய கடிதம் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் ஊடாக கடற்புலிகளின் பொறுப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

டைனமற் வெடிகுண்டை கடலில் வெடிக்க வைக்கும்போது கடுமையான அதிர்வுகள் தண்ணீரில் பரவுகின்றன. இதில் பாதிப்படையும் மீன்கள் மயங்கி அல்லது இறந்து மிதக்கின்றன.

அவ்வாறு மிதக்கும் மீன்களை மீன் பிடிப்பவர்கள் சேகரித்துக் கொள்கின்றனர். இந்தச் செயற்பாட்டில் மீன் குஞ்சுகளும் பாதிக்கப்படுவதால் மீன் வளம் குறையும் ஆபத்து ஏற்படும்.

'டைனமற்' வெடிகுண்டைப் பயன்படுத்தி மீன்பிடிப்பது சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆனால், குடாநாட்டுக் கடற்பரப்பில் 'டைனமற்' வெடிகுண்டைப் பயன்படுத்தி மீன்பிடிப்பவர்களின் எண்ணிக்கை தற்பொழுது அதிகரிக்கின்றது எனக் கூறப்படுகிறது.

இந்த நடவடிக்கையால் கடற் சூழல் மாசடைவதுடன் மீனில் நச்சுத் தன்மையும் ஏற்படுகின்றது. சந்தையில் மீனின் விலை வீழ்ச்சியடைகின்றது. வெடிகுண்டு தவறுதலாக வெடித்து அதனைப் பயன்படுத்தும் மீனவருக்கு உயிராபத்தும் ஏற்படுகின்றது.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே யாழ். மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர் சங்கங்கள் சில கடற்புலிகளிடம் 'டைனமற்' பயன்படுத்தி மீன் பிடிப்பதைத் தடைசெய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன என்று அறியவந்துள்ளது.

(ஓ-ரி)

# வடக்கு - கிழக்கில் 180 ஆசிரியர்கள் நல்லாசிரியர் விருதுக்குத் தெரிவு

வலி.தெற்கு,ஒக்.7

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 180 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 16ஆம் திகதி திருகோணமலை சென்.மேரிஸ் மகளிர் கல்லூரியில் இந்த ஆசிரியர்களுக்கான விருது வழங்கும் வைபவம் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 24 கல்வி வலயங்களில் இருந்தும் 180 ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களைக் கல்வி அமைச்சும் வடக்கு -கிழக்கு மாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து தெரிவு செய்துள்ளன. (ஐ-152)

# தமிழர் தாயகத்தின் நிகழ்வுகளை பி.பி.சி. செய்திச் சேவை இருட்டடிப்பு!

## யாழ். பொது அமைப்புகளின் ஒன்றியம் கவலை

யாழ்ப்பாணம்,ஒக்.7

தமிழர் தாயக நிகழ்வுகளை பி.பி.சி. செய்திச் சேவை இருட்டடிப்புச் செய்வதாகவும் -

இனிமேலாவது நடுநிலையுடன் செய்திகளை ஒலிபரப்புச் செய்யும்படி கோருவதாகவும் -

யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் பி.பி.சி. செய்திச் சேவைக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமது வாழ்வுரிமைக்காக போராடும் இனத்தின் பதிவுகளை சர்வதேச ஊடகங்கள் முக்கியத்துவப்படுத்தி செய்திகளை வெளியிட்டுவரும் வேளையில் பி.பி.சி. ஒலிபரப்பு நிறுவனம் தமிழர் தாயகத்தில் நடைபெறும் நிகழ்வுகளை இருட்டடிப்புச் செய்தும் வெளியிடாமலும் ஒரு பக்கச் சார்பாகவும் நடந்து வருகின்றது இது தமிழர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றது.

இலங்கையில் வடக்கு - கிழக்கு பகுதி தமிழர்களின் தாயகமாகும். இங்கு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் விடுதலைக்கான போராட்ட நிகழ்வுகள், தமிழர்களின் உரிமைக் குரலான பொங்குதமிழ் நிகழ்வுகள் என ஏராளமான நிகழ்வுகள் நாளாந்தம் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பாக எந்த ஒரு செய்தியையும் பி.பி.சி. வெளியிடவில்லை என்பது தெட்டத்தெளிவாக எமக்குத் தெரிகின்றது.

தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவ வகை செய்தல் வேண்டும் என்ற குரல் முழக்கமிட்டு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் பி.பி.சி. அந்த தார்மீகப் பொருளை மறந்து எமது மண்ணில் நடக்கும் நிகழ்சிகளை ஒலிபரப்பாமல் புறக்கணிக்கின்றது. அத்துடன், மெய்யான செய்திகளை மூடிமறைத்து பக்கச் சார்புடன் செய்திகளை வெளியிட்டு வருவது அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறிலங்கா ஆக்கிரமிப்பு படைகளின் யுத்தத்தால் துன்பமான வாழ்வை சுமந்து நிற்கும் தமிழ் மக்களின் மெய்யான நிலைப்பாட்டை வெளியிட மறுத்து பக்கச்சார்புடைய செய்தி நிறுவனமாக பி.பி.சி. மாறிவிட்டதா என எம்மை சந்தேகம் கொள்ளவைக்கின்றது. இது தொடருமானால் பி.பி.சி. அதன் தனித்துவத்தை இழந்துபோக நேரிடும். இனிவரும் காலத்திலாவது நடுநிலையுடன் நடந்துகொண்டு தமிழர் தாயகத்தில் நடைபெறும் நிகழ்வுகளை ஒலிப்பரப்புச் செய்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். - என்று அக்கடிதத்தில் உள்ளது.


(ஓ)

### நாளை

*புரட்டாதி 22*
*சனிக்கிழமை*
*08.10.2005*
*திதி: பஞ்சமி*
*பிற்பகல் 02.56 வரை*
*நட்சத்திரம் : அனுஷம்*
*முற்பகல் 07.39 வரை*
*சுபநேரம்: 03.02 - 04.32*
*ராகுகாலம்: 9.02 - 10.32*
*(யாவும் பழைய நேரப்படி)*

### உதயவாக்கு

**கீழ்த்தரமாக மகிழ்ச்சியடைவதை விட உயர்தரமாக துன்பத்தை அனுபவிப்பதே பெருமை சேர்க்கும்.**



## உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்





திரு. சின்னத்தம்பி - பத்மராஜா B.A (Cey) P.G.in,Edu,M.phil.JP | திரு. இராஜரட்ணம் ஜோசப் சுதர்சன் B.Com.(Hons)Dip.in.Edu, | திரு. இ.நாகேஸ்வரன் B.A.(Hons)Dip.in.Edu,

இன்று யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் முதுதத்துவமாணி (M.phil) பட்டத்தைப் பெறும் திரு.சி.பத்மராஜா அவர்களையும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PG.Dip.in.Edu.) பட்டத்தைப் பெறும் திரு.இ.யோ.சுதர்சன், திரு.இ.நாகேஸ்வரன் அவர்களையும் மனதார வாழ்த்துகிறோம்.

புனித அந்தோனியார் கல்லூரிக் குடும்பம்,
ஊர்காவற்றுறை.

(40978)(30.12.16)


## வெளியீட்டு விழா

குடத்தனை,ஒக்.7

பருத்தித்துறை சைவநூல் நிலையத்தின் வெளியீடான கேதார கௌரி விரத நூல் உரை வெளியீட்டு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை சிவன் கோயில் பர்வத வர்த்தனி கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'சைவப்புலவர்' ம.ச.வேதராணியக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆசியுரையை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா தேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தாவும் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக ஊடாக வளங்கள் நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸும் சிறப்புரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் ஆய்வுரையை யாழ்பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் நா.ஞானகுமாரனும் பதிலுரையை இணைப்பறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சே.ஏகாம்பரநாதனும் நிகழ்த்துவர். (எ-78-70-173)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் அமிர்தலிங்கம் வத்சலன் B.sc.

(மதன் - நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை)

இன்று (07.10.2005) வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக 24ஆவது பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானமாணிப் பட்டம் பெறும் இவரை மேலும் பல பட் டங்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென மனமார வாழ்த்துகின்றோம்.

46, வளாக வீதி,
திருநெல்வேலி.

திரு.திருமதி வாகீஸ்வரன்
சின்னமாமா குடும்பத்தினர்.

(40969) (30.12.16)



## பாராட்டி வாழ்த்துகிறோம்

07.10.2005 இன்று பட்டமளிப்பு விழாவில் கலந்து சிறப்பிக்கும் எமது அதிபர் திரு.சி. மாணிக்கராசா அவர்கள் M.E.D. பட்டத்தையும், ஆசிரியையான திருமதி ந.புஸ்பரட்ணம் Diploma பட்டத்தையும் பெற்றுக்கொள்ளும் இந்நாளில் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய சமூகம்
யா/சன்மார்க்க மகாவித்தியாலயம்.

(40979)(30.12.16)



## அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று (07-10-2005) வெள்ளிக்கிழமை நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் (B.Sc.) பட்டம் பெறுகின்ற

செல்வன் தயாபரன் பத்மநாதக் குருக்கள்

அவர்களைஅகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகிறோம்.

துவாலி வீதி,
உடுப்பிட்டி. (சி/45480) (24.30.12.16)

திரு.சிவ.குஞ்சிதபாதக் குருக்கள்
(மாமா) குடும்பத்தினர்.


## யாழ்.பாடசாலைகளில் புத்தாக்கக் கழகங்கள் மீளமைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் புத்தாக்கக் கழகங்கள் மீளமைக்கப்படவுள்ளன.

மாணவர்களின் ஆக்கத்திறன்களை ஊக்குவிப்பதில் புத்தாக்கக் கழகங்கள் குறிப்பிடத்தக்க அளவில் பணியாற்றி வந்தன ஆனால், சமீபகாலமாக அவை செயற்பாடிழந்திருந்தன.

அத்தகைய கழகங்களை மீளப் புனரமைத்து மாணவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

இந்தக் கழகங்களை மீளஅமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது என்றும்-

இதில் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியப் பிரதிநிதிகள் , மாணவப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்றும்-அவர் மேலும் கூறினார். (ஒ-13)

## நோயாளர் விடுதி திறப்பு விழா

காரைநகர் அரசினர் வைத்திய சாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நோயாளர் விடுதி திறப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு வைத்திய சாலை அபிவிருத்திச் சபையின் தலைவர் ஜெ.தில்லையம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ளது.

அமரர் எஸ்.இராசநாயகம் ஞாபகார்த்த விடுதியினை கலாநிதி சிவஸ்ரீ க.வைத் தீசுவரக் குருக்களும்,லண்டன் காரை.அபிவிருத்திச் சபையினால் அமைக்கப்பட்ட விடுதியினை வியாவில் ஐயனார் ஆலய பரிபாலகர் க.சோமசேகரமும் திறந்துவைப்பர். (எ-73)


## 05.10.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200655044 இலிருந்து 200673137 வரை

சீட்டிழுப்பு இல. 1645

வெற்றி எண்கள்

29 30 40 63

சுப்பர் எண் 02

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.46,36,700/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 46,36,700/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 25 | 5,000/- | 1,25,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 476 | 1,000/- | 4,76,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,608 | 500/- | 8,04,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,423 | 40/- | 9,36,920/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 22,192 | 20/- | 4,43,840/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,33,358 | 10/- | 33,33,580/- |
| | | மொத்தம் | 81,19,340/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,சைக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 86,19,340/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 55,27,250/-

| | |
|---|---|
| மாத்தறை | 200657481-0-30 |
| பொலன்னறுவை | 200657540-9-49 |
| திருகோணமலை | 200661130-9-74 |
| அம்பாறை | 200655646-5-00 |
| காலி | 200665712-1-93 |



COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
T.P:- 021-222 8250,0777 222422

புதிய பிரிவுகள் ஆரம்பம்.....

Diploma in Computerized Accounting

Accpac + Quick Books Pro + MYOB

ஆரம்பம்:
08/10/2005
09/10/2005 } 09.30-11.30

புதிய அறிமுகம் Tally



COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777 222422

அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன

வகுப்புக்கள் ஆரம்பம் :

07-10-2005 11.30 - 01.30
08-10-2005 } 10.30 - 11.30
09-10-2005 } 03.00 - 04.00



## பாராட்டி வாழ்த்துகின்றோம்




சாந்தகுமாரி சண்முகநாதன் B.B.A. (Hons) | மைதிலி நடராசா B.B.A. (Hons)

இன்று (07.10.2005) வெள்ளிக்கிழமை பட்டம் பெறும் இவர்களைப் பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று நாடு போற்ற வாழ வாழ்த்துகின்றோம்.

புலவர் வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

சண்முகநாதன்
குடும்பத்தினர்.

(40980)(30.12.16)



## அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று (06-10-2005) வியாழக்கிழமை நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் (B.A) பட்டம் பெற்ற

செல்வி சியாமளா பத்மநாதக் குருக்கள்

அவர்களை அகமகிழ்ந்து பாராட்டிவாழ்த்துகிறோம்.

துவாலி வீதி,
உடுப்பிட்டி. (சி/45470) (30.12.16)

திரு.சிவ.குஞ்சிதபாதக் குருக்கள்
(மாமா) குடும்பத்தினர்.



## நிரு அழகு நிலையம்

அழகுக் கலை சம்பந்தப்பட்ட அனைத்துப் பயிற்சி வகுப்புகளும் 10.10.2005 திங்கட்கிழமை ஆரம்பம்.பதிவுகளை முற்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.

செல்வி.த.பாமதி,

சாமியன் அரசடி,கரவெட்டி .

T.P.: 0776235240

(40964) (30.12.16)



### கற்றல் கற்பித்தல் தர உள்ளீட்டு மூலவள நிலையம் நடத்தும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதன உருவாக்கல் போட்டிப் பரிசளிப்பு விழா - 2005

இடம்: யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.
காலம்: 10.10.2005 திங்கட்கிழமை
நேரம்: மாலை 3 மணி
தலைவர்: கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

பிரதமவிருந்தினர் : திரு. ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

சிறப்பு விருந்தினர் : திரு.K. சிவராமலிங்கம்
(முகாமையாளர்,இலங்கை வங்கி, 2ம் கிளை, யாழ்ப்பாணம்)
திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம்
(அதிபர்,யா/இராமநாதன் கல்லூரி,மருதனார்மடம்)

நிகழ்ச்சி நிரல்

* மங்கள விளக்கேற்றல்
* இறைவணக்கம்
* வரவேற்புரை : செல்வி. ஜே.றொக்சினி (முகில்நிலை ஆசிரியர்)
* வாழ்த்துரை : திரு. எஸ்.கே.யோகநாதன்
மேலதிக பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.
* தலைமையுரை: கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
(பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)
* நோக்கவுரை: திரு. த.சிவகுமார்
(கல்வியியலாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)
* சிறப்பு விருந்தினர் உரை
* பிரதம விருந்தினர் உரை
* படி - ஆசிரியர் வாண்மை இதழ் வெளியீடு
வெளியீட்டுரை
திரு. பா.தனபாலன், உபபீடாதிபதி கல்வியும் தரமேம்பாடும்.
* பரிசளிப்பு
* நன்றியுரை: செல்வன் யோ.துஸ்யந்தன் (முகிழ் நிலை ஆசிரியர்). (சி.45477) (30.12.16)
* கல்லூரிக் கீதம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம், தேசியக் கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

விளம்பர அனுசரணை -
ஹரன் புடைவையகம், திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி. தொ.பே. 0212222697


## மரண அறிவித்தல்

### முருகர் இரத்தினம்



காளிகோயில்,கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் இரத்தினம் 05.10.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகரின் அன்பு மகனும் சரஸ்வதி சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் கிட்ணபிள்ளை, இராசையா, இராசம்மா ஆகியோரின் சகோதரனும் கலாநிதி கலாவதி (ஜேர்மன்), கருணாகரன் (கனடா), கண்மணி (கனடா), கிருஸ்ணமூர்த்தி, ஜானகி, வசந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

காளிகோயிலடி,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(40965)(30.16.12)

தகவல்:
குடும்பத்தினர்.

# யாழ். பல்கலைக்கழக 24 ஆவது பட்டமளிப்பு விழா காட்சிகள்













படங்கள் : பகீரதன்

## வாழ்வை வளமாக்கும் நெறிமுறைகள்

முக்கியமான சில நெறிகளை நாம் வாழ்க்கையில் கடைப்பிடித்தால், வாழ்க்கையில் முன்னேற்றம் அடையலாம். ஆன்மிக உயர்வையும் பெறலாம். இவை எல்லாமே நாம் எளிதாகக் கடைப்பிடிக்கக் கூடியவைதாம்.

**உடல் நலம் காப்பது** - அளவாக உண்ணுங்கள். இறைவனுக்குப் படைத்து அதைப் பிரசாதமாக உண்ணுங்கள். சாத்விகமான உணவை உட்கொள்ளுங்கள். பதினைந்து நாள்களுக்கு ஒருமுறை உண்ணாவிரதத்தை கடைப்பிடியுங்கள். அளவாக உடற்பயிற்சி செய்யுங்கள். தினமும் இரண்டு மணி நேரம் மௌனவிரதத்தைக் கடைப்பிடியுங்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் நான்கு மணி நேரத்துக்குக் குறையாமல் மௌனவிரதத்தைக்

ஞானக்கதிர்

கடைப்பிடியுங்கள்.

**பண்புகளைக் காப்பாற்றுங்கள்**- மென்மையாகப் பேசுங்கள். கூடியவரை உண்மையையே பேசுங்கள். கோபப்படாமல் பேசுங்கள்.

எண்ணங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள். செயலில் நேர்மையைக் காட்டுங்கள். நியாயமற்ற செயல்களில் ஈடுபடாதீர்கள். தவறு செய்பவர்களை மன்னிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

**வைராக்கியத்தை வளருங்கள்** - வாரம் ஒருமுறை உப்பைக் கைவிடுங்கள். மாதம் ஒரு வராம் சர்க்கரையைக் கைவிடுங்கள். பயனற்ற, மனதைக் கெடுக்கும் பொழுதுபோக்குகளில் ஈடுபடாதீர்கள். உங்கள் தேவைகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். உணவு, உடை, பழக்கங்கள் எல்லாவற்றிலும் எளிமையைக் கடைப்பிடியுங்கள்.

**இதயத்தைத் தூய்மைப்படுத்துங்கள்** - பிறருக்கு நன்மை செய்யும் எண்ணங்களை வளருங்கள். அன்பே தெய்வம் என்று உணருங்கள். வேலையைக் கடமை உணர்வுடன் செய்யுங்கள். பிரதிபலன் எதிர்பாராமல் கடமையைச் செய்யுங்கள். அட்க்கத்துடனும் பணிவுடனும் செயற்படுங்கள். இவை உங்கள் இதயத்தைக் தூய்மைப்படுத்தும். இறைவனை எல்லா உயிரிடத்தும் உணருங்கள். எல்லா உயிர்களிடத்தும் அன்பும் நேய உணர்வும் காட்டுங்கள். அதுவே உண்மையான பக்தி.

**நல்லுணர்வுகளை வளர்த்தல்** - தினமும் ஒரு மணி நேரம் நல்ல ஆன்மீக விஷயங்கள் நிறைந்த நற்போதனைகளையும் நூல்களையும் படியுங்கள். நல்லொழுக்கத்தைக் கற்றுக்கொடுக்கும் பிரசங்களில் கலந்துகொள்ளுங்கள்.

மனதைத் தூய்மைப்படுத்தி நல்லுணர்வுகளைக் கொடுக்கக்கூடிய பூஜை, கூட்டு வழிபாடு, பஜனை ஆகியவற்றில் ஈடுபடுங்கள். பெரியோர்கள் உறவை நாடி அவர்களின் போதனைகளைப் பெறுங்கள்.

**ஆன்மிகச் செழுமையைப் பெறுவது** - தினமும் விடியற்காலை நான்கு மணிக்கே எழுந்து நீராடுங்கள். அதன்பின் தியானத்தில் அமருங்கள். ஜபம் இறைவனது நாமஸ்மரனை ஆகியவற்றில் மனதை ஈடுபடுத்துங்கள். இறைவனின் பெயரைத் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள். மீண்டும் மீண்டும் எழுதிப் பழகுங்கள். இறைவனைப் பூஜிக்கும் பாடல்களைக் கேளுங்கள் முடிந்தால் நீங்களே பாடுங்கள்.

இந்த வழிகளைக் கடைப்பிடித்தால், உடலும் உள்ளமும் தூய்மைபெறும். ஆன்மீக மார்க்கத்தில் முன்னேற வழி கிடைக் கும்.

**- சுவாமி சிவானந்தர்.**

## பண்டத்தரிப்பு பெரியவிளான் பகுதியில் விழிப்புக் குழு அமைக்கக் கோரிக்கை

வலி.தென்மேற்கு,ஒக்.7

பண்டத்தரிப்பு - பெரியவிளான் பிரதான வீதிப் பகுதியில் திருட்டுச் சம்பவங்களும் திருட்டு முயற்சிகளும் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன. இதனால், விழிப்புக் குழுவை அமைத்து இரவுவேளைகளில் கண்காணிப்பில் ஈடுபட ஏற்பாடு செய்யுமாறு இப்பகுதி மக்கள் பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

திருடர்கள் இப்பகுதியில் இரவு வேளைகளில் நடமாடி வருகின்றனர். இவர்கள் வீடுகளில் புகுந்து பெறுமதியான பொருள்களைத் திருடுகின்றனர். அத்துடன் வழிப் பறிகளிலும் ஈடுபடுகின்றனர். இதனால் மக்கள் இரவு வேளை களில் மிகுந்த அச்சத்துடன் இருந்து வரு கின்றனர்.

இந்நிலையில் விழிப்புக்குழுவொன்றை விரைவில் அமைக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும் விவசாயிகள் சம்மேளன தலைவருமான ச.செல்வரத்தினத்திடம் இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, முன்னர் இளவாலை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸார் இரவு வேளைகளில் சைக்கிள்களில் கண்காணிப்புப் பணியை மேற்கொண்டு வந்தனர். ஆனால் தற்போது இந்த ரோந்து சேவை குறைந்துள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் இப்பகுதியில் திருடர்கள் நடமாட்டம், விஷமிகளின் தொல்லை ஆகியவை அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

(ஓ-185)

## நுண்கலைத்துறை மாணவர்களின் போராட்டம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை இசைப்பிரிவு மாணவர்கள் மேற்கொண்டு வந்த சாத்வீகப் போராட்டம் நேற்றுமுன்தினம் இடைநிறுத்தப்பட்டது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட மாணவர்கள் தெரிவித்ததாவது:-

இராமநாதன் நுண்கலைத் துறை இசைப் பிரிவில் 2004ஆம் ஆண்டு பூர்த்திசெய்த மாணவர்களாகிய நாம் இறுதி வருட பரீட்சையில் பிரதான பாடமான வாய்ப்பாட்டிலே திட்டமிட்டுப் பழிவாங்கப்பட்டோம். இது தொடர்பாக நீதியான தீர்வொன்றை வேண்டி எம்மாலும் எமது மாணவப் பிரதிநிதிகளாலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு தீர்வு கிடைக்கப்பெறவில்லை. அதனால், சாத்வீக போராட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டோம். இச் சாத்வீகப் போராட்டம் கடந்த 3ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 5ஆம் திகதி வரை முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில் எமது சக மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவைக் கருத்தில் கொண்டு மனிதாபிமான முறையில் எமது இறுக்கமான கோரிக்கையினை சிறிது தளர்த்தி எம்மால் சில கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இக்கோரிக்கைகளை துணைவேந்தர் ஏற்றுக்கொண்டார். அதற்கமைவாக எமது போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளோம்.

எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் அல்லது மேலும் இழுத்தடிக்கப்படும். நிலை உருவாகின் எமதுபோராட்டம் மீண்டும் தொடரும் என்பதனை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கின்றோம். என்று அவர்கள் தெரிவித்தனர். (ஓ)

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
கரவெட்டி

**2006ஆம் ஆண்டிற்கான அனுமதி - தரம் 6**

2006ஆம் ஆண்டு தரம் 6இற்கான (ஆறு) அனுமதி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களைப் பாடசாலை நேரத்தில் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுதிகதி 30.10.2005

UCMAS மனக்கணக்கு பயிற்சி வகுப்புகளில், சிறுவர் கணனி வகுப்புகளில் (K.D Computer Classes) பயிலுவதற்கான வசதிகளும் பொருத்தமான மாணவர்களுக்கு (ஆண்கள்) விடுதி வசதிகளும் உள்ளன.

(45459)-(52-11-45) -அதிபர்.



## விசேட கழிவு கட்டணத்தில் யாழ்-கொழும்பு பிரயாண ஒழுங்குகள்

**விமான மூலமாக கட்டணம்**

| | | |
|---|---|---|
| யாழ்-கொழும்பு | - | 6800/- |
| யாழ்-கொழும்பு-யாழ் | - | 11800/- |

**சொகுசு பஸ் (A/C BUS)**

| | | |
|---|---|---|
| யாழ்-கொழும்பு | - | 1100/- |

**VAN மூலமாக**

| | | |
|---|---|---|
| யாழ்-கொழும்பு | - | 1100/- |

VAN மூலமாக செல்பவர்களை வீடுகளில் ஏற்றி கொழும்பிலும் அவர்களது இருப்பிடங்களில் பாதுகாப்பாக இறக்கிவிடப்படுவார்கள்

**பிரத்தியேக VAN சேவை**

| | | |
|---|---|---|
| யாழ்-கொழும்பு | - | 12000/- மட்டும் |

* சர்வதேச நாடுகளுக்கான விமான ரிக்கற்றுக்கள் கொழும்பை விட குறைந்த கட்டணத்தில்

* தீபாவளியை முன்னிட்டு உலகநாடுகளுக்கான (PARCEL SERVICE) பொதிகள் சேவை இரண்டு கிலோவிற்கு மேல் அனுப்பும் போது மிகவும் குறைந்த கட்டணத்தில் நாமே பொதிகள் செய்து அனுப்பி வைக்கிறோம். (C/45478)

தொடர்புகளுக்கு:

**RAINBOW TRAVELS & TOURS**

32 1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா கிறீம் ஹவுஸ் அருகில்)
தொ.இல: 0777 328219, 021 222 3237


## தமிழீழ மாவட்ட நீதிமன்று - கிளிநொச்சி

வழ/இல: 152/04.
தன்மை மணநீக்கம்

வழக்காளி:
திரு.பா.தமிழ்மாறன்.
மே/பா/பவிர்தரன்.
804.திருநகர். கிளிநொச்சி

எதிராளி:
தமிழ்மாறன் கமலாவதி.
ஆனைப்பந்தி ஒழுங்கை.
பருத்தித்துறை வீதி.
யாழ்ப்பாணம்.

*மேற்படி எதிராளிக்கு!*

### முற்றான தீர்வை தொடர்பான அறிவித்தல்

*மேலே பெயர், முகவரி இடப்பட்ட எதிராளியாகிய உமக்கெதிராக வழக்காளியால் இவ்வழக்குத் தாக்கல்செய்யப்பட்டு, உரியமுறையில் அழைப்பாணை, வழக்கறிக்கை என்பன சேர்பிக்கப்பட்டிருந்தும் இப்பிணைக்குத் தொடர்பான எந்த நடவடிக்கையையும் இதுவரை காலமும் நீர் மேற்கொள்ளாததினால் இப் பிணைக்கு ஒரு முக விசாரணை ஊடாக விசாரிக்கப்பட்டு ஒருமுக தீர்ப்பும் வழங்கப்பட்டது. அத்தீர்ப்புக்கான இடைக் காலத்தீர்வை பதியப்பட்டு பிரதி அனுப்பப்பட்டும் எதிர் நிறுவும்பொருட்டு எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாததைக் கருதிற்கொண்டு அதற்கான காலவரையறை முடிவெற்றதையும் கருத்திற்கொண்டு இந்த முற்றான தீர்வை பதியப்படுகின்றது என்பதனை இதன் மூலம் அறியத் தருகின்றோம்.*

*"மற்றின் கட்டளைப் படி"*

வரைவு........

| | |
|---|---|
| சீ.க. அமல் நிக்சன். சட்டத்தரணி. | செ. மாணிக்கராசா. |
| மாவட்ட மேல் மேன் முறையீட்டு மன்று. | பதிவாளர் மாவட்டமன்று. |
| கிளிநொச்சி. (40866) | கிளிநொச்சி. |

## தமிழீழ மாவட்ட நீதிமன்று - கிளிநொச்சி

வழ/இல:152/04.
தன்மை: மணநீக்கம்.

வழக்காளி:
திரு.பா.தமிழ்மாறன்.
மே/பா/பவிர்தரன்.
804.திருநகர். கிளிநொச்சி.

எதிராளி:
தமிழ்மாறன் கமலாவதி.
ஆனைப்பந்தி ஒழுங்கை.
பருத்தித்துறை வீதி.
யாழ்ப்பாணம்.

### முற்றான தீர்வை

*இந்த 2005ஆம் ஆண்டு 07 மாதம் 18 நாள் இவ்வழக்கு இம்மன்ற நீதியாளர் செல்வி சி.சாதனா அவர்கள் முன்னிலையில் கூப்பிடப்பட்ட போது எதிராளி உரியமுறையில் அழைப்பாணை, வழக்கறிக்கை என்பவற்றைப்பெற்றிருந்தும் தொடர்ச்சியான பல தவணைகளுக்குச் சமுகம் கொடுக்காததையிட்டு, இவ்வழக்கு ஒருமுக விளக்கத்திற்கு எடுத்ததன் அடிப்படையில் அதாவது வழக்காளியால் முன்வைத்த வழக்கறிக்கையின் முதலாம் உரிமைக் கோரிக்கையின் பிரகாரம் வழக்காளி, எதிராளிகளுக்கிடையிலான திருமண உறவை வெறிதாக்குவதாகவும் குறித்த எதிராளி மன்றுக்கு சமுகம் தரும் பட்சத்தில் 2ஆம் உரிமைக்கோரிக்கை தொடர்பில் ஆய்வு செய்து முடிவு வழங்கப்படும் எனும் அடிப்படையிலான ஒருமுகத்தீர்ப்பு வழங்கப்பட்டதன் பிரகாரம் இம்முற்றான தீர்வை பதியப்படுகின்றது.*

2005ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8ஆம் நாள்

வரைவு........

| | |
|---|---|
| சீ.க. அமல் நிக்சன். சட்டத்தரணி | நீதிவான் |
| மாவட்ட மேல் மேன் முறையீட்டு மன்று | தமிழீழ மாவட்ட நீதிமன்று |
| கிளிநொச்சி. (40865) | கிளிநொச்சி. |

## மைலை வயல் அரச காணியாக இனம் காணப்பட்டது

யாழ்ப்பாணம்.ஒக்.7

உடுவில் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள இணுவில் ஜே/190 கிராம அலுவலர் பிரிவைச்சேர்ந்த மைலை வயல் அரச காணி என இனங்காணப்பட்டுள்ளது.

இக் காணிக்கு உரிமை கோருவோர் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இணுவில் ஜே/190 பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர் அல்லது உடுவில் பிரதேச செயலர் ஆகியோரிடம் முறைப்பாடு செய்யலாம் என யாழ்.மாவட்ட துரித காணிச்செயலணியின் உதவி ஆணையாளர் கு.ஞானசேகரம் தெரிவித்துள்ளார்.

மைலை வயல் காணியில் 45 குடும்பங்கள் கடந்த 40 வருடகாலமாகக் குடியிருக்கின்றன என்றும் இக்குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் குடியிருக்கும் காணிக்குரிய ஆவணப்பத்திரங்கள் விரைவில் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஓ-204-203)

## கல்விக்குழு குறித்த செயலமர்வு

யாழ்ப்பாணம் .ஒக். 7

தீவக கல்வி வலயத்தின் ஊர்காவற்றுறை கோட்டப் பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள கட்டாயக்கல்விக் குழுக்களை வலுப்படுத்தல் தொடர்பான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

மாணவர் வரவினைப் பரிசீலிக்கும் கட்டாயக் கல்விக்குழுவினை மீளமைத்து வலுப்படுத்தல், அதன் முக்கியத்துவம், அறிவுறுத்தல்கள் குழுக்களின் வேலைத்திட்டங்களை மதிப்பிடுதல் ஆகிய நடவடிக்கைகள் தொடர்பாக கருத்துரைகள் வழங்கப்பட்டு, கலந்துரையாடல் நடைபெறும்.

(ஓ.204)

## அரியாலை கிழக்கு விவசாயிகளுக்கு திணைக்களம் ஊ தவ

யாழ்ப்பாணம் ஒக்-7

அரியாலை கிழக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள ஈச்சங்காடு, கொட்டுக்கிணற்றடிப் பிள்ளையார் கோயிலடிப்பகுதிகளில் நெல் விதைப்பில் ஈடுபடவுள்ளவர்களுக்கு உதவி வழங்க கமத்தொழில் திணைக்களம் முன்வந்துள்ளது.

கடந்த பத்து வருடங்களாக இப் பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ளப்படைாத் தரப்பு அனுமதிக்கவில்லை. தற்போது 100 ஏக்கர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு விதை நெல்லுக்கான தொகையை வழங்குவதுடன் காலத்துக்குக் காலம் பயிர் அறுவடை செய்யும்வரை வேண்டிய உர வகைகளையும் இலவசமாக வழங்க கமத தொழில் திணைக்களம் முன்வந்துள்ளது.

இது சம்பந்தமான கலந்துரையாடல் அண்மையில் அரியாலை விவசாய சம்மேளன அலுவலகத்தில் எஸ்.ரி. பத்மநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட கமத்தொழில் திணைக்கள பதில் உதவிஆணையாளரும பெரும்பாக உத்தியோகத்தருமான க.உருத்திரேஸ்வரன் இத்தகவலை வெளியிட்டுள்ளார். (ஓ-68)

## சிறுவர் நிகழ்வு

குடத்தனை.ஒக் 7

கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் சர்வதேச சிறுவர் முதியோர் தின நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது

சங்கத்தின் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக ந.பாஸ்கரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-78)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



06.10.2005 வியாழக்கிழமை யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் B.Com (Hons), (ACC. Special) பட்டம் பெற்ற

செல்வி
**கிருசாந்தி மரியதாஷன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பல சிறப்புகள் பெற வாழ்த்துகிறோம்.

கனடாவில் வசிக்கும் அப்பா, அக்கா, அத்தான், அஜந்த், ஜேர்மனில் வசிக்கும் அண்ணா, அண்ணி, ஸ்ரெபினா மற்றும் அன்ரா குடும்பத்தினர்.

(40942)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



07.10.2005 இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் தொழில் நிர்வாகமாணி (B.B.A) பட்டம் பெறும் சுழிபுரம் மேற்கு

**அப்புத்துரை சிறீதரன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்தி பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறேம்.

*வாழ்க வாமுடன் வாழ்த்தும்*

கலைமகள் சனசமூக நிலையம்,
ஜயனார் ஆலயத் தொண்டர்சபை,
சுழிபுரம் மேற்கு. (C/45467)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மண்மகிழ | கண்நெகிழ |
|---|---|
| 13 | 07 |
| 04 | 09 |
| 1939 | 2005 |



அமரர்

**கணபதி கிருஷ்ணன்**

(ஓய்வுபெற்ற ஊழியர்–புகையிரதத் திணைக்களம் )

கண்ணீரில் முப்பது நாள்கள் கரைந்தது அப்பா!
எண்ணாத நாளில்லை நினைக்காத பொழுதில்லை
உங்கள் அன்பார்ந்த நினைவுகள் ஆறாத்துயராக
நின்று நிழலாடுதேப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*இன்று(07.10.2005) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார்,உறவினர்.நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(40846)

| | |
|---|---|
| பாரதிபுரம் | மனைவி மக்கள் |
| கலாசாலை வீதி. திருநெல்வேலி. | மருமக்கள், பேரப்பிள்ளைகள். |

## நூற்றாண்டு நினைவலைகள்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07 | 08 |
| 10 | 04 |
| 1905 | 1986 |



அமரர்

**கணபதிப்பிள்ளை சதாசிவம்**

வேலணையைப் பிறப்பிடமாகக்கொண்டு. மலேசியாவில் பொறியியலாளராகப் பணிபுரிந்து. தாயகம் மீண்டு தன் கடன் பணி செய்து கிடப்பதேயென பொதுவாழ்வுக்கே தங்களை அர்ப்பணித்தீர்கள். நல்லறம் போற்றி இல்லறம் வாழ்ந்து நன்மக்களைப் பெற்று வாழ்வாங்கு வாழவைத்தீர்கள். அன்பேயுருவாய் பண்பும்பயனுமாய், எத்துறையும் கை தேர்ந்த செயல்வீரனாய் அஞ்சேல் என எதிர் கொண்டு சமூ கத் தொண்டாற்றி வாழ்ந்து காட்டிய உங்களை என்றும் போற்றி நினைவு கொள்வோம்.

மக்கள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்.

# 3 வருட காலத்தில் ஜனாதிபதிக்காக 12 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது

## நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தகவல்

கடந்த மூன்று வருட காலத்திற்குள் ஜனாதிபதியின் செலவினங்களுக்காகவும், ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற விருந்துபசாரங்களுக்கும் ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்களின்போது அவருடன் கூடச் சென்றவர்களுக்குமாக 12 கோடியே 17 லட்சத்து 92 ஆயிரத்து 831 ரூபா 18 சதம் செலவிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இந்தக் கணக்குத் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரனால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்குப் பதில் அளிக்கும்போதே இந்த விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

* கடந்த மூன்று வருடங்களாக ஜனாதிபதியும், ஜனாதிபதி செயலகமும் பயன்படுத்திய வாகனங்களின் எண்ணிக்கை என்ன?
* இக்காலப்பகுதியில் ஜனாதிபதிக்கெனச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?
* இந்த மூன்று வருடகாலத்தில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற விருந்துபசாரங்களில் உணவு வகை, மதுபானம் என்பனவற்றிற்காக எவ்வளவு பணம் செலவிடப்பட்டுள்ளது?
* மேற்குறிப்பிட்ட காலங்களில் ஜனாதிபதி வெளிநாடுகளுக்கு மேற்கொண்ட விஜயங்களின்போது அவருடன் சென்றவர்களுக்கான செலவுத் தொகை எவ்வளவு? -என மகேஸ்வரன் கேள்வி எழுப்பினார்.

பிரதமரிடமே மகேஸ்வரன் எம்.பி. இந்தக் கேள்விகளை எழுப்பியிருந்தார். சபையில் பிரதமர் இல்லாததினால் ஆளுங்கட்சிக் கொறடாவான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பிரதமரின் சார்பில் பதில் அளித்தார்.

அப்போது அவர் குறிப்பிட்டதாவது:-

ஜனாதிபதியின் பாவனைக்குப் 10 குண்டு துளைக்காத வாகனங்




கள் வழங்கப்பட்டுள்ளன. அவரது சுற்றுவட்டப் பாதுகாப்புப் பிரிவினருக்கு 14 வாகனங்களும் கொமாண்டோ மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஜனாதிபதியின் விசேட பாதுகாப்புப் பிரிவினருக்கு 11 வாகனங்களும் முன்னாள் ஜனாதிபதிகளின் விதவை மனைவிமாருக்கு ஜனாதிபதி செயலக உத்தியோகத்தர்களுக்கும் என 37 வாகனங்களும், ஜனாதிபதி செயலக வாகனப் பிரிவுக்கென 28 வாகனங்களும் என மொத்தமாக 110 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்று வருடங்களில் ஜனாதிபதியின் தனிப்பட்ட செலவினங்களுக்காக ஒன்பது கோடி 41 லட்சத்து 38 ஆயிரத்து 680 ரூபா 87 சதம் செலவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் கடந்த மூன்று வருடகாலத்தில் இடம்பெற்ற விருந்துபசாரங்களுக்கு 23 லட்சத்து 12 ஆயிரத்து 90 ரூபா 45 சதம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் எந்த விதமான மதுபான வகைகளும் பரிமாறப்படவில்லை என்று குறிப்பிட்டார் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே.

ஜனாதிபதியின் வெளிநாட்டு விஜயங்கள் தொடர்பாகக் கூறும்போது, இக்காலப்பகுதியில் ஜனாதிபதியுடன் சென்றவர்களுக்கு ஏற்பட்ட செலவினங்களுக்காக 2 கோடியே 53 லட்சத்து 42 ஆயிரத்து 59 ரூபா 86 சதம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

மகேஸ்வரன் எம்.பி. இந்தக் கேள்வியை எழுப்பியபோது எதிர்க்கட்சிக் கொறடாவும் சகாவுமான மஹிந்த சமரசிங்க வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக் கொண்டார்.

அதாவது, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் அரசியல் தலைவர்களுக்குப் பெரும் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. அண்மையில் முன்னாள் அமைச்சர் கதிர்காமர் கொல்லப்பட்டார். எனவே, ஜனாதிபதி மற்றும் அரசியல் தலைவர்களின் பாதுகாப்புத் தொடர்பாகக் கேள்வி கேட்பதும் அதனை வெளிப்படுத்துவதும் உசிதமாக இருக்காது எனக் குறிப்பிட்டார்.

இதனால் மகேஸ்வரன் எம்.பி. மஹிந்த சமரசிங்கவைப் பார்த்து ஏதேதோ ஆத்திரமாகக் கூறியதைப் பார்க்க முடிந்தது. ஒலி வாங்கி முடுக்கிவிடப்படாததினால் என்ன பேசினார் என்பதை அறிய முடியவில்லை. எனினும், மஹிந்த சமரசிங்கவின் கூற்றை அசட்டை செய்யாமல் மகேஸ்வரன் எம்.பி. தொடர்ந்து கேள்விகளை எழுப்பினார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கேள்வி பதில் நேரத்தில் கேட்பதற்காக மகேஸ்வரன் கொடுத்திருந்த கேள்விகளில் ஒரு பகுதிக்கே விடையளிக்கப்பட்டது. (க)

# ஜே.வி.பியைக் காப்பாற்றவே விவாதம் ஒத்திவைக்கப்பட்டது

## ஜோன் அமரதுங்க குற்றச்சாட்டு

தண்டனைக் கோவை திருத்தச் சட்டம் விதிக்கப்பட்டால் ஜே.வி.பியினர் வகையாக மாட்டிக்கொள்வார்கள் என்ற பீதி ஏற்பட்டுள்ளது. இதனால்தான் இந்த விவாதத்தைப் பின்போடும்படி கேட்டுள்ளனர். அதற்கு அரசும் தலையாட்டி விட்டது. - என்று முன்னாள் அமைச்சரும் கம்பஹா மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பியுமான ஜோன் அமரதுங்க நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் குற்றஞ்சாட்டினார்.

இதனால் சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. தொடர்ச்சியாக ஜே.வி.பி.யினர் கூச்சல் போட்டவண்ணம் ஜோன் அமரதுங்கவின் பேச்சுக்கு இடையூறு செய்தபடி இருந்தனர்.

ஜோன் அமரதுங்க எம்.பி. அங்கு கூறியதாவது:-

நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தின்படி இப்போது தண்டனைக் கோவைகள் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதம் இடம்பெறவேண்டும்.

ஆனால், ஜே.வி.பியினரின் கோரிக்கையின் பேரில் இதனைப் பிறிதொரு தினத்திற்குப் பிற்போட்டிருப்பதாகவும், அதற்குப் பதிலாக இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையத் திருத்தச் சட்டம் தொடர்பான விவாதம் நடைபெறும் எனவும் ஆளும் கட்சிக் கொறடா அறிவித்தார். இது ஏன்?

1987முதல் 92ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் ஜே.வி.பியினரால் 6557 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதனால் ஜே.வி.பி. தலைவர்களைக் கைது செய்யக் கோரி நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள், மாணவர்கள், மதத் தலைவர்கள், வர்த்தகர்கள், தொழில் அதிபர்கள் என எவரையுமே விட்டு வைக்காமல் கொலை செய்துள்ளனர் ஜே.பி.யினர். இவர்கள் கண்டிப்பாக தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டியவர்கள். - என்றும் ஜோன் அமரதுங்க குற்றஞ்சாட்டினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் எழுந்து நின்று கூச்சலிட்டனர். சபையில் இல்லாதவர்களைப் பற்றிப் பேசக் கூடாது என்றும் கோஷம் எழுப்பினர்.

என்றாலும், கூச்சல்களுக்கு மத்தியில் ஜோன் அமரதுங்க தொடர்ந்து உரையாற்றினார்.

இங்கே கூச்சல் போடுபவர்கள் எல்லோரும் சின்னப் பொடியன்கள். இவர்களுக்குத் தமது கட்சியினர் கடந்த காலங்களில் செய்த அட்டூழியங்கள் எதுவுமே தெரியாது.

கூச்சல் போட்டுக் குழப்பம் ஏற்படுத்துவதால் கடந்த கால வரலாறுகளை மூடிமறைத்துவிட முடியாது. அதற்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

சோமவன்ஸவும், வீரவன்ஸவும் நாட்டைக் குழப்புகின்றனர். இவர்களுக்கு மக்கள் நல்ல பாடம் படிப்பிக்கவுள்ளனர். ஜனாதிபத் தேர்தலின் பின்புதான் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸவின் நிலை எப்படி அமையும் என்பது புரியும்.

ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரதுங்கவையும் இவர்கள்தான் கொலை செய்தனர் என குமார்ரூபசிங்க நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்த மனுவில் குறிப்பிட்டுள்ளார். - என்றும் ஜோன் அமரதுங்க சுட்டிக் காட்டினார்.

அதேவேளை, இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளன. அவர்களுக்கு வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தாம் தெரிவித்துக்கொள்கிறார் எனவும் ஜோன் அமரதுங்க கூறினார். (க)

# யோகி மனையியல் பயிற்சியகத்தில் கேக், மார்ச்சீனி அலங்காரக் கண்காட்சி

யாழ்.பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ் நிறுவனத்தின் ஆதரவில் யோகி மனையியல் பயிற்சியக மாணவிகளால் உருவாக்கப்பட்ட கேக் மற்றும் மாச்சீனி மலர் அலங்காரக் கண்காட்சி நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

யாழ். வீரமாகாளி அம்மன் ஆலயத்துக்குச் சமீபமாக அம்மன் வீதியில் உள்ள பயிற்சிகயத்தில் இக் கண்காட்சியினை யாழ்.மாவட்ட மேலதிக் அரச அதிபர் ஆ.சிவசுவாமி சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

சுவை மிகுந்த கேக் வகைகளை அழகு நிறைந்தவையாக மாற்றிய மாணவிகளின் கலைநயம் பார்ப்போரை வியக்கவைக்கிறது. விசேட நிகழ்வுகளுக்கு ஏற்ற வகையில் அடுக்கு கேக் அலங்காரம் பலரையும் கவர்கிறது. தாஜ்மஹால், பூந்தோட்டம், அழ கிய வீடு என மாச்சீனி அலங்காலரத்தால் மாணவிகள் உருவாக்கிய ஐசிங் சிற்பங்கள் சிறியவர் முதல் பெரியவர் வரை மனதைக் கொள்ளை கொள்கின்றன. இக்கண்காட்சியை யுவதிகள்,மாணவிகள் என அதிக எண்ணிக்கையானோர் பார்வையிடுகின்றனர்.(ஒ-ரி-204)



யோகி மனையியல் பயிற்சியகத்தில் மாச்சீனி அலங்காரக் கண்காட்சியை யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையப் பணிப்பாளர் அ.சண்முகதாஸ், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோருக்கு யோகி அக்கடமி நிர்வாகி திருமதி யோகி விளக்கிக் கூறுவதையும் கேக், மாச்சீனி அலங்காரங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் : சுதாகரன்)

# ஆங்கில தினப் போட்டிகளில் மாவட்ட மட்டப் புள்ளி விவரம்

திருகேணமலை ,ஒக்.7

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண நிலை ஆங்கில தினப் போட்டி-2004 முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

வாய்மொழி, எழுத்தாக்கம் என இருபிரிவுகளாக நடத்தப்பட்ட இப் போட்டியில் வடக்கு- கிழக்குப் பாடசாலைகளைச் சேர்ந்த ஆண்டு-3 முதல் ஆண்டு - 13 வரையான மாணவர்கள் பங்குபற்றினார்கள்.

இந்தப் போட்டிகளில் மட்டக்களப்பு மாவட்டம் 113 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்திலும்- திருகோணமலை மாவட்டம் 108 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்திலும்-

யாழ்ப்பாண மாவட்டம் 89 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்திலும் உள்ளன.

வவுனியா 58 புள்ளிகளைப் பெற்று நான்காவது இடத்திலும், கல்முனை 51 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும், கிளிநொச்சி 35 புள்ளிகளைப் பெற்று ஆறாவது இடத்திலும், மன்னார் 31 புள்ளிகளைப் பெற்று ஏழாவது இடத்திலும், முல்லைத்தீவு 21 புள்ளிகளுடன் எட்டாவது இடத்திலும் அம்பாறை 5 புள்ளிகளுடன் 9 ஆவது இடத்திலும் உள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்புக் கல்வி வலயம் 104 புள்ளிகளையும், கல்குடா கல்வி வலயம் 6 புள்ளிகளையும், பாண்டிருப்புக் கல்வி வலயம் 3 புள்ளிகளையும் பெற்றுக்கொடுத்துள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலைக் கல்வி வலயம் 103 புள்ளிகளையும், மூதூர் கல்வி வலயம் 5 புள்ளிகளையும் பெற்றுக் பெற்றுக்கொடுத்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ். கல்வி வலயம் 58 புள்ளிகளை யும், வடமராட்சி கல்வி வலயம் 9 புள்ளிகளையும், வலிகாமம் கல்வி வலயம் 22 புள்ளிகளையும் பெற்றுள்ளன. (8)

# முதியோர் தின விழா

வடமராட்சி,ஒக்.7

பருத்தித்துறை பிரதேச செயலகம் நடத்தும் சிறுவர், முதியோர் தின விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் தலைமையில் பருத்தித்துறை சிவன் கோயில் பர்வதவர்த்தனி கலாமண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

முதியோரைக் கௌரவித்தலுடன் கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படும். பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய மாணவர்களின் "மன மாற்றம்" என்ற நாடகமும் பரத நிருத்தியாஞ்சலி நடனமும் இடம்பெறும். (ஒ-173)

நமது செய்தி

Namathu Seithi

தொடர்புகளுக்கு
இல 3 டொறிங்ரன் அவனியூ
கொழும்பு - 07
தொலைபேசி - 011 2506272

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக வருகிறது - "நமது செய்தி"

வாசியுங்கள் நமது செய்தி

## விசேட விலைக் கழிவு

நாடளாவிய ரீதியில் கட்டணம் அதிகரிக்கப்பட்ட போதிலும் வாடிக்கையாளர்களின் வேண்டு கோளுக்கு இணங்க இரண்டு கிலோவிற்கு மேல் அனுப்பும் ஒவ்வொரு கிலோவிற்கான கட்டணம் ஐரோப்பிய (பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், சுவிஸ், நோர்வே, டென்மார்க்) நாடுகளுக்கும் அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடு களுக்கும் குறைக்கப்பட்டுள்ளன.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நீங்கள் அனுப்ப வேண்டிய உடை, உணவு, அலங்காரப் பொருள்கள், வீடியோ நாடா, புகைப்படங்கள் ஆகியவற்றை எம் மூலமாக விரைவாக அனுப்பிவைக்கலாம்.

தொடர்புகளுக்கு:

**RAINBOW TRAVELS & TOURS**

32 1/2. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ராஜா கிறீம் கவுசுக்கு அருகில்) Tel: 021-2223237.



## சுன்னாகம் வர்த்தகர் சங்கம்
### இரவுப் பாதுகாப்புச் சேவை உத்தியோகத்தர்கள் தேவை

சுன்னாகம் வர்த்தகர் சங்கத்தால் நடத்தப்படும் இரவுப் பாதுகாப்புச் சேவைக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. அடிப்படை மாதச்சம்பளம் 5500/= ரூபாவும் மேலும் மேலதிக வேலை உட்பட மாதம் 6000 /= இற்கு மேற்பட்ட சம்பளம் பெறும் வாய்ப்பும் உண்டு. உங்கள் விண்ணப்பப்படிவங்களை சுன்னாகம் வர்த்தக சங்க அலுவலகத்திற்கு அனுப்பி நாளை(08.10.2005) சனிக்கிழமை காலை 10 மணிக்கு (ப.நேரம்) நடைபெற இருக்கும் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளவும்.

T.P.077 9229036,
060 2212779

*நிர்வாகம்,*
*சுன்னாகம் வர்த்தகர் சங்கம்.*

(40880)(30-32-17-15)



## STR திருமண சேவை

எமது STR திருமண சேவை இடம்மாற உள்ளது. அதற்குபெண் உதவியாளர் தேவை. 40-45 வயதிற்குட்பட்டவராகவும் ஓரளவு படித்தவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது. தினசரி காலை 8.30-11.00 மணிக்குள் சமுகம் தரவும்.

ஐயனார் ஒழுங்கை,
STR திருமண சேவை,
S.S. றோட், சண்டிலிப்பாய்.

(40908-32-15-17)



## பொது விவேகம்

S.L.A.S, S.L.E.A.S, S.S.O ஆகிய போட்டிப் பரீட்சைகளிற்கான பொதுவிவேக வகுப்புகள் ஆரம்பம்.
நாளை (08-10-2005) சனிக்கிழமை 10- 12.30
ஆசிரியர் - திரு.த.தவசேகர்
குறிப்பு: வகுப்புகள் D.M.Iஇல் (வெலிங்டன் சந்தி) நடைபெறும்.
இப்பரீட்சைகளிற்கான ஏனைய வகுப்புகளும் நடைபெறும்.
(40927)


## நூல் அறிமுகம்

திருக்கேதீச்சரம் சபாரத்தினம் சுவாமிகள் பற்றிய பக்திப் பாமாலை நூல் அறிமுக விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவைத் தலைவர் அருள்லிங்கம் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

நூலின் அறிமுகவுரையை செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் நிகழ்த்துவார், சித்தாந்த பண்டி தர் வ.ஆ.தங்கமயில் சிறப்புரை வழங்குவார். (ஒ-173)

## யாழ்.பல்கலைக்கு படகு அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.7

யாழ்.பல்கலைக்கழகக் கடல்வள அபிவிருத்தி நிலைய மாணவர்களின் கல்வி செயற்பாட்டிற்காக போரூட் நிறுவனம் மீன்பிடிப் படகு ஒன்றையும் அதற்குரிய மீன்பிடி உபகரணங்களையும் வழங்கியுள்ளது என்று யாழ்.பல்கலைக் கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தின் பணிப்பாளர்கசித் திரவடிவேல் தெரிவித்தார்.

மீன்பிடிப் படகினையும் உபகரணங்களையும் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 20ஆம்திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-7)


## மனமுவந்து வாழ்த்துகின்றோம்



யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் மைந்தன்
செல்வன்
*சுப்பிரமணியம் ஞானதீபன்*
BBA (Hons), (Acc.Fin.Special)

இன்று (07-10-2005) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாகமாணி சிறப்புப் பட்டம்பெறும் இவரைப் பாராட்டி மகிழ்வதோடு, மேலும் பல சிறப்புகள் பெற வாழ்த்துகின்றோம்.

நீர்வேலி வடக்கு, நீர்வேலி. அப்பா, அம்மா, சித்தப்பா, சித்தி, சகோதரர்கள்.
(40938) (24-32-15-17)



## பார்ாட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி
சண்முகலிங்கம் மதிவதனி
(ஆசிரியை, St.Antony's School Colombo)

06-10-2005 இல் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் B.F.A. நுண்கலைமாணி பட்டம் பெற்ற செல்வி மதிவதனியை மனமார வாழ்த்து கின்றோம்.

*479, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P.: *021-222-3515.* (40935)(32-15-17)

வாழ்த்துவோர்:
சு.பாஸ்கரன் ஆச்சாரி,
திவ்வியமலர் குடும்பத்தினர்



## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று (07-10-2005) வெள்ளிக்கிழமை நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாகமாணி (B.B.A.) பட்டம் பெறுகின்ற
செல்வி மீரா மகேந்திரன்
(மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளை)
அவர்களை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாணம். நண்பர்கள்.
(40934) (24-32-17-15)



# Congratulations

## Dr.(Miss) Kumuthini Sriskandasingam

(Bachelor of Siddha Medicine and Surgery)

On Your Convocation
We are proud of you, You've accomplished with your Personal sacrifice
and
With the God's grace
May prosper well in your profession and always service comes first.
07th October 2005.

**Loving Friends**
Well-Wishers
Vadamaradchy.

(40870) (24)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
### வெளிவாரிப் பட்டப்படிப்பு பதிவு 2004/2005 மற்றும் 2005/2006

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் 2004/2005 மற்றும் 2005/2006 கல்வியாண்டுகளுக்குப் பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத்தேர்வு நாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து கீழ்வரும் ஒழுங்கில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| கல்வியாண்டு 2004/2005 | 10.10.2005 தொடக்கம் 30.11.2005 வரை |
| கல்வியாண்டு 2005/2006 | 02.01.2006 தொடக்கம் 15.02.2006 வரை |

குறிப்பு:
* மேற்படி திகதிக்குப்பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
* மேற்படி பதிவுகள் தொடர்பான சகல நடவடிக்கைகளும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கைநெறி
2. கலை முதற் கற்கைநெறி
3. நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) முதலாம் வருடம்
4. நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) இரண்டாம் வருடம்
5. நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) மூன்றாம், நான்காம் வருடம்

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி பகுதி I கற்கை நெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம்.

இந்துநாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவநாகரீகம், மெய்யியல், அரசறிவியல்.

| கட்டண விவரம் | ரூபா |
|---|---|
| விண்ணப்பப்படிவம் | 100.00 |
| பதிவுக்கட்டணம் | 1000.00 |
| பாடத்திட்டமும் விதிமுறைகளும் | 250.00 |

(முதற்கலை/முதல் வர்த்தக நெறிக்கானது)

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ்.பல்கலைக் கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கியில் உரிய தொகைகளைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து எமது அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக்கட்டளை/தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்ட ரூபா 20.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் உதவிப்பதிவாளர், வெளிவாரிப் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். மேலதிக விவரங்களுக்கு 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

**பதிவாளர்**
**04.10.2005**

(சி/45452)(32-15-17)



# INVITATION TO BID

**Health Infrastructure Development Program funded by World Vision Lanka for the Ministry of Health of the Democratic Socialist Republic of Sri Lanka :**

## Construction of Gramodaya Health Centers

1. Memorandum of Understanding between the Government of Sri Lanka and the World Vision Lanka has been signed to rehabilitate the Health Infrastructure in the areas affected by Tsunami on 26th December 2004. The United Nations Office for Project Services (UNOPS)- Sri Lanka Project Implementation Facility is providing technical services as implementation partner of the Ministry of Health and World Vision Lanka.

2. The United Nations Office for Project Services - Sri *Lanka Project* Implementation Facility therein after referred to as "UNOPS", invites sealed bids from eligible bidders with ICTAD Grading M6 and above for the **Construction of Gramodaya Health Centers at locations given below**

| District | Location | Bid Bond | Bid Document Issues & Collection |
|---|---|---|---|
| Lot1 Mullaitivu | 1 Kompaveli<br>2. Palinagar<br>3. Therangandal | 50,000/<br>50,000/<br>50,000/ | UNOPS<br>230, *Thirunagar South, Killinoch*chi.<br>Tel:021 2285729 |

3. Interested bidders may submit a written application and purchase a complete set of bidding documents upon the payment of non-refundable fee of Rs 3,000,00. Bidding documents will be issued to eligible bidders 9,30 am to 5,00 pm on working days from 10th October 2005 to 20th October 2005 at the relevant area offices indicated above and at UNOPS-SLPIF in Colombo at 17, Park Avenue, Colombo-5. Contractors with ICTAD Grading M4 and above may submit complete Bids (Lot 1) or partial bids per Lot, provided full BOQs are submitted for each location. Contractors with Grading M5 and below can ONLY submit partial bids per Lot - i.e, individual projects only and will not be considered for packages (Lots).

4. All bids must be accompanied by a Bid Security in the prescribed format and must be delivered to UNOPS at the relevant Area Offices indicated above before 2.00 pm on 24th October 2005. Bids will be opened immediately thereafter in the presence of bidders or their authorized representatives who choose to attend.

5. UNOPS will not be responsible for any costs or expenses incurred by bidders in connection with the preparation of delivery of bids.

**Country Coordinator**
**UNOPS- SLPIF**

(C/45462)

# சேவையால் உயர்ந்தோருக்குக் கௌரவம்

**யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவின் இன்றைய அமர்வுகளில் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படும் மூவரின் வாழ்க்கைக் குறிப்புகள் இங்கு பிரசுரமாகின்றன.**

## வைத்தியகலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினம்

சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதில் முன்னின்று செயற்பட்டவரான வைத்தியகலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினம் அவர்களை மருத்துவபீடப் பீடாதிபதி வைத்தியகலாநிதி க.சிவபாலன் அறிமுகப்படுத்துகிறார்.



வைத்தியகலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினம் வேம்படி மகளிர் கல்லூரியிலிருந்து மருத்துவபீடத்திற்கு அனுமதிபெற்ற முதல் மாணவியாவார். அவர் கொழும்பு மருத்துவ பீடத்தில் 1966ஆம் ஆண்டு மருத்துவமாணியும் அறுவைச் சிகிச்சைமாணியும் பட்டத்தைப் பெற்றார். அவர் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் தனது முதல் நியமனக் காலத்தில் நோயாளர் பராமரிப்பில் தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினார் 1971இல் உள்நாட்டு இனக்கிளர்ச்சியில் மேலும் அவர் ஒரு மாதமளவில் வைத்தியசாலையில் தங்கியிருந்து நோயாளர்களைக் கவனித்து வந்தார்.

பொதுச்சுகாதாரத்தில் பயிற்சிக் கற்கைநெறியை நிறைவுசெய்ததன் பின்னர் முல்லைத்தீவில் சுகாதார வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டார். 1973 இல் பரவிய கொலரா நோய் அவருக்கு ஒரு சவாலாகியது. பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள்(PHI), மருத்துவமாதுகள் ஆகியோரின் உதவி ஏதுமின்றி அவர் அப்பெரிய மாவட்டம் முழுவதும் பயணஞ்செய்து நோய்த்தடுப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

1984 இல் முருங்கன் கண்ணிவெடிச் சம்பவத்தில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டபோது பிரேதப் பரிசோதனையில் வேறு வைத்தியர்கள் பங்குகொள்ளத் துணியாதபோது, அவர் தனியாகவே நின்று பிரேதப் பரிசோதனைகள் யாவற்றையும் செய்யவேண்டியிருந்தது. மன்னாரில் இருந்து போக்குவரத்துச் செய்த பயணிகள் உட்பட காணாமற்போனோர் பலரைப் பாதிக்கப்பட்டவர்களாக இனங்காண்பதற்கு அவர் கொடுத்த பூரணமான, நிறைவான அறிக்கைகள் பயன்படுத்தப் பட்டன. இச்செயற்பாடு மன்னார் பேராயராலும் வேறு பலராலும் பாராட்டப்பட்டது.

பின் அவர் உலக சுகாதார நிறுவனத்தால் சட்ட மருத்துவ ஆய்வுத்துறைப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டார். 1986 இல் யாழ்ப்பாணம் சட்ட மருத்துவ அலுவலராக நியமிக்கப்பட்டார்.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப் பாளராக 1991-2002 வரை பணியாற்றினார்.

யாழ். போதனா வைத்தியசாலைக்குப் புற்றுநோய் மருத்துவ நிபுணர் ஒருவரை நியமிக்கும்வரை தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைக்கு இருகிழமைகளுக்கு ஒரு முறை, மகரகமவிலிருந்து புற்றுநோய் மருத்துவ நிபுணர் ஒருவரை வரச்செய்வதன் மூலம் நோயாளிகளிற்குப் புற்றுநோய்க் 'கிளினிக்கை' நடத்த மிகக் கடுமையாக உழைத்தார்.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக அங்கத்தவரான அவர், 2001-2002 காலத்திற்குக் கழகத் தலைவராக இருந்ததுடன், 306B மாவட்டத்தின் சிறந்த தலைவருக்கான பரிசையும் பெற்றார்.

முதன்மையான மருத்துவ நிர்வாகியாகவும், சட்டமருத்துவ வல்லுநராகவும் நல்லாசிரியராகவும் பண்பு நலமிக்க ஒருவராகவும் விளங்கும் வைத்திய கலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினம் அவர்களுக்கு கௌரவ கலாநிதிப் பட்டத்தினை யாழ்.பல்கலைக் கழகம் வழங்குகிறது.

## வித்துவான் சவரிமுத்து அடைக்கலமுத்து

தமிழ் இலக்கியம், மொழி, பண்பாடு, சமயம் முதலான பல துறைகளில் சேவையாற்றியவரான வித்துவான் சவரிமுத்து அடைக்கலமுத்து அவர்களை முகாமைத்துவ வணிகபீடப் பீடாதிபதி ப.தேவராஜா அறிமுகப்படுத்துகிறார்.



வித்துவான் அடைக்கலமுத்து அவர்கள் 1919 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி திரு.திருமதி சவரிமுத்து தம்பதியினரின் புதல்வராக நெடுந்தீவிலே பிறந்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொழும்பகம் ஆசிரிய கலாசாலையிலே பயின்று 1938 ஆம் ஆண்டு பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியரானார்.

ஆசிரியராகப் பணியாற்றும்போதே பாலபண்டிதர் பரீட்சையிலே தேறிய இவர் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினர் நடத்திய தமிழ் டிப்ளோமா பரீட்சையிலும், வித்துவான் பரீட்சையிலும் தேறினார். இக்காலப் பகுதியிலே பேராசிரியர்கள் க.கணபதிப்பிள்ளை, வி.செல்வநாயகம், சு.வித்தியானந்தன் முதலியோரிடம் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றார்.

'அமுது' என்ற புனைப்பெயரில் இன்றும் அருமையான கவிதைகளை எழுதிவரும் இவரது 'மடுமாதா காவியம், அன்பின் கங்கை, அன்னை தெரேசா, நெஞ்சே நினை, எனது வேலிக்குக் கதியால் போட்டவர்கள்' முதலான நூல்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் நிலைத்து நிற்கும் தகுதியைப் பெற்றவை.

தமிழ் இலக்கியம், மொழி, பண்பாடு சமயம் முதலான துறைகளிலே இருநூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளைப் பத்திரிகைகளிலே அவ்வப்போது எழுதியுள்ளார். இவரது ஆய்வு நோக்கினை இக்கட்டுரைகளினூடு கண்டுகொள்ளலாம்.

நகைச்சுவை ததும்பச் சொற்பொழிவாற்றும் திறன்கொண்ட வித்துவான் அடைக்கலமுத்து, ஆயிரத்துக்கும் மேற்பட்ட மேடைகளிலே சொற்பொழிவாற்றியுள்ளார். கவி யரங்குகளிலே இவரது எடுத்துரைப்பு முறைமையையும் கவித்துவ ஆற்றலையும் வியக்காதவர்கள் இல்லை எனலாம்.

உலகின் மிகச்சிறப்பான விருதுகளில் ஒன்றான பிரான்ஸ் நாட்டின் செவாலியா விருதினையும் வித்துவான் அடைக்கலமுத்து அவர்கள் பெற்றுள்ளார்கள்.

தமிழ்மொழி, இலக்கியம், கவிதை, சொற்பொழிவு ஆராய்ச்சி முதலான பல்வேறு துறைகளிலும் கடந்த ஆறுபது ஆண்டுக ளுக்கு மேலாக அரும்பணியாற்றி ஈழத்துத் தமிழர் மத்தியிலே தமக்கெனத் தனியிடம் பெற்றிருக்கும் வித்துவான் சவரிமுத்து அடைக்கலமுத்து அவர்களுக்கு யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகம் கௌரவ காலநிதிப் பட்டத்தினை வழங்குகிறது.

## பேராசிரியர் வேலுப்பிள்ளை தர்மரட்ணம்

தலைசிறந்த கணிதவியலாளரும் திறமைமிக்க கல்வி நிர்வாகியுமான பேராசிரியர் வேலுப்பிள்ளை தர்மரட்ணம் அவர்களை விஞ்ஞானபீடப் பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் அறிமுகப்படுத்துகிறார்.



1936ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி மலேசியாவில் பிறந்த பேராசிரியர் வேலுப்பிள்ளை தர்மரட்ணம் அவர்கள் தமது பெற்றோரின் பூர்வீக இடமான காரை நகரைச் சேர்ந்த பயிரிக்கூடல் என்ற இடத்திற்குத் திரும்பி தமது இரண்டாம் நிலைக் கல்வியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிற் பெற்றார். 1955ஆம் ஆண்டு கொழும்பு [illegible]ங்கைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட பேராசிரியர் தர்மரட்ணம் அவர்கள் [illegible]தத்தைச் சிறப்புப் பாடமாகக் கற்று 1958 ஏப்ரல் மாதம் அதனை வெற்றிகரமாக [illegible]றவுசெய்து முதற்பிரிவில் தேறினார். ஏறத்தாழ ஒரு வருட காலம் தற்காலிக [illegible]தனாசிரியராகச் சேவையாற்றியபின் 1959ஆம் ஆண்டு கொழும்பு இலங்கைப் [illegible]கலைக்கழகத்தில் கணிதவியல் உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.

1961ஆம் ஆண்டில் லண்டன் பல்கலைக்கழகத்தின் கிங்ஸ் கல்லூரிக்குச் சென்ற பேராசிரியர் தர்மரட்ணம் அவர்கள் தமது பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். 1964ஆம் ஆண்டு நவம்பர் மாதம் லண்டன் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கியது.

கொழும்பு திரும்பிய பேராசிரியர் தர்மரட்ணம் அவர்கள் கணித விரிவுரையாளராக நியமிக்கப்பட்டு முதுநிலை விரிவுரையாளராகப் பதவியுயர்த்தப்பட்டார். பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது கணிதவியல் பேராசிரியர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

1978ஆம் ஆண்டு கணித புள்ளிவிபரவியல் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். 1985 ஜூலை தொடக்கம் 2002 செப்ரெம்பர் வரை முதுநிலைப் பேராசிரியராகக் கடமையாற்றினார்.

பேராசிரியர் தர்மரட்ணம் அவர்கள் நியமிக்கப்பட்ட விஞ்ஞான பீடாதிபதியாகவும் விஞ்ஞானபீட சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட விஞ்ஞான பீடாதிபதியாகவும் பணியாற்றினார்.

பல்கலைக்கழக ஆசிரியராக, ஆய்வாளராக, நிர்வாகியாக மட்டுமன்றி இப்பல்கலைக் கழகத்தின் நிர்வாக விடயங்களில் உற்சாகத்துடன் தமது சக்தியையும் நேரத்தையும் பேராசிரியர் தர்மரட்ணம் அவர்கள் செலவிட்டுள்ளார். பல்கலைக்கழகப் பேரவை, மூதவை ஆகியவற்றின் அங்கத்தவராக உற்சாகத்துடன் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். தாம் யாழ். பல்கலைக்கழகத்தில் சேவையாற்றிய காலம் முழுவதும் மூதவை அங்கத்தவராக இருந்துள்ளார்.

பேராசிரியர் தர்மரட்ணம் அவர்கள் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இலங்கையின் இரண்டு பல்கலைக்கழகங்களில் நாற்பத்திமூன்று வருடங்களுக்கு மேல் மெச்சத்தகு பணியாற்றியபின், பல்கலைக்கழக சேவையிலிருந்து 2002 செப்ரெம்பரில் ஓய்வு பெற்றார். பேராசிரியர் அவர்கள் அவரது மாணவர்களால் அனுபவமும் அர்ப்பணிப்பும் மிக்கவோர் ஆசிரியராகப் போற்றப்படுகிறார்.

பேராசிரியர் வேலுப்பிள்ளை தர்மரட்ணம் அவர்கள் கணிதவியலைக் கற்பித்தலிலும் ஆய்வு செய்தலிலும் பல்கலைக்கழக நிர்வாக மேம்பாட்டிற்கும் ஆற்றிய பங்களிப்புகளைப் பாராட்டி அங்கீகரித்துக் கௌரவ விஞ்ஞான கலாநிதிப் பட்டத்தை யாழ். பல்கலைக்கழகம் வழங்குகிறது.

---

# செழுமையான இயற்கையை பேணிப் பாதுகாப்போம்!

**இன்று சூழல் பாதுகாப்பு முன்னோடி நாளாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இதனையொட்டி தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையகம் வெளியிட்ட ஆக்கம் இது.**

இயற்கை தன்னுள் கொண்டுள்ள தன்னியல்பான சுழற்சி வட்டத்தின் மூலமே எங்களுக்குத் தேவையான சுத்தமான காற்று, நீர், வெளிச்சம் என்பன கிடைக்கின்றன.

மனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞான வளர்ச்சி என்பது இயற்கையின் நன்கொடைகளை மேலும் வளப்படுத்துவதற்கும் பாவிப்பதற்கும் மட்டுமே உரியது. கண்ணுக்குத் தெரியும் இயற்கைக் காரணிகளான நீர், நீர்நிலைகள், நிலம், மண்படைகள், தாவரங்கள் யாவும் தமது இயல்பான நிலைகளிலிருந்து மனிதனால் அளவுக்கு அதிகமாகச் சிதைக்கப்படும்போது தம்மை இயல்பாகவே புத்தாக்கம் செய்யும் திறன்களை இழந்து விடுகின்றன.

இயற்கை வளங்கள் தமது புத்தாக்கத் திறனை இழக்கும்போது எங்கள் உயிர் வாழ்வுக்குத் தேவையான காரணிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதநிலை ஏற்படுகின்றது. இயற்கையை நாம் அழிக்கும்போது எம்மை தாங்கிவைத்துள்ள உயிர்ச்சுற்று வட்டச் சூழலை அழித்து எம்மையே அழிக்கின்றோம் என்பதே உண்மையாகும்.

***சூழலை அறிவோம்***

வாழ்க்கையை இலகுபடுத்துவதற்காக எம்மால் உருவாக்கப்பட்டுள்ள பல பொருள்கள் எமக்கும் இயற்கைக்கும் இடையிலான தொடர்பில் மீள் நிரப்பமுடியாத இடைவெளியையும் சேதத்தினையும் ஏற்படுத்துகின்றன. கூரைத்தகடுகளாகப் பயன்படுத்தப்படும் 'அஸ்பெற்றஸ்' எனப்படும் கல்நாரிழை மூலப்பொருள் நீண்டகாலத்தில் மனிதர்களுக்குச் சுவாசப் புற்றுநோயை உருவாக்குகின்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனால், வளர்ச்சிபெற்ற ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் எல்லாம் கல்நாரிழை தகடுகளின் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதோடு உடைந்த சேதமடைந்த ஓடுகளைக் கையாள்வதற்குக்கூட கடுமையான விதிகள் அமுலாக்கப்படுகின்றன.

நாளாந்தப் பாவனைக்காக நாங்கள் பயன்படுத்தும் பிளாஸ்ரிக் மூலப்பொருள்களால் உருவாக்கப்பட்ட பொருள்களும், பொதிப் பைகளும் இலகுவில் உக்கி அழியாத பொருள்களாக நிலத்தில் சேருவ தால் நிலத்தினுள் நீரும் காற்றும் ஊடுருவிச் செல்லமுடியாமல் தடைப்பட்டு மண்படைகள் வளமற்றுப் போகின்றன. இது வெள்ளம் தேங்கி நிற்பதற்கும் மண்படை தன்னை வளம்படுத்திக் கொள்ளமுடியாமைக்கும் நீர் தன்னைப் புதுப்பித்துக்கொள்ள முடியாமைக்கும் காரணமாக ஆவதோடு நாங்கள் வளர்க்க விரும்பும் மரங்கள் ஆழமாக வேர்விட்டு வளர முடியாமலும் போகின்றது. எம்மால் பாவனைக்குப்பின் வெளியகற்றப்படும் கழிவு நீர் சரியான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு அகற்றப்படாமையினால் அவை தேங்கி நின்று பல்வேறு நோய்க்காவிகளான நுளம்பு போன்ற உயிரினங்கள் உருவாகி எமது வாழ்வின் ஆரோக்கியத்தையும் பாதிப்பதோடு, உழைப்புத்திறனையும் குறைத்துக் கிடைக்கும் வருமானத்தையும் மருத்துவச் செலவுகளுக்காக செலவழிக்க வேண்டி ஏற்படுகின்றது.

நாம் ஒவ்வொரு கணப்பொழுதும் சுவாசிக்கும் காற்று வெளிவிடப்படும்போது அசுத்தமான கரியமிலவாயுவாக மாறுகின்றது. இதனை மீளவும் சுத்தமான காற்றாக மாற்றுவதற்கு இயற்கை தந்த அரும்பெரும் கொடைகள் தாவரங்கள், மரங்களை வெட்டுதல், காடுகளை அழித்தல், துப்புரவு செய்தல் என்ற பெயரால் மரங்களையும் பற்றைகளையும் வயல் தரைகளையும் கொளுத்தி எரித்தல் என்பன காற்றில் காணப்படும் பிராணவாயுவின் அளவை குறைப்பதற்குக் காரணமாக அமைகிறது. அதனால், காற்றில் மீளவும் அதன் அளவை மாற்றுகின்ற பொறிமுறையை இல்லாமல் அழித்து எம்மை நாமே மூச்சுத்திணறி இறக்கவைக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது.

***வளமோடு வாழ்....***

இந்நிலையில் எதிர்கால உலகம் வளமோடு இருந்திட இயற்கைச் சூழலுக்கும் எம்முடைய வாழ்வுக்கும் இடையிலுள்ள பிரிக்கப்படமுடியாத இணைப்பின் பெறுமதியினை முதன்மைப்படுத்துவோம். உயிரினங்களை உருவாக்கி தாலாட்டி, சீராட்டி வளர்த்தெடுத்து மீளவும் தன்னகத்தே உள்ளீர்த்துக் கொள்வதன் மூலம் அடுத்த தலைமுறைக்கும் அடுத்த தலைமுறைக்கும் அடுத்த தலைமுறையின் வளமான வாழ்வுக்கும் வழி சமைக்கும் இயற்கையின் களைப்புறாத மீள் உருவாக்கல் தன்மையை மேம்படுத்துவோம்.

அபிவிருத்தி, நவீனத்துவம், இலகுபடுத்தல் என்ற காரணங்களுக்காக உருவாக்கப்பட்டு சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொருள்களின் பாவனையை மிக நிதானத்தோடு கையாளுவோம்.

எம்மால் பாவனையின் பின் கழிவுகளாக வெளியகற்றப்படுகின்ற பொருள்கள் கழிவு நீர், காற்று என்பன மீளவும் இயற்கையுடன் ஒன்றித்துப்போகக்கூடிய முறைகளை கண்டறிந்து உருவாக்கி இயற்கையின் இலகுவான தொடர் செயற்பாட்டுக்குப் பலம் சேர்ப்போம்.

இச்சூழல் முன்னோடிவாரத்தில் எல்லோரும் ஒன்றிணைந்து எமது அழுக்கு மூடைகளைச் சுத்திகரித்து அவற்றை ஒழுங்குபடுத்தி உரியமுறையில் அகற்றுவோம்.

அழகுமிகு இயற்கைச் சூழலை எம்மைச்சுற்றிச் கட்டியெழுப்புவதன் மூலமும் அதனை தொடர்ந்து பராமரிப்பதற்கான செயல்முறைகளை எமது அன்றாட வாழ்க்கையில் பெறுமானங்களாகக் கொள்வதன் மூலமும் அரசியல் விடுதலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்ற எமது தேசத்தில் உன்னதமாக மானிட மேன்மை கொண்ட சமூகத்தின் இருப்புக்குச் செழுமையூட்டும் இயற்கையின் பௌதிகச் சூழலினைப் பேணிப் பாதுகாத்து நிலைநிறுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைவோம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

06.10.2005 வியாழக்கிழமை அன்று
யாழ்.பல்கலையில் நடைபெறும் பட்ட
மளிப்பு விழாவில் B.A. கலைமாணிப்
பட்டம்பெற்ற

**திரு. சி. மதனமோகனராஜ்**

அவர்களை மனதார வாழ்த்துவதில்
மகிழ்ச்சி அடைகின்றோம்.

நண்பர்கள்



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 17 - 09 - 1932



ஆண்டவன் அடியில் 10 - 10 - 2004

**திருமதி கௌசலாதேவி தணிகாசலம்**

திதி : சதுர்த்தி (07.10.2005)

கௌ: ரிசங்கர மணி யணிந்து, வீதி வலம் வரு கந் | த
ச ரவணன் தன் பதம் பணிந்துமென், உனையே எண் | ணி
லா வண்யமான அவன் திருமூர்த்தம் வணங்கி, கங் | கா
தே வியவள் தீர்த்த மாடிலென், கவலைதான் தீருமோ வஞ் | ச
வி தியின் சதியிது என் றிட்டாலு முனது திவ்ய கோ | லம்

காணாது தவிக்கின்ற உளம்
சாந்தி பெற வழியேதம்மா?

"தாயகம்", சந்தைவீதி,
உடுப்பிட்டி.

கணவரும்,
குடும்பத்தினரும்.

## நீங்காத நினைவலைகள்

எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி | முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**நா. சி. நாகலிங்கம்**
(முகவர் எரிபொருள் நிரப்பு நிலையம்
சுன்னாகம், தெல்லிப்பழை)

தோற்றம்: 21.08.1915 மறைவு: 04.05.1997



திருமதி
**தங்கமுத்தம்மா நாகலிங்கம்**
(பிரபல செங்கண்மாரி வைத்தியர்
தெல்லிப்பழை)

தோற்றம்: 07.05.1922 மறைவு: 17.10.2004

திதி 07.10.2005

**அன்புடனும் ஆதரவுடனும் எம்மை பெற்று அரவணைத்த அன்புத் தெய்வங்களே நீங்கள் மறைந்து ஆண்டு ஒன்றென்ன, ஆண்டு எட்டென்ன, ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் எம் நினைவலைகள் உங்களுடனேயே**

நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

செல்லாச்சி அம்மையார் வீதி
சுன்னாகம்..

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

18 +plus Youth Savings Account
இளம் பருவத்தினருக்கு அன்புடன்

## 18 Plus இன் இரட்டிப்பு போனஸ்



**மிகவும் வசீகரமான, இளம் பருவத்தினரின் சேமிப்பு திட்டத்தில் இன்றே சேமியுங்கள்.
நவ நாகரிகமான Document Holder ஒன்றை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.**

இன்றைய இளைஞர்களுக்கான வசீகரமான சேமிப்பு திட்டம் 18 Plus கணக்கு ஆகும்.

இச்சேமிப்பு திட்டமானது ஏனைய சேமிப்பு கணக்குகளை விட உயர்ந்த வட்டி வீதமும் பல வகையான அனுகூலங்களையும் கொண்டுள்ளது.

கல்லூரி, பல்கலைகழகம் மற்றும் அலுவலக உபயோகத்திற்கான Document Holder ஒன்று மேலதிக இலவசமாக வழங்கப்படும்.

இந்த நாகரிகமான Document Holder ஐ பெறுவதற்கு இன்றே நீங்கள் அருகிலுள்ள இலங்கை வங்கியில் ஆகக் குறைந்த தொகையான ரூபா. 5000/-* வைப்பிலிட்டு புதிய 18 Plus கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

**விரையுங்கள் கையிருப்பு உள்ளவரை மட்டுமே.**

*விதிமுறைக்களுக்கமைய

BOC
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

# கல்முனையில் இளம் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை; மற்றொருவர் காயம்

## கண்டித்து உடன் ஹர்த்தால் அனுஷ்டிப்பு

கல்முனை,ஒக்.7

கல்முனையில் நேற்று முன்தினம் புதன்கிழமை முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். மற்றொரு வர்த்தகர் படுகாயமடைந்தார். இதைக் கண்டித்து உடனடியாக அங்கு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, கல்முனைக்குடி ஆகிய பிரதேசங்களில் இயல்பு நிலை பாதிப்படைந்தது. பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

கல்முனை பொதுச்சந்தையில் வியாபாரம் செய்யும் பீர் முஹம்மட் வஹாப் (வயது-34) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவர் சுடப்பட்ட சம்பவத்தின் போது கூட இருந்த முஹம்மட் செய்னுல் எனும் வர்த்தகரும் படுகாயமடைந்தார். அவர் ஆபத்தான நிலையில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். பின்னர் பதுளை வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

கல்முனைக்குடியைச் சேர்ந்த இவ்விருவரும் தமது வியாபார நடவடிக்கைகளுக்காக கல்முனை பொதுச்சந்தையை நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்துக் கொண்டிருக்கையிலேயே காலை 6.10 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டிருக்கின்றனர். உயிரிழந்த பீர் முஹம்மட் கல்முனைப் பொதுச்சந்தையில் தேங்காய் விற்பவர். அண்மையில்தான் திருமணம் செய்திருந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக கல்முனைப் பொலீஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (க)

*கல்முனைச் சம்பவத்துக்கு*

# வன்னித் தரப்பு மீது அதாவுல்லா குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.7

கல்முனையில் முஸ்லிம் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு வன்னித் தரப்பாரே காரணம் என்று கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரும் தேசிய காங்கிரஸின் தேசியத் தலைவருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்திருக்கின்றார்.

இச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகத் தாம் விடுத்த ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பிறகு முஸ்லிம்கள் மீது வன்னித் தரப்பாரின் கொடூரச் செயல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்க அவர்கள், வன்னித் தலைமையுடன் செய்துகொண்ட சமாதான ஒப்பந்தம் முஸ்லிம்களைப் பலிக்கடா ஆக்கியிருக்கிறது என்பதை இக் கொடூரச் செயல்கள் நிரூபித்து வருகின்றன.

இதற்குத் துணை போன முஸ்லிம் காங்கிரஸும் அதன் தலைமைத்துவமும் இதை இன்னும் உணர மறுப்பது முஸ்லிம் மக்களுக்குச் செய்யும் பாரிய துரோகமாகும்.

சமாதான உடன்படிக்கையின் பின்னர் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாத கொடூர செயல்களும் அதன் தொடரில் இடம்பெற்ற கல்முனைச் சம்பவமும் வடக்கிலிருந்து கிழக்குப் பிரிவதுதான் சரியான தீர்வாக அமையும் என்பதை மேலும் நிரூபித்திருக்கிறது. இந்தத் தீர்வின் மூலம் தான் கிழக்கில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் நின்மதியாகவும் பரஸ்பரத்தோடும் வாழமுடியும்.

வன்னித் தலைமையும், அதன் அணியினரும் கிழக்கு மக்களின் நின்மதியைக் குலைத்து தமிழ், முஸ்லிம் மக்களிடையே கலவரங்களுக்குத் தூபமிட எத்தனிக்கின்றனர். இதன் மூலம் கிழக்கின் தமிழ் மக்களை வன்னிக் கோட்பாடுகளோடு இசையச் செய்வதே அவர்களின் நோக்கமாகும்.

இந்த உண்மையை புரிந்து கொண்டு, முஸ்லிம் மக்களைப் பொறுமைகாக்குமாறு வேண்டுகிறேன். தமிழ் மக்களும் இந்த ஈனச் செயலின் அர்த்தத்தினைப் புரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். புனித ரமழானின் முதலாவது தினத்தில் துக்கம் அனுஷ்டிக்குமாறும், கிழக்கு மக்களின் விடிவுக்காக பிரார்த் தனைகளில் ஈடுபடுமாறும் அனைவரையும் வேண்டுகிறேன் - என்று உள்ளது. (க)

# முஸ்லிம்களின் ஆத்திரத்தைத் தூண்டிவிடும் சதி வலையில் அவர்கள் விழவேமாட்டார்கள்

## கல்முனைச் சம்பவம் குறித்து ஹக்கீம் அறிக்கை

கல்முனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் முஸ்லிம் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் அதன் தலைவர் ஹக்கீம் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

முஸ்லிம்களின் ஆத்திரத்தைத் தூண்டிவிடும் சதிவலையில் பொறுப்புள்ள - சமாதானம் விரும்புகின்ற - முஸ்லிம் மக்கள் விழவே மாட்டார்கள் என்று ஹக்கீம் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையின் முழுவிவரமும் வருமாறு:-

கல்முனை கடற்கரை வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இரண்டு முஸ்லிம் வர்த்தகர்கள் மீது ஒரு பாழடைந்த வீட்டில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதன் விளைவாக சீனி முகம்மது வஹாப் (வயது - 34) என்பவர் கொல்லப்பட்டுள்ளார் எனவும் எம்.எம். செயினுத்தீன் (வயது - 27) என்பவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் செய்தியறிந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிர்ச்சியடைந்துள்ளது.

இந்நாட்டின் முஸ்லிம் சமூகம் தீர்க்கமாகச் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டியுள்ள காலகட்டம் இது. இப்படியான வேளையில் துப்பாக்கிப் பிரயோகமும், அதன் விளைவான மிலேச்சத்தனமான படுகொலைச்சம்பவங்களும் இடம்பெறுவது நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவரவும், முஸ்லிம் சமூகத்துக்கு சுயாட்சி உரிமையை நிலைநாட்டுவதற்கும் மேற்கொள்ளப்படும் பேச்சுகளுக்குத் தடையாக அமைந்துவிடும் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கருதுகின்றது.

நெருக்கடியான அரசியல் சூழ்நிலைகள் மிகுந்துள்ள இக்காலகட்டத்தில் நடைபெற்றுள்ள இந்தத் துப்பாக்கிப் பிரயோகமும் படுகொலைச் சம்பவமும் முஸ்லிம் மக்களது ஆத்திரத்தையும், ஆவேசத்தையும் தூண்டி அவர்களை அசம்பாவிதங்களுக்குள் தள்ளிவிட எடுக்கப்பட்ட எத்தனமாகவும் இருக்கலாம். தூரநோக்கும் சமாதான விருப்பும் கொண்ட முஸ்லிம்கள் இச்சதி வலைக்குள் சிக்கிக்கொள்ளமாட்டார்கள் என்பதை இச்சம்பவத்தின் பின்னணியில் உள்ள சக்திகள் புரிந்து கொள்ளவேண்டும்.

இப்படுகொலையின் பின்னணியில் உள்ள சக்தி எதுவாக இருந்தாலும், இச்சக்தியின் நோக்கம் தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவைச்சீர்குலைப்பதாகவே அமைந்திருக்கிறது என்பதைச் சகலரும் மனதில் கொள்ளவேண்டும். இச்சக்திகளை முறியடிப்பதும், தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் உள்ள சுமுகநிலையை, அவ்வப்போது இவ்வாறான கொலைகளின் மூலம் சீர்குலைக்க முயலும் சக்திகள் இதில் வெற்றியடையாமல் பார்த்துக் கொள்வதும் சகலரினதும் கடமையாகும்.

அரசு உடனடியாக முஸ்லிம் மக்களின் - விசேடமாக, கல்முனைப்பகுதி மக்களின் - பாதுகாப்புக்குரிய ஏற்பாடுகளைச் செய்வதோடு, குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிப்பதற்கும், இதன் பின்புலத்தில் செயற்படும் சக்திகளை அடையாளம் காண்பதற்கும் அவசர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முகம் கொடுக்கும் இக்கால கட்டத்தில் இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் மூலம் குரோத உணர்வுகளைத் தூண்டிவிட்டு, அதன் வாயிலாக முஸ்லிம்களை விசனமும் ஆத்திரமும் அடையவைத்து, அரசியல் பிழைப்பு நடத்தும் நாடகம் அரங்கேறுமாக இருந்தால் இதை மிகவும் கீழ்த்தரமான அரசியல் சந்தர்ப்பவாதம் வேறு எதுவும் இருக்க முடியாது. இப்படியான அடிப்படையில் அரசியல் செய்யும் சிலர் விடுக்கும் அறிக்கைகளையும் மக்களால் மன்னிக்க முடியாது. இவ்வாறான படுகொலைகளில் ஈடுபட்டு மீண்டும் யுத்தத்திற்குச் செல்கின்ற கைங்கரியத்தைச் செய்வதன் மூலம் தமது இலக்குகளை அடையும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சக்திகளை மக்கள் அடையாளம் கண்டுகொள்வார்கள்.

முஸ்லிம் சமூகத்தின் புனிதமான இந்த ரமழான் மாதத்தின் நோன்பு ஆரம்பமாகின்ற நாள் தொடக்கம் இந்த மாதத்தின் பெருமையைக் காத்து இறைவனிடம் இறைஞ்சுவதன் மூலம் எமக்கெதிரான சக்திகளுக்கு முகங்கொடுக்கும் வல்லமையைப் பெற அவனிடம் பிரார்த்திக்குமாறு சகல முஸ்லிம்களிடமும் கேட்டுக் கொள்கின்றேன். - என்றுள்ளது. (க)

# முஸ்லிம்களின் படுகொலைகளுக்கே புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகுத்தது!

## அமைச்சர் அமீர் அலி கண்டனம்

புரிந்துணர்வு ஒப்பந்தம் முஸ்லிம் சமுதாயத்தில் படுகொலைகளும் மரணங்களும் நிகழவே வழி செய்திருக்கின்றன. இதனைக் கல்முனை முஸ்லிம் இளைஞனின் படுகொலை நமக்குத் தெளிவாக உணர்த்தியிருக்கின்றது.

- இவ்வாறு புனர்வாழ்வளிப்பு, மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர்அலி தெரிவித்துள்ளார்.

கல்முனையில் நேற்றுமுன்தினம் காலை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த இளைஞனின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள வருகைதந்திருந்த அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்முனை இளைஞர் கொலை பற்றி அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

''மக்களது நிம்மதியானதும் அமைதியானதுமான வாழ்க்கையை எதிர்பார்த்தே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றன. துரதிஷ்டவசமாக கடந்த காலத்தில் இந்நாட்டில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மரணங்கள் மலியவே வழிசெய்திருக்கிறது. குறிப்பாக முஸ்லிம் சமுதாயம் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. என்பதற்கு இந்தப் படுகொலை தெட்டத் தெளிவாக ஆதாரமாக இருக்கிறது.'' - என்று தெரிவித்தார். (க)

# வலிகாமம் வடக்கு, தெற்குப் பகுதிகளில் சுற்றுச்சூழலைப் பேண பல திட்டங்கள்

வலி.தெற்கு,ஒக்.7

சர்வதேச சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு வலிகாமம் தெற்கு, வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவுகளில் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சுன்னாகம் கதிரமலை சிவன் கோயில் மணிமண்டபத்தில் வலி. தெற்கு பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இப்பிரதேச எல்லைகளுக்குள் சுற்றுப்புறச் சூழல் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

வலி.தெற்கு, வலி.வடக்குப் பிரதேச சபைகளின் செயலாளர்கள், தேசிய நீர் வழங்கல் அதிகாரசபை அதிகாரிகள், விவசாயப் போதனாசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள், மதகுருமார்கள், பொதுநிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

வலி.தெற்கு, வலி.வடக்கு பிரதேசசெயலர் பிரிவுகளில் மண்ணின் சூழலைப் பாதிக்கும் - சமநிலையைக் குழப்பும் - அனைத்துத் திண்ம, திரவக் கழிவுப் பொருள்களையும் அகற்றி சூழலைப் பாதுகாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சூழலைப் பாதுகாக்கும் செயற்றிட்டங்களைச் சமூக அமைப்புகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் மற்றும் கூட்டுறவுத்துறையினர், கல்வி நிலையங்கள், பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள், சூழலியலாளர்கள், பொதுமக்கள் எனச் சகல தரப்புகளும் இணைந்து முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்டாக்காலிநாய்கள், பாதீனியம், கொல்களங்கள், ஒலிபெருக்கிப் பாவனை, பொலித்தீன் பாவனை போன்றவற்றால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசடைவைத் தடுக்கும் பல்வேறு நடவடிக்கைகள் இன்று முதல் மேற்கொள்ளப்படவுள்ளன.

சுன்னாகம், மருதனார்மடம் போன்ற பொதுச்சந்தைகள், பொதுவீதிகள் போன்ற இடங்களில் சேரும் குப்பை கூழங்களைச் சேகரித்துப் பசளைகளாக்கி தோட்டங்களுக்குப் பயன்படுத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது. மருதனார் மடம், கோப்பாய், புன்னாலைக்கட்டுவன், கட்டுவன் போன்ற பகுதிகளில் பரவியுள்ள பாதீனியத்தைக் கட்டுப்படுத்துவதற்கான ஒழிப்பு மருந்துகள் விசிறப்படவுள்ளன. பொது இடங்களிலும் தனியார் காணிகளிலும் வளர்ந்துள்ள பாதீனியங்களை அழிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சட்ட விரோதமாகக் கால்நடைகளை வெட்டி விற்பனை செய்யும் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல், கொல்களங்களைச் சுத்தமாக வைத்திருத்தல், வாகனங்களுக்கு மண்எண்ணெய் விநியோகிப்பதைக் கண்காணித்தல், சூழலைப் பாதிக்கும் விதத்தில் ஒலிபரப்பு செய்யும் ஆலய நிர்வாகிகள், ஐஸ்கிறீம் வாகன உரிமையாளர்கள் ஆகியோரை அழைத்து ஆலோசனை வழங்கி ஒலிபரப்பு நேரம், அளவு என்பவற்றைக் குறைத்தல், பாடசாலைகள், அரச காரியாலயங்களில் பொலித்தீன் பாவனைகளை அகற்றுதல் போன்ற பல்வேறு சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வலி.வடக்குப் பிரதேசத்தில் பிரதேச செயலகம், பிரதேசசபை ஊழியர்கள் சகலரும் தமது அன்றாடவேலைகளைக் குறைத்து இந்நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. சிரமதான அடிப்படையில் குப்பை கூழங்கள் சேகரிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்படவுள்ளன.

உலக சூழல் பாதுகாப்புத் தினத்தை ஒட்டி பல்வேறு இடங்களிலும் பயனுள்ள மரங்களை நடவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. (ஐ-152)

# சாரணர் பாசறை

கிளிநொச்சி,ஒக்.7

கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் வருடாந்தப்பாசறை கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு அருகேயுள்ள சந்திரன் பூங்காவில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகிறது. எதிர்வரும் 10ஆம் திகதி வரை இப்பாசறை நடைபெறும்.

இதேவேளை, குருளைச் சாரணர் வருடாந்த விழா எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும். இதற்குரிய ஏற்பாட்டை உதவி மாவட்ட ஆணையாளர் குருளையர் திருமதி ஆர்.ஜே.பி. சேவியர் மேற்கொண்டுள்ளார். (ஒ)

# வீதி விபத்தில் மாணவன் காயம்

சாவகச்சேரி,ஒக்.7

சாவகச்சேரி டச்சுவீதி, கணேசு கடைச் சந்தியில் கடந்த 4ஆம் திகதி நண்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - லொறி விபத்தில் சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் அரவிந்தன் (வயது-22) என்ற பல்கலைக்கழக மாணவன் படுகாயமடைந்தார். காயமடைந்த மாணவன் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஒ-31)

# Jaffna Study Center of Colombo Theological Seminary

கொழும்பு இறையியல் கல்லூரி, யாழ். நிலையம்

*கிறிஸ்தவ ஊழியர் பயிற்சிநெறி*

வேதாகம வியாக்கியானம் (பகுதி - I )
(Hermeneutics - I)
விரிவுரையாளர்: Bro. Cedric Beno
திகதி: 10-14 ஒக்ரோபர் 2005காலை 9 - 2 மணி வரை

வேதாகம வியாக்கியானம் (பகுதி - II )
(Hermeneutics - II)
திகதி: 24-29 ஒக்ரோபர் 2005 காலை 9 -2 மணி வரை
இடம்: C.T.S - Jaffna Center,
32/1, வீதானையார் ஒழுங்கை, கண்டுக்குளி, யாழ்.நகர்.

பட்டதாரிகளிற்கு இப் பாடம் கட்டாயமானது. இரு பிரிவும் கற்றுக்கொள்பவர்கள் மட்டுமே இப்பாடத்தினைப் பூரணமாக நிறைவு செய்ததாக ஏற்றுக்கொள்ளப்படும்.

(26-11-17) (40900)



## புதிய பிரிவு ஆரம்பம்

★ இந்து தர்மாசிரியர் தேர்வு -2005
★ வ/கி மாகாண பொதுச் சேவைப் பதவிகள்
★ வெளிக்கள போதனாசிரியர்கள்

*வழிகாட்டல் வகுப்புகள் ஆரம்பம்*
*08-10-2005 -9 a.m.*
அச்சடித்த பாடக்குறிப்புகள் வழங்கப்படும்
சனி, ஞாயிறு - 9-2மணிவரை

உயர் கற்கைகள் பட்டப்படிப்புக் கல்லூரி
D.C.S *342, ஸ்ரான்லி வீதி,*
நியூட்டன் *ஆரியகுளம் சந்தி அருகில்,*
*யாழ்ப்பாணம்.*

(46-26-11-17) (40933)


## பாராட்டுகின்றோம்

(சமுர்த்தி மகா சங்கத் தலைவர் )

**திரு.R.குமாரகுலசிங்கம்**



சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சமுர்த்தி மகா சங்கத்துக்கான பொதுச்சபையின் 25 தலைவர்களைக் கொண்ட அங்கத்தவர்களால் 16.09.2005 இல் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கத்தின் முன்னிலையிலும், சமுர்த்தி அதிகார சபை அதிகாரி முன்னிலையிலும், சமுர்த்திப் பொதுத்தலைமையக முகாமையாளர் முன்னிலையிலும் சமுர்த்தி வங்கி முகாமையாளர், வங்கி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் முன்னிலையிலும் மகா சங்கத் தலைவராக ஏகமனதாக உயர்திரு. இராஜகுலசேகரம் குமாரகுலசிங்கம் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் மேலும் பல சமூக சேவைகளிலும், சமயத் தொண்டுகளிலும், ஈடுபட்டமைக்கு இவரை சமுர்த்திச் சமூகம் பாராட்டுவதோடு, இவரின் சேவைகள் மேலும் மேலும் சிறப்படைய எல்லாம் வல்ல அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை வேண்டுகின்றோம்.

*பாராட்டுபவர்கள்:*
**தலைவர்,**
**சுதுமலை வடக்கு, தெற்கு**
**விவசாய சம்மேளனமும்**
**சுதுமலை வாழ் மக்கள் சமூகமும்.**

(40908)(32-26-11-17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (07-10-2005) இல் நடைபெறும் யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் எமது ஆசிரியர்களான,

*கல்வியியல் முதுமாணிப்பட்டம்*
*பெறும்*
**திரு.வே.சந்திரசேகர்**
*(உப அதிபர்)*



*பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெறும்*
**திரு.ந.தவசோதிநாதன்**
ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**கல்லூரிச் சமூகம்,**
**யா/யூனியன் கல்லூரி - தெல்லிப்பழை,**
**யா/ பொன்பரமானந்தர் ம.வி.,**
**குரும்பசிட்டி.**

*(40878)(26-11-17)*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வி.ஜோன்பில்லர்
B.B.A.(Hons) HRm
Spl, HNDA



இ.பிரபேஸ்கண்ணன்
B.Com. (MKT) Spl.



ஜெ.சுஜேந்திரன்
B.A.



செ.சுரேந்திரா
B.A.

*104, தபால்பெட்டிசந்தி,*
*பலாலி றோட்,*
*திருநெல்வேலி.*

*வாழ்த்தும்-* Room *நண்பர்கள், நிரேஷ், செந்தூர், சுதா, கீர்த்தி (4TH), எழில், ஞானி, புஷ், நந்தன், ஜெயந்தன், சற்கு, தர்சன் (3 rd)*

*(40904)(26-11-17)*

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

*இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கான முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் - 2005*

மேற்படி பரீட்சைகள் (மீள் பரீட்சை உட்பட) 12.10.2005 திகதியன்று ஆரம்பமாகும்.

கலைப்பீட மற்றும் இராமநாதன் நுண்கலைக்கழக முதலாம் வருட மாணவர்களுக்கான முகாமைத்துவம், சமூக நல்லிணக்கம் ஆகிய பாடங்கள் முறையே 18 ஆம், 19 ஆம் திகதிகளில் பி.ப.2.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை நடைபெறும்.

மாணவர்கள் கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப்பலகையில் பரீட்சை நேர அட்டவணையைப் பார்வையிடலாம்.

05.10.2005

(சி/45463)(26-11-17) **பதிவாளர்.**


## சாரதிகள் தேவை

நான்குசக்கர உழவு இயந்திரம்,
இரண்டு சக்கர உழவுஇயந்திரம்
செலுத்தக் கூடிய சாரதிகள்
தேவை.
தேவையானஆவணங்களுடன்
நேரில் வரவும்.
**ஜலின்ஸ்**
6 ,நல்லூர் குறுக்கு ே ீ,
யாழ்ப்பாணம்.

(40895)(26-11-17)



**DIPLOMA IN COMPUTER HARDWARE CLASSES**

**SPEED BATCH ONLY 4 WEEKS**

GROUP CLASSES

Only For 10 Office Staffs
Days:- Wed, Thurs, Fri, Sun.
Time:- 6.00p.m
Fees:-1500/=

Batch Starts on 09-10-2005

**C.B Computer Academy**
T.P No. 021-4590291 Station Road, Kondavil.


### பாடசாலையில் தண்ணீர்த் தொட்டி அமைப்பு

வலி. தெற்கு, ஒக்.7

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் மாணவர்களின் குடி தண்ணீர் பாவனைக்கென வலிகாமம் வலயக் கல்வித் திணைக்களத்தின் சிபார்சுடன் குடி தண்ணீர் தாங்கி ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

'யுனிசெவ்' நிறுவனம் இந்தத் தண்ணீர்த் தாங்கியை அமைத்துக் கொடுத்துள்ளது. இதன் காரணமாகப் பாடசாலை மாணவர்கள் நீண்ட நாள்களாக குடி தண்ணீர் பெறுவதில் இருந்து வந்த சிரமம் நீங்கி உள்ளது.

(ஜ-152)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## POST OF VICE-CHANCELLOR

The Council of the University of Jaffna, Sri Lanka acting in terms of Section 34 of the Universities Act. No. 16 of 1978 and subsequent amendments, invites applications or nominations for the Office of the Vice Chancellor. The appointment is for a period of 3 years from the date of appointment or until he/ she has completed the 65th year of age, whichever event occurs earlier.

The vision of the University of Jaffna is to be a leading centre of excellence in leadering, teaching, and research in the Northern Region of Sri Lanka. It priorities service in the country and in Higher Education and also takes research initiatives for social development in this region. The University has six Faculties and a Campus at Vavuniya, providing professional and accredited teaching programmes to a population of approximately 6000 undergraduates and 1000 postgraduates and extension programmes. The Vice Chancellor is expected to strengthen and support these activities with the view to develop this region.

The Vice Chancellor shall be a full-time officer and shall be the Principal Executive Officer and Principal Academic Officer. He shall be an ex-officio member and Chairman of both the Council and the Senate. The Vice Chancellor shall be the Accounting Officer of the University. He / She shall be responsible for the maintenance of discipline within the University. It shall be the duty of the Vice Chancellor in accordance with such directions as may from time to time be lawfully issued to him/ her in that behalf by the Council, to ensure that the provisions of the Universities Act and of any appropriate instrument are duly observed, and he/she shall have and may exercise all such powers as he / she may deem necessary for the purpose.

The Vice Chancellor is responsible for providing academic leadership formulating, introducing and carrying out a streamlined management policy. He / She is expected to maintain transparency and accountability in the management of the affairs of the University. The Vice Chancellor is also expected to be committed to maintain academic excellence and should possess an understanding of the needs of the students and the staff. The applicant is expected therefore to be a person of high calibre and integrity with a record of out-standing achievement, excellent communication skills and an ability to develop the diverse interests of the students and staff. The applicant/ nominee is also expected to exhibit an understanding of the mission of the University of Jaffna, including its obligations to the community.

The Vice Chancellor shall have
(i) Outstanding academic accomplishments;
**AND**
(ii) Leadership in academic as well as administrative matters as judged by experience in the administration of academic and other institutions, research groups and professional societies.

The Vice Chancellor will receive in addition to his salary (which is equivalent to that of a Senior Professor), a 10% entertainment allowance and a residential allowance.

Applications/ nominations should be addressed to the Secretary to the Council, Office of the Registrar, University of Jaffna, Thuunelvely, Jaffna and sent under registered cover to reach the above office or hand delivered on or before 18.11.2005.

The following documents should accompany the application.

(i) A copy of the curriculum vitae of the applicant / nominee.
(ii) A personal statement of a vision for the development of the University and a brief account of what the candidate / nominee proposes to achieve if appointed. Where the present incumbent is an applicant, he / she should in his / her report highlight the contribution made to the development of the University during his term of office and plans for the future.
(iii) A letter of consent from the person concerned in case of nomination.
(iv) A letter from the employer mentioning whether the applicant/ nominee could be released in the event of his/her appointment to the post.
(This will apply to applicants/ nominees from the Higher Educational Institutions other than the University of Jaffna, Public Service, Corporations and Statutory Boards)

The envelop containing the application / nomination must be marked "Post of Vice Chancellor" on its top left hand corner.

Applications received after the closing date will not be considered.

**Secretary to the Council**
**University of Jaffna**
**04.10.2005**

**Office of the Registrar**
**University of Jaffna**
**Thirunelvely**
**Jaffna**

(சி/45457)

## ஆசிரியர்களுக்குப் பாராட்டுவிழா

யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் நடாத்தும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்களுக்கான பாராட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். இந் துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் 'பேரவைத் தலைவர் செல்வி தி. பெரியதம்பி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக பேராசிரியர் சபா. ஜெயராசாவும் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-(13)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.இராசையா சுதாகரன்**
B.B.A. (Special in Finance)

அவர்களுக்கு இன்று (07.10.2005) யாழ். பல் கலைக்கழகத்தில் பட்டம் பெறும் இவரை மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகிறோம்.

மகா சில்க்ஸ், பியூட்டி சில்க்ஸ், கவுஸ் ஒவ் செலெக்ஷன். (C/45449) நண்பர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளில் கிரந்திரோகமும் அதில் கிரந்தி எண்ணெயின் செயற்திறன் பற்றிய ஆய்வை மேற்கொண்டு அதனை யாழ். பல் கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்ததன் பயனாக இன்று (07.10.2005) வெள்ளிக்கிழமை முதுதத்துவமாணி (M.Phil) பட்டத்தினைப் பெறும் பிரபல வைத்தியர் **கணேஷ் ஸ்ரீதரன்** அவர்களை, அவர் தம் உயர்கல்வியில் சிறந்து விளங்க வாழ்த்துகின்றேன்.

கருவேலடி லேன், கொக்குவில். (40776)(51-) நண்பன் K.S. துரைரெத்தினம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**டாக்டர் குமுதினி ஸ்ரீஸ்கந்தசிங்கம்**

இன்று(07.10.2005) வெள்ளிக்கிழமை சித்தமருத்துவமும் சத்திரசிகிச்சைமாணி மருத்துவப் பட்டத்தைப் பெறும் கரணவாய் மத்தி கரவெட்டியைச் சேர்ந்த "டாக்டர்" குமுதினி ஸ்ரீஸ்கந்தசிங்கம் அவர்களை இத்துறையில் மேலும் பட்டமும் புகழும் பெற்றுச் சிறந்து விளங்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் நாமும் அவரை உளமார வாழ்த் துகிறோம். திரு.திருமதி நடராசா, கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

(C-45411)(51-11-45)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாலய அதிபர் உயர் திரு.
**ஆ.குமரேசமூர்த்தி**
[B.A.(Hons).Pol.Sc,M.A(Hons)Pub.Adm, M.Ed, P.G.Dip.in.Ed (Merit),Sp.Sc.Trd, SLPS Class2 Grade II]
அவர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறும் பொதுப்பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுமாணிப் பட்டம் (M.Ed.) பெறுவதை முன்னிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இன்னும் பல பட்டங்களையும் பதவி உயர்வுகளையும் பெற இறைவனை வேண்டுகின்றோம்.

யா/வியாவில் சைவ வித்தியாலயம் காரைநகர். ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்,பழைய மாணவர்கள்.

## கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

வலி. வடக்கு, ஒக். 7

உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இறுதியாட்டத்திற்கு ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளை ஞர் விளையாட்டுக்கழகமும் தகுதி பெற்றுள்ளன. ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகத்திற்கும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்திறகும் இடையே இடம்பெற்ற போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக அணி 25:23,25:22.,25:20 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி கொண்டது.

மற்றோர் அரை இறுதி ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாடடுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளை ஞர் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஐந்து சுற்றுக்களில் 23:25,20:25,25:20.25:22, 15:13 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றிபெற்று இறுதி ஆட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டது. (ஓ-86)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.ஒக். 7

அரியாலை கரபந்தாட்ட ரசிகர்களின் ஏற்பாட்டிலான மின் ஒளியிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இரவு எட்டு மணியளவில் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கே.கே.எஸ். விளையாட்டுக்கழகமும் மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (ஓ-190)

* * *

யாழ்ப்பாணம்,ஒக். 7

யாழ்ப்பாணக் கல்விக் கோட்டப்பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்று காலை 8.30 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

*12 வயதுப் பிரிவு:*
நாவாந்துறை றோ. க.வி.எதிர் புனித ஜேம்ஸ் ம.வி.புனித ஜோசப் றோ.க.வி, எதிர் யாழ் மத்திய கல்லூரி யாழ். வைத்தீஸ் வராக் கல்லூரி, எதிர் நாவாந்துறை றோ.க. வி, புனித ஜேம்ஸ் மகாவித் தியாலயம் எதிர் வைத்தீஸ் வராக் கல்லூரி. (ஓ-190)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இன்று பொறியியலில் முதுதத்துவமாணி பட்டம் பெறும் பெரிய பளை,பளையைச் சேர்ந்த **அ.கேதீஸ்வரன்** அவர்கள் மென்மேலும் பட்டங்கள் பெற்று, கல்வியில் உயர்ந்தோனாகி இந்த மண்ணும் மக்களும் அவரால் எழுச்சியடைய வாழ்த்துகின்றோம்.

பெரியபளை, பளை. (40869) திரு.திருமதி செல்லையாவும் பிள்ளைகளும்.

## வாழ்த்துகின்றோம்



**நாகேஸ்வரன் லவணன்**

இன்று 07.10.2005 நடைபெறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 24 ஆவது பட்டமளிப்பு விழாவில் கணனி விஞ்ஞான சிறப்புப் பட்டம் பெறும் எங்கள் அன்பு அண்ணன் **நாகேஸ்வரன் லவணன்** அவர்கள் இன்னும் பல உயர் பட்டங்கள் பெற்று எதிர்காலத்தில் சிறப்படைய எமது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி. (40888)(11-45-51) அன்புத் தங்கைகள் வாணி,மேனகா,ரம்மியா.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**சிவசுப்பிரமணியம் உமாபாலன்**

தென்மராட்சிப் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. **சிவசுப்பிரமணியம் உமாபாலன்** இன்று நடைபெறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பண்பாட்டியல் முதுகலைமாணிப் பட்டம் (M.A.Culture) பெறுவதனைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் உத்தியோக ரீதியிலும் கல்விரீதியிலும் பல மேன்மைகளைப் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்

(C/40920)(11-45-51) உறவினர்களும், நண்பர்களும்.

## பல்லாண்டு வாழி! வாழி!!



**திரு. பொன்னம்பலம் இராமநாதன்**
சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில் கலாநிதிப்பட்டம் பெறுகின்ற

இவர்களைப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவதுடன், மேன்மேலும் சிறப்புற தாவடி அருள்மிகு அம்பலவாண வேதவிநாயகனை இறைஞ்சுகின்றோம்.



**திருமதி கலைவாணி இராமநாதன்**
இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்

திரு திருமதி பரந்தாமன் தம்பதிகள். இணுவில்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**வி.துஷ்யந்தன் B.Sc**



**க.வேணுகோபன் B.Sc**

எமது சிவபூமி பாடசாலை ஆசிரியர்களுக்கு கணனிப் பயிற்சி வழங்கி சிவபூமிக்கு பெருமை சேர்த்த கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த கணேசன் வேணுகோபன் B.Sc. கந்தரோடை, சுன்னாகத்தைச் சேர்ந்த விநாயகமூர்த்தி துஸ்யந்தன் B.Sc. ஆகிய இருவரும் இன்று(07.10.2005) வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பட்டமளிப்பு விழாவில் பௌதிக விஞ்ஞானத்துறையில் பட்டம் பெற்று வெளியேறுவதையிட்டு அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்கள் மேலும் சிறப்புப பட்டங்கள் பெற்று எமது தாய்த்திருநாட்டிற்குப் பணிபுரிந்து உயர்வுறவேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனின் ஆசிகளை வேண்டுகின்றோம்.

சிவபூமி பாடசாலை மாணவ, மாணவிகள்,சிவபூமி அதிபர், ஆசிரியர்கள்,பணியாளர்கள். சிவபூமி அறநிலைய நெறியாளர்கள்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Pulsar (பள்சர்) DTSI 180 நீலம் HU xxx விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777252098 (40861)

புதிய Canon N 550 Original Camera Two zoom Lens உடன் விற்பனைக்குண்டு. மேலதிக விவரங்களுக்கு: 0779586961, 0777872914 அ (40953)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மிற்சுபிசி லான்சர் 13-xxxx தொடர் இலக்கமுடைய A/C பவர், பவர் மிரர், பவர் ஸ்ரோரிங், பவர் எக்கணமி ஏஜஸ் டலங் சீட் புல் அபோஸ்டின் வெள்ளை றக் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 109, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
T.P.: 0717135135, 0714 278923 (40947)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, கருவேலடி வீதியில் யாழ்.பல்கலைக்கழகத்திற்குச் சமீபமாக 1¾ பரப்பில் குழாய்க்கிணற்றுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: காஞ்சனா பிரேம்குமார், கருவேலடி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். T.P.No.: 021-4590359 (40779)

## வீடு, காணி விற்பனைக்கு

சுதுமலை தெற்கு, குருந்தடிப் பிள்ளையார் கோயிலடியில் கல் வீட்டுடன் சேர்ந்த நிலப்பரப்பு01உம் 7/8உம் விஸ்தீரணம் கொண்ட காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும். 077-6110781 (40894)

## அமெரிக்க விசா

55050 அமெரிக்க விசா லொத்தர் Lateat விண்ணப்ப விவரங்களை இலவசமாகப் பெற சரியான விலாசத்துடன் தொடர்பு கொள்க. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரிய வாய்ப்பு. Penquin Book Shop, $B_2/F_{23}$ Bloemendhal flats, Colombo-13. T.P.:077 3081764, 2438367 Inter net மூலம் அமெரிக்காவிற்கு அனுப்பி Receipt அனுப்பப் படும். (சி/45719)

## ஜோதிடம்

கைரேகை, ஜாதகம் கொண்டு உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்துகொள்ளவும் உங்கள் வாழ்வில் வெற்றி பெறவும் ஆலோசனை பெற்றுக்கொள்ளவும் ஒருமுறை நாடுங்கள். இந்தியப் பரம்பரை ஜோதிடர் அருள்வாக்கு அம்பிகா அம்மா, 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (40752)

## தவறிவிட்டது

ச.ஜெயச்சந்திரன் என்பவருடைய தே.அ. அட்டை (470805536V), விசேட அ.அட்டை, ஒரு பூட்டுத் திறப்பு என்பன அடங்கிய வெள்ளைநிற தோள் பை 05-10-2005இல் வரணிச் சந்தைக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திரு.செ.மகாலிங்கம் பத்தர், மெயின் வீதி, இடைக்குறிச்சி, வரணி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (40949)

## GYM விற்பனைக்கு

யாழ். நகரில் பிரபல Gym (உடற்பயிற்சி நிலையம்) விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776450299 (40862)

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம்,ஒக்,7

சிவபூமி சிறுவர் மனவளர்ச்சிப் பாடசாலையின் நவராத்திரி விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் தம்பதிகளும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்ரன், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த திருமதி ஞானச்செல்வி ஆகியோரும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் கரகாட்டம், கோலாட்டம், நடனம், பேச்சு, தனிநடனம், ஆசிரியர் நடனம், ஆசிரியர் நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (202)




### பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (07-10-2005) வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் தொழில் நிர்வாகமாணி பட்டம் பெறும் திருமதி சிவஸ்ரீ இராதாகிருஷ்ணா (B.B.A, H.N.D.A.) அவர்களைப் பாராட்டி மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

செருக்கம்புலம், தெல்லிப்பழை. - சகோதரர்கள்.

(40955)(24-17-15)

### பட்டமளிப்பு விழா வாழ்த்துக்கள்



திரு.த.சுதர்சன் (B.B.A.)

…ழ்.பல்கலைக்கழகத்தில் இன்று (…0-2005) நடைபெறும் 24ஆவது பட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாகமாணி நிதி முகாமைத்துவத்தில் பட்டம் பெறும் இவரை மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகிறோம்

வாழ்த்துவோர்: அன்பு உள்ளங்கள்.

(40946)(46-17-15-24)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



CCHS, ஆலோசனைக் குழ உறுப்பினரான,

அருட்திரு. விக்டர் பிலேந்திரன்

யாழ். பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெறுவதையிட்டு நாம் எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

CCHS
இயக்குநர், இதர ஆலோசனைக்குழவினர், பதிவாளர், நிர்வாகிகள், மாணவர்கள்.

(40939)(26-17-15-24)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் 06-10-2005 நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் 10A, வைமன் வீதி, நல்லூரைச் சேர்ந்த திருமதி ரேனுகா சுரேந்திரகுமாரன் அவர்கள் B.Sc. Agriculture Second upper பட்டம் பெற்றதையிட்டு வாழ்த்துவதோடு, அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வு பெற மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு .திருமதி பத்மநேசன் (குடும்பத்தினர்),
திரு. திருமதி சுந்தரலிங்கம் (குடும்பத்தினர்),
திரு.திருமதி வீரசிங்கம் (குடும்பத்தினர்).
(121/A, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்)

(40948)(46-17-15-24)

### மனம் மகிழ வாழ்த்துகிறோம்



வேதநாயகம் வில்சன் B.Sc.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று (07-10-2005) வெள்ளிக்கிழமை விஞ்ஞானமாணிப் பட்டம் பெறும் இவரை மேலும் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

சின்னக்கா குடும்பத்தினர். கல்வியங்காடு.

(40937)(46-17-15-24)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.கந்தையா புஸ்பராசா



இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் முதுகல்விமாணிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படும் எமது ஆசிரியர் திரு.கந்தையா புஸ்பராசா அவர்களைப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். கல்வித்துறையில் இவர் மென்மேலும் சிறந்து விளங்க மனமுவந்து வாழ்த்துகிறோம்.

ஆசானவை
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

(40917)(46-17-15-24)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



சங்கானை ஜேப்ரீற்றர் கழகத்தின் செயலாளர் திரு .கனகராஜா கஜநேசன் அவர்கள்

இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 24ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாகமாணி (B.B.A, Sp.in - F.M) பட்டம்பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதோடு, அவர் மேன்மேலும் வளர்ச்சியடைய கழகச் சமூகம் வாழ்த்துகின்றது.

ஜேப்ரீற்றர் கழகம், சங்கானை.

(40950)(46-17-15-24)


## மழைக்காகக் காத்திருக்கும் விவசாயிகள்

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் மழை உரிய காலத்தில் பெய்யாததினால் காலபோக நெல் விதைப்பு பாதிக்கப்பட்டுள்ளது. கிணறு வசதியுள்ள விவசாயிகள் நீர் இறைத்து நிலத்தை நனைத்து உழுது நெல் விதைப்பை மேற்கொண்டு வருகின்றனர். கிணறு வசதியில்லாத பகுதிகளிலுள்ள நெற்காணிகளில் நெல் விதைப்பை மேற்கொள்ளமுடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். புழுதி விதைப்பை மேற்கொண்டால் விரைவில் மழை பெய்யாதவிடத்து விதைத்த நெல் முளைக்காது அழிவடைந்துவிடும் என்று விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதனால் காலபோக நெல் விதைப்பை மேற்கொள்ள மழையை எதிர்பார்த்து பெரும்பாலான விவசாயிகள் காத்திருக்கின்றனர். (ப-135)


### மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினரின் இதயபூர்வ நல்வாழ்த்துக்கள்

We Serve

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று (07-10-2005) வெள்ளிக்கிழமை நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கௌரவ கலாநிதி பட்டம் பெறும் முன்னாள் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் லயன் வைத்திய கலாநிதி (செல்வி)

நவமலர் கனகரத்தினம்



அவர்களுக்கு மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகத்தினராகிய நாங்கள் இதயபூர்வ வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவரது லயன்ஸ் கழக சேவைகளும் வைத்தியத்துறை சார்ந்த சேவைகள் மற்றும் சமய, சமூக சேவைகளும் மேலும் தொடர எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லயன் ச.ஸ்ரீநிவாசன் தலைவர். லயன் எஸ்.எஸ்.தங்கராஜா செயலாளர்.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம்.

(சி/45472)(17-15-24)

### UNIVERSITY OF MADRAS

INSTITUTE OF DISTANCE EDUCATION

சென்னை பல்கலைக்கழகம்

தேசிய தரமதிப்பீட்டு குழுவால் ஐந்து நட்சத்திர தகுதியும், பல்கலைக்கழக நல்கை ஆணையத்தால் உயர்திறன் மையம் என்ற தகுதியும் பெற்றது'

2005 - 2006 கல்வி ஆண்டிற்கான அனுமதி சேர்க்கை அறிவிப்பு

Regular University Stream
முறைசார் பல்கலைக்கழக அமைப்பு

A/L 3 பாடங்களில் தேர்ச்சி (Maths,Bio-Science,. Commerce, Arts)

தமிழ் மொழி மூலம் 3 ஆண்டு பட்டப்படிப்பை தொலைதூரக் கல்வி மூலம் தொடரலாம்.

UNDERGRADUATE
3 Year Degree Programme

| | |
|---|---|
| B.Com | Bachelor of Commerce |
| B.B.A. | Bachelor of Business Administration |
| B.C.A. | Bachelor of Computer Application |
| B.Sc. | Psychology |
| B.A. | Tamil |
| B.A. | English |

தகவல் மற்றும் நேரடி அனுமதி சேர்க்கை மையம்

ASIAN COMPUTER SYSTEMS

2G, Stanley Road, Jaffna. Tel : 021 222 5677

# தெற்கு பக்தாத் பள்ளிவாசல் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல்!

## 25 பேர் சாவு; 90 பேர் காயம்!!

பக்தாத், ஒக்.7

ஈராக் தலைநகர் பக்தாத்திற்கு தெற்கேயுள்ள ஹில்லா என்ற இடத்தில் உள்ள ஷியா முஸ்லிம்களின் பள்ளிவாசலின் நுழைவாயிலில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 25 பேர் உயிரிழந்தனர்; 90 பேர் படுகாயமடைந்தனர்.

தெற்கு பக்தாத்தில் ஹில்லா என்ற இடத்தில் உள்ள அல்-நமா என்ற பள்ளிவாயிலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

புனித ரமழான் மாதத்தின் முதல் நாளான நேற்றுமுன்தினம் நூற்றுக்கணக்கானவர்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தவேளை பள்ளிவாயிலின் நுழைவாயில்வரை கார் ஒன்றில் வந்த தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்தார்.

இக்குண்டுத் தாக்குதல் காரணமாக மசூதியின் பெரும்பகுதி பலத்த சேதமடைந்தது. ரமழானை முன்னிட்டு அங்கு ஏற்படுத்தப்பட்டிருந்த விசேடபந்தல்களும் தூக்கியெறியப்பட்டன. ஹில்லா பகுதியில் பெருமளவு 'ஷியா' முஸ்லிம்கள் வசித்து வரும் பகுதியாகும்.

கடந்தவாரம் பக்தாத்தில் நடந்த தொடர் குண்டுத் தாக்குதல்களில் பெருமளவானோர் உயிரிழந்தனர்; பல நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

ஈராக்கை அமெரிக்கப் படைகள் ஆக்கிரமித்த பின்னர் அமெரிக்கப்படைகளுக்கும் அதன் ஆதரவு சக்திகளுக்கும் எதிராக தீவிரவாதிகள் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

அண்மையில்தான் அல் - குவைதாவின் ஈராக் பிரிவுத் தலைவர் ரமழான் மாதத்தில் அமெரிக்கப் படைகளுக்கெதிரான தாக்குதல்களைத் தீவிரப்படுத்துமாறும் ஈராக்கில் உள்ள 'ஷியா' முஸ்லிம்களுக்கெதிராக அனைத்து வகையான தாக்குதல்களையும் மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்நிலையில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றும் கிழக்கு பக்தாத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார் என அதிகாரிகள் தெரிவித்தனர். (03)

## இந்தியா ஏவுகணை சோதனை

பாலசூர், ஒக்.7

இந்தியா 'திரிசூல்' என்ற குறுந்தூர ஏவுகணையை நேற்றுமுன்தினம் வெற்றிகரமாக சோதனை செய்தது.

இது தரையில் இருந்து வானில் சென்று குறிப்பிட்ட இலக்கைத் தாக்கி அழிக்கக் கூடிய திறன்வாய்ந்தது. ஒரிஸா பாலசூர் என்ற இடத்தில் உள்ள ஏவுதளத்தில் இருந்து வெற்றிகரமாக ஏவப்பட்ட அது ஆளில்லாத விமானம் ஒன்றைத் தாக்கியழித்தது.

- என இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (3)

## நிலக்கரிச்சுரங்க விபத்தில் சீனாவில் 30 பேர் மரணம்!

பிஜீங், ஒக்.7

சீனாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்கள் இரண்டில் ஏற்பட்ட விபத்தில் 30 பேர் உயிரிழந்தனர். பலர் காணாமல் போயுள்ளனர்.

சீனாவில் யாட்சூர் என்ற இடத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் திடீரென நிலக்கரி வாயு வெடித்துச் சிதறியது. 20 பேர் உயிரிழந்தனர். 5 பேர் காணாமல்போயுள்ளனர். இதேபோல், இன்னொரு நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட நிலக்கரி வாயு வெடி விபத்தில் 10பேர் உயிரிழந்தனர். மேலும் சிலர் காணாமற்போயுள்ளனர். நிலக்கரிச் சுரங்கத்தில் காணாமற்போனவர்களைத் தேடி மீட்புப்பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நிலக்கரி உற்பத்தியில் சிறந்து விளங்கும் நாடுகளில் சீனாவும் ஒன்று, அங்கு நிலக்கரிச் சுரங்கங்களில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு ஏராளமான தொழிலாளர்கள் உயிரிப்பதும் வழமை.

கடந்த திங்கட்கிழமை மத்திய சீனாவின் ஹபி நகரில் இடம்பெற்ற நிலக்கரிச் சுரங்க விபத்தில் 34பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

உலக அரங்கில்

## முஷாரப்பைக் கொல்ல முயன்ற 4 பேருக்கு மரண தண்டனை!

இஸ்லாமாபாத், ஒக்.7

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பை கொலைசெய்ய முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் மேலும் நான்கு பேருக்கு பாகிஸ்தான் இராணுவ நீதிமன்றம் மரண தண்டனை வழங்கியுள்ளது.

2003ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பை கொலைசெய்ய இரண்டுமுறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அது தொடர்பாகப் பலர் கைதுசெய்யப்பட்டனர். அந்நாட்டு விமானப்படையைச் சேர்ந்த நான்கு பேரும் கைதுசெய்யப்பட்டவர்களுள் அடங்குவர். அவர்கள் மீது கொலை முயற்சி வழக்கு பதிவுசெய்யப்பட்டது.

பாகிஸ்தான் இராணுவ நீதிமன்றில் கடந்த இரு மாதங்களாக இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது. இவ்வழக்கின் தீர்ப்பு கடந்த திங்களன்று வழங்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட 4 விமானப்படை வீரர்களுக்கும் இராணுவ நீதிமன்றம் மரணதண்டனை வழங்கியது. இத்தகவலை பாகிஸ்தான் விமானப்படை அதிகாரி ஒருவரும் உறுதிப்படுத்தினார்.

இவ்வழக்குத் தொடர்பாக ஏற்கனவே இரண்டு விமானப்படை வீரர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

முஷாரப்பைக் கொல்ல முயன்ற வழக்கில் ஏற்கனவே சிலருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## இந்தியரின் நாவலுக்கு நான்கரைக் கோடி ரூபா விலை!

நியூயோர், ஒக்.7

இந்திய எழுத்தாளர் விக்ரம் சந்திரா எழுதியுள்ள நாவலை நான்கரைக் கோடி ரூபா கொடுத்து வாங்கி வெளியிட முன்வந்துள்ளது அமெரிக்காவின் ஹார்ப்பர் கொலின்ஸ் என்ற பதிப்பகம்.

அந்த எழுத்தாளருக்கும், பதிப்பாளருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சை நெருக்கமாக அறிந்த வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

இது மகத்தான இலக்கியப் படைப்பு என்கிறார் ஹார்ப்பர் கொலின்ஸ் பதிப்பக உரிமையாளர் ஜோனதன் பர்ஹாம். இந்த நாவல் அடுத்த ஆண்டு வெளியிடப்படவுள்ளது.

1,225 பக்கங்களில் எழுதப்பட்டுள்ள மிகப் பெரிய நாவல் இது. 'காட்பாதர்' நாவல் பாணியும், விக்டோரியா மகாராணி காலத்து நாவல் பாணியும் கலந்த கலவை என இந்த நாவல் வர்ணிக்கப்படுகிறது.

இந்த நாவலை எழுதுவதற்கு அவர் 7 ஆண்டுகள் செலவிட்டிருக்கிறார்.

இன்றைய மும்பையின் சட்டவிரோத கும்பல்களின் குற்ற நடவடிக்கைகளே இந்த நாவலின் கரு. அதை மையமாக வைத்துக்கொண்டு மதம், அரசியல், பணம், ஊழல், லட்சியவாதம், குடும்பம், விசுவாசம், துரோகம் முதலியவற்றை நாவல் விவரிக்கிறது.

'ரெட் எர்த் அண்ட் போரின் ரெயின்' 'லவ் அண்ட் லோங்கிங் இன் பாம்பே' ஆகியன விக்ரம் சந்திராவின் ஏனைய வெளிவந்த நாவல்கள் ஆகும். (க)


உங்கள் விமானப் பயணத்திற்கு!

Aero Lanka

In Domestic Operation



New way of flying

Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626

Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600

Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979

Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519

யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு



வாழ்த்துகின்றோம்



07.09.2005 அன்று திருமண வாழ்வில் இணைந்த
திருமதி பரதன் - அருள்வாணி
B.B.A (HONS.)
அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தின்
24 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம்
பெற்றமையை வாழ்த்துவதோடு
சகல வளங்களையும் பெற்று
பல்லாண்டுவாழ வாழ்த்துகின்றோம்.
(40977)

திரு திருமதி சோதிமலர் இராசேந்திரம், சாரங்கன், சங்கர், இ.ரமணன்,
கணபதி கொமினிக்கேசன், இணுவில் தெற்கு.



பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று 07.10.2005 முதுதத்துவமாணிப் பட்டம்
பெறுகின்ற எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி நொயலின் றுக்கறிஸ்ரா
தர்மரெட்ணம்
அவர்களை மனமாரப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.



அதிபர்,ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
யா/புனித சாள்ஸ் ம.வி., யாழ்ப்பாணம்.
(40973)(25-34-13





ஈரவிழிகளுடன்....
ஓராண்டு நினைவலைகள்

அமரர்
திலகவதி குமரவேல்
(முன்னாள் பொது முகாமையாளர்,
சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்)

தோற்றம் 1953.04.17
மறைவு 2004.09.18

திதி: 07.10.2005 (விநாயகர் சதுர்த்தி)

அகிலத்தில் ஆயிரம் ஆயிரம்
உறவுகள் இருந்தாலும் - உங்கள்
அன்புக்கு முன்னால் அவை யாவும் ஈடாகுமா?

'திருவேரகம்'
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.
(40996)(22-34-13)



வாழ்த்துகின்றோம்



திருமதி பரதன் - அருள்வாணி
B.B.A (HONS)
அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தின்
24 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம்
பெற்றமையை வாழ்த்துவதோடு சகல
வளங்களையும் பெற்று வாழ
வாழ்த்துகின்றோம்.
பெற்றோர்:
திரு. திருமதி புவனேஸ்வரி - செல்வரத்தினம் (மன்னார்)
சித்தப்பா சித்தி: செல்வி - விஜயரத்தினம்
சகோதரர்கள்: சிவசங்கர், சிந்து, தாட்சா, லக்சி.
(40976) (25-34-13)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன் சிவலிங்கம் சுபாஸ்கரன் (நிஷாந்தன்)



இன்று (07.10.2005) வெள்ளிக்கிழமை
யாழ்.பல்கலைக்கழகத்தில் வியாபார
நிர்வாகமாணிப் பட்டம் பெறுவதுடன் இவர்
தனது உயர் கல்வியினை லண்டனில்
தொடரவுள்ளார். மென்மேலும் இவர் பல
பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம்
வாழ வேண்டும் என (அப்பா சிவலிங்கம்,
அம்மா நாகேஸ்வரி, சுவிஸில் உள்ள
அத்தான் ஸ்ரீபன், அக்கா சுதர்சினி, தம்பி சுதர்சன், தங்கை
நிஷாந்தி, குட்டி மருமகன் டனீஷ், குட்டி மருமகள் டனிக்ஷா
மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும்)
மனதார வாழ்த்துகின்றோம்.

ஸ்ரேசன் லேன், சாவகச்சேரி. திரு. திருமதி இ.சிவலிங்கம்
T.P.:0773151452 குடும்பத்தினர்.



கண்ணீர் அஞ்சலி

அமரர்
கார்த்திகேசன் செந்தூர்ச்செல்வன்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர்
திரு.கா.கமலநாதன் அவர்களின் சகோதரன்
அமரர் கார்த்திகேசன் செந்தூர்ச்செல்வன்
அவர்களின் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி. (40903)(25) ஆசிரிய சகோதரத்துவம்.

03-10-2005 முதல் 01-11-2005 வரை

தீபாவளி மலிவு விற்பனை
நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும்

SALE SALE SALE SALE

விசேட கழிவு

உடனே விஜயஞ்செய்யுங்கள்:

**லைடன் புடைவை நிலையம்**

இல. 410, ஆஸ்பத்திரி வீதி
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.
☎ 222 2381 (அ/45379) (24-11-32-17)

LUXURY HOUSE WITH ALL MODERN FACILITIES AVILABLE FOR RENT
N.G.Os ONLY

An upstairs' house situated at 44/20,Sangiliyan road, Nallur. adjacent to the Nallur Kandasamy temple in 14 lachams of land with all modern facilities including garage is available for rent.

*Please contact telephone numbers:*
*021 222 9055,*
*0773 - 054974,*
*0779-179919.* (40912)(46-15-17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (07-10-2005) வெள்ளிக் கிழமை யாழ்.பல்கலைக்கழகத் தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் டிப்ளோமா பட்டம் பெறும்

திரு .கிருஷ்ணபிள்ளை குகநாதன்
(தம்பசிட்டி)

அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*நாகபூஷணி இல்லம்,*
*சிறுப்பிட்டி கிழக்கு,*
*நீர்வேலி.*

கி.யோகநாதன்,
யோ.தவமணிதேவி,
யோ.கார்த்தீபன்,
யோ.சங்கவி.

(40968)(26-46-17-15)

## பாராட்டி வாழ்த்துகின்றேன்

*யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறும் எனது சிநேகிதர்களான*

| | |
|---|---|
| பீற்றர் யட்வில்பிரட் | B.B.A. |
| நடராசா மேனகா | B.A. (HONS) |
| நடேசன் குமுதா | B.A. (HONS) |
| தோமஸ் ஆஷா | B.A. (HONS) |
| அந்தோனி கரோலினி | B.A. (HONS) |

*ஆகியோரை மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றேன்.*

நெடுந்தீவு - 11 (40915)(26-46-17-15) ப.ரமேஸ்குமார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி இராஜேந்திரம் ஜறீனா நீத்தா
*(சுண்டிக்குளி - மகளிர் கல்லூரி)*

*2005 க.பொ.த.(உயர்தரப்) பரீட்சையில், கலைப் பிரிவில் 3 A சித்திகளைப் பெற்று, கல்லூரியில் முதல் நிலையிலும் மாவட்டரீதியில் 6ஆம் இடத்தையும் உரித்தாக்கி, கல்லூரிக்கும் எமக்கும் பெருமை தேடித் தந்துள்ளமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகிறோம்.*

வாழ்த்துவோர்-
திரு திருமதி சபாரத்தினம் பிரேமாவதி (பெரியப்பா குடும்பம்)
திரு திருமதி ஜெகந்தன் பிரசன்னா (அக்கா குடும்பம்)
திரு திருமதி புவிதாஸ் கார்த்திகா (அண்ணா குடும்பம்)
திரு சபாரத்தினம் கோபிதாஸ் (அண்ணா)

கச்சாய் வீதி,
கொடிகாமம்.
*(40944)(26-46-17-15)*

SLEAS

**கல்வி நிர்வாகசேவை**
**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

கிரகித்தல் - பேராசிரியர் அ.சண்முகதாஸ்
கல்வி நிர்வாகம் - S. நல்லையா
*முன்னாள் மேல் மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர்*
நுண்ணறிவு - அ.குமாரவேல்

ஆரம்பம் : 08-10-2005 பிற்பகல் 2.30. முன் கூட்டிப் பெயரைப் பதிவு செய்யுங்கள் விவரங்கட்கு:-

**புதிய உயர்கல்லூரி**
*ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.*
*(40921)(26-46-17-15)*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*06-10-2005 வியாழக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் B.A.(HONS) (GEO) பட்டம்பெற்ற*

திரு சங்கரராஜசர்மா இராஜராஜேஸ்ரன் (ஈசன்)
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

12,விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை, (40960)(26-46-17-15)

ந.வீரசிங்கம்குடும்பம்,
சி.சிவலிங்கம்குடும்பம்..

## விளையாட்டு விழா

குடத்தானை,ஒக்.7

பருத்தித்துறை பிரதேச அல்வாய் கொத்தணி முன்பள்ளிகளின் விளையாட்டுவிழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அல்வாய் நக்கிரன் விளையாட்டு மைதானத்தில் குடும்ப முன்பள்ளித் தலைவர் அ.அகிலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி ஆசிரியர் சங்க ஆலோசகர் எஸ்.திருச்செல்வம் பிரதம விருந்தினராகவும், யாழ். மாவட்ட சுனாமி செயலக முன்பள்ளி திட்ட இணைப்பாளர் எஸ். கிருஸ்ணசிங்கம், வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் துரை சத்தியசீலன், பருத்தித்துறை முன்பள்ளிச் சங்கத் தலைவர் ரி.சிவச்செல்வம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த விளையாட்டு விழாவில் அல்வாய் கொத்தணியின் 7 முன்பள்ளிகள் கலந்து கொள்ளவுள்ளன. (ஒ-78)

## சம்பள நிலுவை பற்றி கலந்துரையாடல்

1990 - 1995 காலப்பகுதியில் தொலைக் கல்வி மூலம் ஆசிரிய பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் பயிலுநர் காலப்பகுதிக்கான சம்பள நிலுவை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 9ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இலங்கை தொலைக்கல்வி ஆசிரியர் சங்கத் தலைவர் தி.ரவீந்திரராஜா தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ப- 2002)

## பட்டமளிப்பு விழா வாழ்த்துகள்



திரு. தங்கராசா
கோபாலகிருஷ்ணன்
B.A. Dip. in EDu.
(Merit)

*எமது பாடசாலை ஆசிரியர்*

**திரு.த.கோபால கிருஷ்ணன்**

*அவர்கள் இன்று (07-10-2005) வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பட்டத்தைப் பெறுகின்றார். இவர் பட்டங்கள் பல பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.*

**வாழ்த்துவோர்:** அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.
(40962) (26-15-17-30) யா/வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம் புத்தூர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. பரராமசிங்கம் கண்ணன்
(MBBS)



யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று (07-10-2005) நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில் மருத்துமாணிப் பட்டம் பெறுகின்ற கண்ணன் அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.

*175/3,ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பெற்றோர், உறவினர்,
நண்பர்கள்.
(அ/45473)(26-15-17)

**பணியாளர் தேவை**

*எமது நிறுவனத்திற்கு நிலையப் பொறுப்பாளர் இருவர் தேவை. சம்பளமும் மேலதிகக் கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதுடன், மனையியல் பயிற்சிகள் யாவும் இலவசமாக வழங்கப்படும்.*

09-10-2005 } காலை 10 மணிக்கு
10-10-2005 } நேரில் வரவும்.

இயக்குநர் தூரிகை - செங்குந்தா வீதி,
கல்வியங்காடு.
*(40967)(26-15-17)*

*அலுவலக உதவியாளர்*
PEON உடன் தேவை

வயது : 30-45
சம்பளம் : 4000 - 5000/=
இன்றும், நாளையும் நேரில் வரவும்.

*SAAMSTECH*

841, Hospital RD,
Jaffna
021 4591571
*(40959)(26-46-17-15)*

233/4, Kasthuriyar RD,
Jaffna, 077 -9575889

## பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு
சிவகுரு
இளங்கோ



திருமதி
சாந்தினி
இராமச்சந்திரன்

யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று (07-10-2005) வெள்ளிக்கிழமை நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE) பட்டம் பெறுகின்ற எமது பாடசாலை ஆசிரியர்களை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகிறோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
*(40943)(26-15-17)* யா/உயரப்புலம் மெ.மி.த.க.வித்தியாலயம், ஆனைக்கோட்டை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

*06-10-2005 அன்று யாழ். பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்ற எமது கல்வி நிறுவனத்தின் தமிழ் ஆசிரியர்*

**பொன்னம்பலம் கேதீஸ்வரன்**

B.A. (Hons) தமிழ் சிறப்புக்கலை

*அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

*இயக்குநர்*
ஆசிரியர்கள்,
குருபரன் கல்வி நிறுவனம், புத்தூர்.

(40961)(26-15-17-30)

**Visitalk.net (விசிற்ரோக் நெற்)**

315A , பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.
T.P.: 222 6637, 222 7387

**American Lottery Visa**

*அமெரிக்காவிற்குச் சென்று வாழும்*
*உங்கள் கனவு நனவாக!*

லொத்தர் முறையில் தெரிவாகும் அதிர்ஷ்டசாலிகளுள் நீங்களும் ஒருவராக இருக்கலாம். எனவே, இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள். சென்ற முறை விண்ணப்பித்தோரில் வெற்றி பெற்றவர்களில் அநேகமானோர் எமது நிறுவனத்தினூடாக அனுப்பியவர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம். உடனடியாக எம்முடன் தொடர்பு கொண்டு நீங்களும் அதிர்ஷ்டசாலிகள் ஆகலாம்.

(40903)(46-15-17)

வணிக முகாமைத்துவ
பட்டப்படிப்புகள் கல்லூரி
DCM

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

*யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புகள்*

G.A.Q. } 2005/2006
1st COM. }

| | | | |
|---|---|---|---|
| B.COM. | PART I | B.C. | PART II |
| B.A. | PART I | B.C. | FINAL |

ஆரம்பம்: *08.10.2005*
சனி *7.00* A.M. ப.நே. (அ-45476)(26-30-15-17)

இயக்குநர்,
S.வரதராஜன், DCM.



*பாராட்டி வாழ்த்துகின்றோம்*

அமிர்தலிங்கம் வத்சலன் B.Sc

*யாழ்.பல்கலைக்கழகப்பட்டமளிப்பு விழாவில் இன்று (07-10-2005) விஞ்ஞான மாணி B.Sc பட்டம் பெறும் அ.வத்சலன் மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.*

145/3, பிரப்பங்குளம் றோட்,
யாழ்ப்பாணம். (40966)(26-15-18)

தெட்சணாமூர்த்தி ஜெகதாம்பிகை,
நிஷாகரன், நிஷாந்தன்.

**விசேட தீபாவளி சலுகை**

எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு! இதுவரை எம்மால் வழங்கப்பட்ட சலுகைகளை விட தமிழர் திருநாளாம் தீபாவளி திருநாளுக்கான 1/2 கிலோவிலிருந்து எத்தனை கிலோவானாலும் புதிய சலுகைகள்!

நாடளாவிய ரீதியில் பொதிகளின் கட்டணம் உயர்வுற்றாலும் எமது சேவை வாடிக்கையாளர்களுக்காக தொடரும்.

- குறைந்த கட்டணம்
- குறுகிய கால விநியோகம்
- உங்கள் உறவுகளின் கைகளுக்கு உடனடியாக

லண்டனுக்கான 5kg பொதிகளுக்கு 1kg ரூபா 500/- மட்டுமே

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993

## ஈ.பி.டி.பி. ஆதரவாளர் பாலையூற்றில் நேற்றுச்சுட்டுக் கொலை!

திருகோணமலை, பாலையூற்றில் ஈ.பி.டி.பி. அமைப்பின் ஆதரவாளர் ஒருவர் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவர் கிங்ஸ்லி வீரரத்ன என்ற 34 வயதான குடும்பஸ்தர் என்று அடையாளம் காணப்பட்டார். விற்பனைக்காகத் தினமுரசுப் பத்திரிகை எடுத்துச்சென்ற சமயம் இவர் சுடப்பட்டார். மோட்டார் சைக்கிளிலில் வந்த இனந்தெரியாத இரு இளைஞர்கள் இவரைச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்று விட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். அவரது சடலம் விசாரணைகளுக்காக திருகோணமலை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட் டுள்ளது. (எ-க)


### வாழ்த்துகின்றோம்



இன்று (07.10.2005) வெள்ளிக்கிழமை
யாழ். பல்கலைக்கழகத்தில்
விஞ்ஞானமாணி பட்டத்தினைப் பெறும்
**அந்தோனிப்பிள்ளை**
**றொயிஸ்ரன் மனோஜ்**
அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.
அவர் மேலும் பல பட்டங்களைப்
பெற்றுச் சிறப்புடன் வாழ
ஆண்டவன் துணைபுரிய
வேண்டுகின்றோம்.

யாழ்ப்பாணம். (40954)(12.34.25) **உயிர்நண்பர்கள்.**

### பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது கல்லூரி ஆசிரியர்களான
**திரு.கா.சசிகரன்**
(கல்வி முதுமாணிப் பட்டம் (M.Ed.))
**திரு.மா.மகேந்திரன்**
(பட்டப் பின் கல்வி டிப்ளோமா (Dip.in.Ed.))
ஆகிய இருவரும் இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதோடு, அவர்களை உளமார வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
(40991)(12.16.34.25) அருனோதயாக் கல்லூரி, அளவெட்டி.

### பாராட்டி வாழ்த்துகிறோம்



**மேகநாதன் ஜெயந்திரபாலா**
யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று
(07.10.2005)வெள்ளிக்கிழமை
விஞ்ஞானமாணி(B.Sc.) பட்டம் பெறும்
இவரை மேலும் பல பட்டங்கள் பெற
வாழ்த்துகின்றோம்.

*கல்வயல் வீதி,*
*சாவகச்சேரி.* (சி-45486)(12.34.25.16)
வாழ்த்துபவர்:
மாமனார் வ.நவரத்தினம்.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடக்கு - கிழக்கு கல்வி அமைச்சினால் நல்லாசிரியர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட எமது கல்லூரி நடன ஆசிரியை திருமதி நந்தினி சிவராஜன் அவர்களையும், யாழ்.பல்கலைக் கழக 2005ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் பட்டமளித்துக் கௌரவிக்கப்படும் ஆசிரியர்களான

1. *திருமதி கலைவாணி மகாலிங்கசிவம் (பட்டப் பின் கல்வி டிப்ளோமா)*
2. *செல்வி சாளினி சௌந்தரநாயகம் (பட்டப் பின் கல்வி டிப்ளோமா)*
3. *செல்வி மாலினி இராஜலிங்கம்* (B.Sc.)
4. *செல்வி சிவராதிகா கதிரவேல்* (B.Sc.)
5. *திருமதி பிறேமினி இரட்ணகாந்தன்* (B.A.)

*ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

(40983)(12.34.25.34) யா/இராமநாதன் கல்லூரிச் சமூகம்

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்றுநடைபெறும் யாழ். பல்கலைக்கழக
பட்டமளிப்பு விழாவில் வியாபார
முகாமைத்துவமாணி (B.B.A.) பட்டம் பெறும்
**சத்தியநேசன்**
**நிலோஜன்**
அவர்கள் மேலும் பட்டங்கள் பலபெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*மானிப்பாய் வீதி,*
*உரும்பிராய்.* (40984)(12341625)
**லோறன்ஸ் சித்தப்பா,**
**சித்தி குடும்பத்தினர்.**

### உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்



இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில்
நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில்
வர்த்தக முகாமைத்துவம் (B.B.M.)பட்டம் பெறும்
**செல்வி மனோகௌரி கந்தையா**
அவர்கள் இறையருளால் மென்மேலும்
சிறப்புகள் பலபெற்று மகிழ்ச்சியுடன்
வாழ்கவென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி-45486)(12.34.25)
**சக பணியாளர்கள்**
**லக்ஸ்மி ஏஜென்சி.**
021-2227167


## லெப்.மாலதி நினைவாக இரத்ததானம்

அச்சுவேலி,ஒக்.7

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது பெண் மாவீரர் 2ஆம் லெப்டினன்ட் மாலதியின் 18 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நீர்வேலி இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நீர்வேலி இந்து இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்வில் கலந்து இரத்ததானம் வழங்குமாறு கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினர் இளைஞர் யுவதிகளுக்கும் பொதுமக்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-11)

## சிறப்புற நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.7

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் நேற்று விசேட நிகழ்வுகள் நடைபெற்றன.

அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களினாலும் பெற்றோர்களினாலும் பழையமாணவர்கள் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினாலும் கௌரவிக்கப்பட்டனர்.

ஆசிரியர் தினத்தையொட்டி அனேகமான பாடசாலைகளில் கலைநிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. (எ-12)


### வாழ்த்தி மகிழ்கின்றோம்

எமது பாடசாலையின் முன்னாள் துணைமுதல்வரும் சைவப்புலவருமாகிய திருவாளர் வல்லிபுரம் கந்தசாமி அவர்கள் கலாநிதிப் பட்டம் பெற்றதையிட்டு பேருவகையுடன் வாழ்த்தி மகிழ்கின்றோம். (40995)

பாடசாலைக் குழுமம்,
யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.

**ராஜா**
*இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு*
*சூர்யா, அசின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த*
**கஜினி**
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30.
*(ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்)*

**நாதன்ஸ் சினிமா**
சரத்குமார், வைகைப்புயல்
வடிவேலு, நமீதா நடித்த
**சாணக்யா**
காட்சிநேரம்:- பு.நே. 2.30 6.30, 9.30.

**மனோகரா** யாழ்ப்பாணம்
பார்த்திபன், வடிவேல், லட்சுமிராய் நடித்த
**குண்டக மண்டக...**
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30.
(சி-44110)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்
*இலங்கையிலும் இந்தியாவிலும்*
*ஒரேதின வெளியீடு*
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த
**மழை**
காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00, 9.30.

### மரண அறிவித்தல்

***கனகரெட்ணம் சுரேஸ்குமார் (சுரேஸ்)***



கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் பூநகரியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரெட்ணம் சுரேஸ்குமார் (சுரேஸ்) அவர்கள் நேற்று (06.10.2005) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு கச்சாய் வாகையடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, இன்று(07.10.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அல்லாரை சொற்புலவு கொடிகாமம் இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:விஜயன்-சகோதரன் (ஆட்டோ)
24,மணிக்கூண்டுவீதி,பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.

பிரசாத்-சகோதரன்(ஆட்டோ)
கச்சாய்,கொடிகாமம்.
*வாகையடி,கச்சாய்.* (41004)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கிருஷ்ணபிள்ளை பிரசாந்தன்**
இன்று (07.10.2005)
வெள்ளிக்கிழமை
யாழ்.பல்கலைக்கழகத்தில்
நடைபெறும் பட்டமளிப்பு விழாவில்
முகாமைத்துவமாணி பட்டம் பெறும்
இவரை மேலும் பல பட்டங்கள் பெற
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அரியாலை **செல்வரத்தினம் மாமா குடும்பத்தினர்.**

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று பட்டம் பெறும்
**பாலசிங்கம் பார்த்தீபன்**
(B.B.A (H.R.M.)Spe.)
அவர்கள் மேலும் பல உயர்வுகள்
பெறவேண்டும் என வாழ்த்தி
ஆனைக்கோட்டை கரைப்பிரான்
பிள்ளையாரை வேண்டுகின்றோம்

(40985)(12.25.34) **மாமன்மார்கள்.**

### சிறப்புடன் வாழி! வாழி!!



யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று
நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில்
வர்த்தக முகாமைத்துவம்(B.B.M.) பட்டம் பெறும்
**செல்வி மனோகௌரி கந்தையா** அவர்களை
உளமார வாழ்த்துவதுடன் மேன்மேலும்
பல சிறப்புக்களைப் பெற்று உயர்வடைய
எல்லாம் வல்ல இறைவனை
இறைஞ்சுகின்றோம்.

*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (சி-45485)(12.25.34) குடும்பத்தினர்.

### பட்டமளிப்பு விழா வாழ்த்துக்கள்



**செல்வி கு.கோமளா** (B.Com.)
நேற்று (06.10.2005) வியாழக்கிழமை
யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில்
வணிகமாணிப் பட்டம் பெற்ற இவரை மேலும்
பல பட்டங்கள் பெற வாழ்த்துகின்றோம்.
*வாழ்த்துவோர்:* Mr.Mrs. தனபாலசிங்கம் குடும்பம்,
Mr.Mrs.சுப்பிரமணியம்குடும்பம்,
Mr.Mrs.கருணதாஸ் குடும்பம்.

*பத்தமேனி,*
*அச்சுவேலி.* (41000)

### பாராட்டி வாழ்த்துகிறோம்



சாந்தலிங்கம்
சயந்தன்
B.B.A.(Hons)



சாந்தலிங்கம்
சுதர்சன்
B.B.A.(Hons)

சீர் பெறு சயந்தா சுதனே நீங்கள்
பேர் பெறு உங்கள் வாழ்வில்
பெட்புறு பட்டம் பெற்றீரதனை
பெருமையாய் வாழ்த்துகின்றோம்

செல்வரத்தினம் இராசேஸ்வரி
தேவி கொம்யூனிக்கேசன்,
கொழும்புத்துறை.
தேசிங்கராசா யோகேஸ்வரி
(40999)(12.34.25) குடும்பத்தினர்.

### நேற்றுப் போல நெடிய ஏழாண்டு நினைவஞ்சலி

*மண்ணில்*
*08 . 01 . 1935*



*விண்ணில்*
*07 . 10 . 1998*

**அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை**
(Retired Police Inspector)

*ஏழாண்டு மறைந்ததே எம் முழு நிலவு மறைந்து*
*அமாவாசையாகியதே எம் சந்தோஷங்கள் குறைந்து*
*காலன் தன் கடமையை முடித்துக் கொண்டான் உங்களை எடுத்து*
*காலமெல்லாம் கண்ணீரில் மிதக்கின்றோம் உங்களைப் பிரிந்து*
*மறுபடியும் பிறந்திடுங்கள் எங்களுடனே?*

என்றும் நீங்காத நினைவுகளுடன்:
நிரந்தர முகவரி: அன்பு மனைவி (ராஜேஸ்வரி),
*நுணாவில்,* அன்புப் பிள்ளைகள் (செல்வமேனன், செல்வரமேஸ்),
*சாவகச்சேரி.* மருமகள் (சுகிர்தா), பேர்த்திமார் (திசானா, அபினா). UK

(40987)

### கண்ணீர்க் காணிக்கைகள்



கீரிமலை நகுலேஸ்வரா வீதியைச் சொந்த
இடமாகவும் கனடாவை
வதிவிடமாகவும் கொண்ட
சுப்பிரமணியம் தியாகலிங்கம் (குட்டி)
அவர்கள் 03.10.2005 அன்று கனடாவில்
காலமானதையிட்டு ஆழ்ந்த கவலை அடைவதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

*சங்கானை கிழக்கு,*
*தொட்டிலடி.* கு.சயந்தன், கு.முகுந்தன் (பெறாமக்கள்).

# புறூவ் ஹொவ்டே, இயன் மார்ட்டின் இருவரும் அடுத்தவாரம் இங்கு வருகை

கொழும்பு,ஒக்.7

போர்நிறுத்தத்துக்கு வழிசெய்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவது பற்றிய பேச்சுகளை நடத்தவும், மனித உரிமை மீறல்களை தடுப்பது குறித்து ஆராயவும் இருவேறு பிரதிநிதிகள் அடுத்தவாரம் இலங்கைக்கு வரவுள்ளனர் என அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதார அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா நேற்று அறிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோது இதனை அறிவித்த அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது:-

போர்நிறுத்த ஒப்பந்தத்தை முறையாக நடைமுறைப் படுத்துவது குறித்து ஆராய்வதற்கும், அதுபற்றிப் பேசுவதற்கும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவர் ஜெனரல் ட்ரொண்ட் புறூவ் ஹொவ்டேயும், இலங்யையில் மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்துவது பற்றி ஆராய்வதற்கு இயன் மார்ட்டினும் அடுத்த வாரம் வரவுள்ளனர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை முறையாக அமுல் படுத்துவது பற்றி புறூவ் ஹொவ்டே அரசுடனும், புலிகளுடனும் பேச்சுகளை நடத்துவார். இதுகுறித்தான பேச்சுகளுக்கு அரசு எப்போதும் தயராகவே இருக்கிறது. அதேபோல் மனித உரிமை ஆர்வலரான இயன் மார்ட்டினும் அடுத்தவாரம் இலங்கை வந்து மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசு, புலிகள் மற்றும் இதர மனித உரிமைகள் அமைப்புகளுடன் பேச்சு நடத்தவுள்ளார்.

ஏற்கனவே, 2002ஆம் ஆண்டில் இவர் இலங்கை வந்து இதுபற்றி ஆராயவிருந்த போதும் விடுதலைப் புலிகளின் அக்கறையின்மை காரணமாக அது கைகூடவில்லை. ஆனாலும், இம்முறை புலிகள் அவரை வரவேற்பார்களென எதிர்ப்பார்க்கிறோம். - இவ்வாறு அமைச்சர் மேலும் கூறினார். (எ-க)

# ஹர்த்தாலினால் 2ஆவது நாளாகவும் கல்முனை நகரம் வெறிச்சோடியது

**நோன்புப் பொருள்கள் வாங்க முடியாது மக்கள் சிரமம்**

கல்முனைக்குடி,ஒக்.7

கல்முனையில் கடந்த புதன்கிழமை முஸ்லிம்கள் இருவர் இனந்தெரியாதோரால் சுடப்பட்டதில் ஒருவர் உயிரிழந்ததையும், ஒருவர் காயமடைந்ததையும் தொடர்ந்து பதற்ற நிலை இன்னும் தணியவில்லை. கல்முனை நகரம் இரண்டாவது நாளாக நேற்றும் வெறிச் சோடிக் காணப்பட்டது.

மாளிகைக்காடு, சாய்ந்தமருது, கல்முனைக்குடி, கல்முனை ஆகிய இடங்களிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டிருந்தன.

நகரிலுள்ள அரச தனியார் வங்கிகள் மற்றும் அரசாங்க திணைக்கள கூட்டுத்தாபனங்கள் மூடப்பட்டிருந்தன. தமிழ் பாடசாலைகள் கூட மூடப்பட்டிருந்தன. கல்முனைப் பொதுச்சந்தை இரண்டாவது நாளாக இயங்காத காரணத்தினால் முதல் நோன்பிற்கான பொருட்களை கொள்வனவு செய்ய முடியாமல் மக்கள் திண்டாடினார்கள்.

நகரின் கேந்திர நிலையங்களில் விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் காவல் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். தமிழ் - முஸ்லிம் எல்லைப் பிரதேசங்களில் உள்ள மக்களில் சிலர் அச்சம் காரணமாக இடம் பெயர்ந்துள்ளனர்.

கல்முனைச் சம்பவத்தைக் கண்டித்து நேற்று வியாழக்கிழமை பூரண துக்கம் அனுஷ்டிக்க வேண்டும் என தேசிய காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஏ. எல். எம். அதாவுல்லாவும் கேட்டிருந்தார்.

இதேவேளை, இச் சம்பவத்தைக் கண்டித்து மூன்றாவது நாளாக இன்று வெள்ளிக்கிழமையும் கல்முனைப் பிரதேசத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஜும் ஆ தொழுகையின் பின்னர் மரணித்தவருக்காக ஜனாஸாத் தொழுகை நடத்துமாறும் விசேட 'துஆ 'பிரார்த்தகையில் ஈடுபடுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (எ-க)

## பட்டமளிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பேராசிரியர்கள், பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், கௌரவப் பட்டம் பெறுவோர் கைலாச பதி கலையரங்கிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து முதலாம் அமர்வு ஆரம்பமானது.

முதல் அமர்வில் சைவபூசணம் வல்லிபுரம் கந்தசாமிக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

இரண்டாம் அமர்வில் முல்லைமணி வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்திற்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

ஐந்தாம் அமர்வில் அமரர் கணபதிப்பிள்ளை சிவராமலிங்கம்பிள்ளைக்கு தேகாந்த நிலையில் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது.

பட்டமளிப்பின் இரண்டாம் நாளான இன்று மூவர் கலாநிதிப் பட்டம் பெறவுள்ளனர். (எ-12)

## வாழைச்சேனையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டொன்று வீசப்பட்டிருக்கிறது. ஆனாலும், இலக்குத் தவறிய அந்தக் குண்டு பொது இடமொன்றில் வீழ்ந்ததால் மேற்படி பதினொரு பேரும் படுகாயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையிலுள்ள ஐந்துபேர் மட்டக்களப்பு வைத்தியசாலையிலும், ஏனையோர் வாழைச்சேனை வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

வாழைச்சேனைப் பிரதான வீதியில் அமைந்துள்ள வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கு முன்பாக இரண்டாவது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிற்பகல் 2.50 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனைக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான வாகன சுத்திகரிப்பு நிலையத்தில் தமது ஜீப் வண்டியை ஒப்படைத்த இராணுவத்தினர், வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது இனம் தெரியாத வாலிபர் ஒருவர் இராணுவத்தினர் மீது கைக்குண்டொன்றை வீசிவிட்டுத் தப்பிச்சென்றார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தின்போது எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

வாழைச்சேனைப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற இரண்டு வெவ்வேறான கைக்குண்டுத் தாக்குதல் சம்பவங்களினால் இப்பிரதேசத்தில் பதற்றம் நிலவியது. பொதுச் சந்தை, கடைகள் என்பன நேர காலத்துடனேயே மூடப்பட்டதுடன் வீதிகள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

பொலிஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக இணைந்து பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இச்சம்பவங்கள் குறித்து வாழைச்சேனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-க)

# ஜனாதிபதித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் ஒரு மணிவரை ஜயவர்த்தன புர மாவத்தை மற்றும் பழைய கோட்டை வீதி முற்றாக மூடப்பட்டிருக்கும்.

இதனால் அவ்வேளையில் மாற்று போக்குவரத்து வழிகளைப் பயன்படுத்தும்படி பொலீஸ் தலைமையகம் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்குறிப்பிட்ட வீதிகள் வழியாகக் கொழும்பு நோக்கிவரும் வாகனங்களும், கொழும்பில் இருந்து பத்தரமுல்லை நோக்கிச் செல்லும் வாகனங்களும் கீழ்குறிப்பிட்ட மாற்று வழிகளை பயன்படுத்தும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

✱ கண்டி, அவிசாவளைப் பகுதியில் இருந்து வரும் வாகனங்கள் கடுவலை பழைய வீதி வழியாக உறுகொடவத்தை ஊடாக கொழும்பு செல்ல முடியும்.

✱ ஹைலெவல் வீதிவழியாக வரும் வாகனங்கள் கொடகம, ஹோமாகம, மகரகம ஆகிய வீதிகளைப் பயன்படுத்தலாம்.

✱ பன்னிப்பிட்டியவிலிருந்து வரும் வாகனங்கள் தலவத்து கொட சந்தியில் இருந்து கிம்புலாகல, கோட்டை, மாகொட பாதைகளைப் பயன்படுத்தலாம்.

✱ புத்கம ஊடாக ராஜகிரிய செல்லும் வாகனங்கள் ஐ.டி.எச்.சந்தி ஊடாகச் செல்ல முடியும்.

✱ பொரள்ளையில் இருந்து பழைய கோட்டை வழியாகச் செல்லும் வாகனங்கள் தெமட்டகொடை, கொலன்னாவ மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்தமுடியும்.

✱ ஸ்ரீ ஜயவர்தன புர வழியாக பத்தரமுல்லைக்குச் செல்லும் வாகனங்கள் நாரஹன்பிட்டிய, நாவல வீதி, நுகேகொடை மாற்றுப் பாதையைப் பயன்படுத்தலாம்.

✱ இராஜகிரியவில் நிரந்தரமாக வசிப்பவர்கள், பொது போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்துபவர்கள் போன்றோர் காலை எட்டு மணிக்குமுன் பழைய கோட்டை வீதிச் சந்தியில் இருந்து தமது பயணங்களை மேற்கொள்ளும்படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

✱ நாவலையில் இருந்து வரும் வாகனங்கள் கொஸ்வத்த சந்தி ஊடாக குரே மாவத்த வழியாகப் பத்தரமுல்லைக்குச் செல்லமுடியும்.

✱ ராஜகிரிய, அத்துல்கோட்டே, பத்தரமுல்ல ஆகிய இடங்களில் இருந்துவரும் வாகனங்கள் அத்துல்கோட்டே குலுன சந்தி, நுகேகொடை ஊடாக கொழும்பு செல்ல முடியும்.

-இவ்வாறு பொலிஸ் தலைமைச் செயலகத்தின் குற்றத்தடுப்புப் பிரிவு மற்றும் மக்கள் தொடர்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகர் ரியன்ஸி பெரேரா அறிவித்துள்ளார். (எ-க)

## சர்ச்சைக்குரியவரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரஊப் ஹக்கீமின் கொள்ளுப்பிட்டி இல்லத்திற்கு சென்ற குமாரி குரே, ரஊப் ஹக்கீமை சந்திப்பதற்கு அனுமதி கோரியிருக்கிறார். ஆனாலும், வாசலில் நின்ற காவலர்கள் அதற்கு இடமளிக்காத காரணத்தினால் குமாரி குரே ஆத்திரத்துடன் அங்கிருந்து வெளியேறியிருக்கிறார் எனத் தெரிகிறது.

பின்னர் அதிகாலை மூன்று மணியளவில் காவலர்களுக்குத் தெரியாமல் வீட்டின் வெளிமதில் மேலாக உள்ளே பாய்ந்த குமாரி குரே, அங்கு வைத்துத் தனது கையிலிருந்த பெற்றோலை ஊற்றி தனக்குத் தானே தீ வைத்துக் கொண்டாரெனக் கூறப்படுகிறது.

இதுகுறித்துக் கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடம் முறையிட்டதையடுத்து அவர்கள் குமாரி குரேயை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

உடம்பில் சுமார் எண்பது வீதம் தீயில் கருகிப்போக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுவந்த குரே நேற்று மாலை உயிரிழந்தார்.

இரண்டு பிள்ளைகளின் தயாரான குமாரி குரே பிரபல அரசியல்வாதியான மேர்வின் ஜே.குரேவின் புதல்வியாவார். மேர்வின் ஜே. குரே முன்னாள் ஜே.ஆர். ஜயவர்த்தனவின் அரசில் பிரதியமைச்சராகப் பதவிவகித்தவராவார். இந்த விவகாரம் குறித்து கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-க)

## வன்முறையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்லா. அவர் மேலும் கூறியதாவது:-

வன்முறைகளை உடனடியாக நிறுத்துமாறும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை செம்மையாகக் கடைப்பிடிக்குமாறும் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக நாம் புலிகளுக்கு அறிவித்துவிட்டோம். இது பற்றி நோர்வே தூதுவர் புலிகளுக்கு அறிவுறுத்தியிருப்பார்.

இந்த விடயங்கள் குறித்தான பேச்சுகளுக்கு நல்லெண்ணத்துடனும், திறந்த மனதுடனும் எப்போதும் நாம் தயாராகவே இருக்கிறோம்.

- இவ்வாறு அமைச்சர் மேலும் கூறினார். (எ-க)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவைச் சொந்த இடமாகக் கொண்டவரும் திருமலை சிங்கவீதியைச் சேர்ந்தவருமான தேவதாஸ் என்ற நபரே காயமடைந்த பொதுமகனாவார். இவர் துப்பாகிச் சூட்டுக் காயங்களுடன் திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடல் முக வீதியில் கடமையில் இருந்த இராணுவத்தினர் மீதே கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரு குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. இதையடுத்து அருகிலிருந்த கடற்படையினர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததி லேயே பொதுமகனும் மற்றொரு கடற்படைச் சிப்பாயும் காயமடைந்தனர். (எ-க-12)

## வெள்ளவத்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழமையாக காலை 7.30 மணிக்கே அலுவலகத்திற்குப் புறப்பட்டு விடும் ஜெயராஜ், நேற்றுச் சாரதி வரத் தாமதித்த காரணத்தினால் சற்றுத் தாமத்தித்துப் புறப்படவிருந்தார். அதனால், அவர் தப்பினார் எனக் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் எஸ். விஜயகாந்த் என்ற சாரதியும், நெல்சன் பிளேஸ் வழியாகச் சென்றுகொண்டிருந்த மீன் வியாபாரி ஒருவரும் காயமடைந்தனர்.

குறிப்பிட்ட வான் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியிலிருந்து அந்த இடத்தில் தரித்துவிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேரம் கணித்து வெடிக்கும் குண்டே இந்த வானில் பொருத்தப்பட்டிருந்தமை ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. வெள்ளவத்தைப் பொலிஸாரும், கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸாரும் இவ்விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-க)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி சிவபாதம்

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சிவபாதம் அவர்கள் நேற்று (06.10.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சிவபாதத்தின் அன்பு மனைவியும் அமரர் ஜெயச்சந்திரன், ரவீந்திரன் (கிராமசேவையாளர், கைதடி), ஞானேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி செந்தில்மணி, திருமதி மல்லிகாதேவி (ஆசிரியை, கட்டுவன்புலன் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிருபன், சுதர்ஜினி, கஜவாணி, கஜர்னிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.10.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விலங்கன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(41006)(12-34-16)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.

தகவல்: பிள்ளைகள்.




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.